விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 22 வெள்ளிக்கிழமை (04.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 137

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO


# சம்பந்தன் சிங்கக் கொடி தூக்கியதற்கு பகிரங்க மன்னிப்புக் கேட்டார் மாவை



*(யாழ்ப்பாணம்),* மே தினக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சிங்கக் கொடியை அசைத்து தமிழ் மக்களின் மனங்களில் வெறுப்பை ஏற்படுத்தியதற்கு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கின்றேன்.

தேசியக் கொடியை அசைக்கும் நிகழ்வு நிகழ்ச்சி நிரலில் இல்லை எனவும் அது திணிக்கப்பட்ட ஒன்றே எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். *(24ஆம் பக்கம் பார்க்க)*


## ஜப்பானிய பிரதிப் பிரதமர் நாளை வேலணைக்கு வருகை



(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜப்பான் பிரதிப் பிரதமர் கட்சுயா ஒகடா இன்று வெள்ளிக்கிழமை இலங்கைக்கு *(24ஆம் பக்கம் பார்க்க)*

## தேசியக் கொடியை சம்பந்தன் ஏந்தியது ஒரு புரட்சிகர மாற்றம் -திஸ்ஸ விதாரண



தேசியக் கொடியை ஏந்தி நிலையான அரசியல் தீர்வுக்குத் தயார் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் அறிவிப்பு ஒரு புரட்சிகர மாற்றம் எனவும், இதனை அரசாங்கம் வரவேற்க வேண்டும் எனவும் மூத்த அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான பொது எதிர்க் கட்சிகளின் மே தினக் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தேசியக் கொடியை ஏந்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் நிலையான அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாரென அறிவித்திருந்தார்.

இந்நிலையில், சம்பந்தனின் இக்கருத்துக் குறித்து விஞ்ஞான தொழில்நுட்பத் துறை அமைச்சரும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சர்வ கட்சிக் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசியக் கொடியை கையிலேந்தி அசைக்கும் நாடாளுமன்ற *(24ஆம் பக்கம் பார்க்க)*

## பால் மாவுக்கான வரி அதிகரிப்பு

(கொழும்பு)

குழந்தைகளுக்கான பால்மா தவிர்ந்த ஏனைய இறக்குமதி செய்யப்படும் பால்மாகளுக்கு 15 வீத வரி அல்லது 92 ரூபாயினை அதிகரிக்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குழந்தைகளுக்கான பால்மா தவிர்ந்த ஏனைய பால்மாக்களின் விலைகள் விரைவில் அதிகரிக்கும். (ந-8-11)

## இரட்டைக் குடியுரிமை பெற்றவர் அரசியலில் ஈடுபடத் தடை!

(கொழும்பு)

இரண்டு நாடுகளில் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் அரசியலில் ஈடுபடுவது தடைசெய்யப்படவுள்ளது. இதற்காக குடிவரவு குடியகல்வு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் இலங்கை வர விசா அனுமதி தேவையில்லை என்ற போதிலும் இலங்கையில் அரசியலில் ஈடுபட முடியாதவாறு சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் பிரதேச சபை, மாகாண சபை, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தலில் *(24ஆம் பக்கம் பார்க்க)*

## இந். நாடாளுமன்ற குழு மன்மோகனுடன் சந்திப்பு

இலங்கையில் போருக்கு பிந்திய தமிழர்களின் நிலை குறித்து நேரில் கண்டறிவதற்காக சென்றிருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவுடன் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பை இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இன்று பிற்போட்டுள்ளார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட இந்திய நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொள்வதாக இருந்தது.

ஆனால் காரணம் குறிப்பிடப்படாமல், இந் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது. இன்று காலை நடைபெறவுள்ள இச் சந்திப்பின் போது, இலங்கையில் தமிழர்களின் நிலை தொடர்பாக இலங்கை சென்று திரும்பிய இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய பிரதமரிடம் எடுத்துக் கூறுவர் என்றும் புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-8-11)

## பிக்கப் வாகனம் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் பிக்கப் வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் *(24ஆம் பக்கம் பார்க்க)*

## 4 அமைச்சர்களுக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் மூன்று அமைச்சர், ஒரு பிரதியமைச்சர் என ஆளும் கட்சியின் நான்கு பேருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர்கள் ஜோன் செனவிரத்ன, ஜனக பண்டார தென்னக்கோன், மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோருக்கும், பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தனவுக்கும் எதிராகவே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள் என.

மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபே குணவர்த்தன *(24ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்ப்பாண மே தினக் கூட்டம் கூட்டமைப்புக்கு நல்ல படிப்பினை

### கனடா வானொலிக்கு சிறிதரன் செவ்வி

(கொழும்பு)

மே தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி துரோகம் செய்துவிட்டதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு இது நல்ல படிப்பினை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கனடா வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

பேரினவாதக் கட்சியுடன் சேர்ந்தால் என்ன நடக்கும் என்பதற்கு யாழ்ப்பாணத்தில் நடந்த மே தினக் கூட்டம் நல்ல பாடங்களை கற்றுத் தந்துள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய மே தினக் கூட்டம் வரலாற்றில் மிகப் பெரிய தவறு எனினும் தலைமை எடுத்த முடிபுக்கு கட்டுப்பட்டு நானும் அந்த மே தினக் கூட்டத்தில் ஒரு பார்வையாளராக கலந்து *(24ஆம் பக்கம் பார்க்க)*

## ஹக்கீம் மத்தியஸ்தமா?

## அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் இணைப்பாளர் எவரும் தேவையில்லை

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் இணைப்பாளராக செயற்படுமாறு சுஷ்மா சுவராஜ் ரவூப் ஹக்கீமுக்கு விடுத்த வேண்டுகோள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதுவும் தெரியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் மாத்திரம் நாங்கள் இதனைப் பார்த்துள்ளோம். இது தொடர்பில் எவரும் உத்தியோக பூர்வமாகவோ அல்லது உத்தியோகபூர்வமற்ற முறையிலோ தெரிவிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் சுமுகமானதொரு *(24ஆம் பக்கம் பார்க்க)*

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வில்லூன்றியில் சித்திரா பூரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை அதிகாலை விசேட அபிசேகம் நடைபெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசையும், காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகளான பிதிர்த் தர்ப்பணங்கள், தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாட விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தர்ம பரிபாலன சபைத் தலைவர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் அறிவித்துள்ளார். (ந-9)

# மோ.சைக்கிள் விபத்து இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் வேகமாக நேருக்குநேர் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆறுகால்மடம் மானிப்பாய் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் மாதகல்லினைச் சேர்ந்த சிறிஸ் கந்தராசா ஜேக்கப் (வயது 18) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ந)

# ஸ்ரீ அம்மா பகவான் மூலமந்திர பூஜை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் மூல மந்திர பூஜை நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இப் பூஜை நிகழ்வில் சகலரையும் கலந்து கொண்டு அம்மா பகவானின் அனுக்கிரகத்தைப் பெற்று பயனடையுமாறு பிரார்த்தனை மையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# துப்பாக்கி முனையில் கொள்ளை தச்சன்தோப்பில் பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிகளுடன் நள்ளிரவில் வீட்டினுள் புகுந்த முகமூடியணிந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களை தாக்கிவிட்டு பல இலட்சம் ரூபாய் பெறுமதியானதங்கநகைகள், பணம் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் நேற்றுமுன் தினம் நள்ளிரவு 12.45 மணியளவில் தச்சன் தோப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, பெரியரக துப்பாக்கிகளுடன் சென்ற மூன்று கொள்ளையர்கள் குறித்த வீட்டின் முன் கதவை உடைத்து உள்நுழைந்து அங்கிருந்த பெண்ணொருவரைத் தாக்கிவிட்டு 2 பவுண் காப்பு, சங்கிலி, தாலிக்கொடி என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் ஒருஆண் மற்றும் 3 பெண்கள் கைக்குழந்தை இருந்த வேளையிலேயே இக்கொள்ளைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

இதேவேளை கொள்ளையர்கள் தாம் கொண்டுவந்த துப்பாக்கியால் நிலத்தில் சரமாரியாக சுட்டதுடன் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்த அயல்வீட்டு பெண்மணியை மிரட்டி அவரிடம் இருந்த தங்கச் சங்கிலியையும் பறித்துள்ளனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக குறித்த வீட்டார் தகவல் கொடுத்ததை அவதானித்த கொள்ளையர்கள் தாலிக்கொடியினை மட்டும் தவறுதலாக போட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் தடயப்பொருட்களினையும் எடுத்துச் சென்றனர்.

குறித்த வீட்டு உரிமையாளர் கடந்த புதுவருடத்திற்கு முதல்நாள் வெளிநாட்டிலிருந்து வந்துள்ள நிலையிலே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் முருகன் கோவில் வீதி தச்சன்தோப்பு கைதடியைச்சேர்ந்த கங்காதேவி (வயது51) என்ற பெண்ணே திருடர்களின் கத்திக் குத்துக்கு இலக்காகி யாழ். போதனாவைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ந-3,4)

# யாழில் பரவலாகக் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் நடைபெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள், தங்கநகைகள், பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவங்கள் அரியாலை மாம்பழம் சந்தியில் 3 கடைகளிலும் மானிப்பாயில் ஒரு வீட்டிலும், அரியாலை முள்ளியில் ஒரு வீட்டிலும் மற்றும் யாழ்ப்பாணம் சிவலிங்கப்புளியடி கே.கே.எஸ் வீதியில் ஒரு வீட்டிலும் இடம் பெற்றுள்ளது.

இதில் அரியாலை மாம்பழம் சந்தியில் மூன்று கடைகளில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவில் இடம்பெற்றுள்ளது. இதில் சீமெந்துகடை, ரயர்கடை, பல சரக்குக்கடையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரியாலை முள்ளிப்பகுதியில் நேற்று நண்பகல் வீட்டினுள் யாரும் இல்லாத நேரம் பார்த்து உள்நுழைந்த திருடர்கள்அங்கிருந்த பெறுமதிமிக்க பொருட்கள் மற்றும் நகைகள், பணம் என்பவற்றினையும் திருடிச் சென்றுள்ளனர். இது இவ்வாறிருக்க கே.கே.எஸ் வீதியில் நடைபெற்ற திருட்டில் ஈடுபட்ட முதியவர் ஒருவர் கையும் மெய்யுமாக அயலவர்களினால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் அங்கிருந்த மின்னியல் பொருட்கள், தொலைபேசி, பணம் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தற்போது யாழ் குடாநாட்டின் பகுதிகளில் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் திடீரென அதிகரித்திருப்பதோடு துப்பாக்கிமுனை கொள்ளைகளும் சர்வசாதரணமாக இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# சனி, ஞாயிறு தினங்களில் மது, இறைச்சிக்கடைகள் பூட்டு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ புத்த வருடம் 2556 ஆன நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் வெசாக் தினங்களாக பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதுடன் நேற்று முன்தினம் புதன் கிழமை தொடக்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்கிழமை வரையான நாட்களை வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய கீழ் குறிப்பிடப்பட்டுள் நிலையுங்களை பூட்டுமாறு அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை வரை அனைத்து மதுபானக்கடைகளை மூடுவதற்கும், சிறப்புஅங்காடிகளில் மதுபான விற்பனையை நிறுத்துவதற்கும், ஊன் அறுக்கும் நிலையங்கள், பந்தய நிலையங்கள், சூதாட்டக்கூடங்கள், கழகங்கள் அனைத்தையும் மூடுவதற்கும்,

நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இறைச்சிக்கடை களை மூடுவதற்கும் சிறப்பங்காடிகளில் இறைச்சி விற்பனையைநிறுத்துவதற்கும்தேவையான நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறுசம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# கட்டிடத்திலிருந்து விழுந்தவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிட வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தென்னிலங்கைத் தொழிலாளி ஒருவர் கட்டிடத்திலிருந்து கீழே விழுந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்றுமாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் தென் பகுதியைச் சேர்ந்த எம்.சுனில் (57) என்பவரே உயிரிழந்துள்ளார். சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக் காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-4)

# 'நிமிர்வு' சிறுகதை தொகுப்பு நாளை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அநாதரட்சகன் (மு.இராசநாயகம்) எழுதிய நிமிர்வு சிறுகதை தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வின் வரவேற்புரையை யாழ். வலயக் கல்வி அலுவலக தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் ஆற்றவுள்ளார்.

நூலின் அறிமுக உரையை பலாலி ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கவிஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்த ஆய்வுரைகளினை யாழ்.வலயக் கல்வி அலுவலக தமிழ்த்துறை ஆசிரிய ஆலோசகர் திருமதி கௌரிமுகுந்தன், தேசியக் கலை இலக்கியப் பேரவைப் பொதுச் செயலாளரும் சட்டத்தரணியும் ஆகிய சோ.தேவராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

இந் நிகழ்விற்கு கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது சமூகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-2)

# சுழிபுரத்தில் மியூசிக்கல் நைற்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம், பெரியபுலோ அண்ணா சனசமூக நிலைய கல்வி அபிவிருத்திக்குழுவின் ஏற்பாட்டில் மெகா மியூசிக்கல் நைற் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு சுழிபுரம் பெரியபுலோ நெல்லியான் வீதியிலுள்ள வயல் வெளியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரபல தென்னிந்திய பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் புதல்வன் ரி.எம்.எஸ்.செல்வக்குமாருடன் கொழும்பு அப்சராஸ், அக்கினி, சித்தாரா புகழ் பாடகர் கிருஷ்ணகுமார் ஆகியோர் இணைந்து ஜேம்ஸ் அன்ரனின் பிரண்ட்ஸ் இசைக்குழுவினர் வழங்கவுள்ளனர் என கல்வி அபிவிருத்திக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ந-9-8)

# கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

(மல்லாவி)

வன்னியில் இடம்பெற்ற போரின் இறுதி இடங்களான முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மேற்படி மூன்று இடங்களும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த நிலையில் அவை மக்களுடைய மீள்குடியேற்றத்திற்காக கண்ணிவெடிகள் அகற்றப்படவுள்ளன. (அ-9,15)


## விற்பனைக்கு

மின்பிறப்பாக்கி (Generator) 3.2 KV சிறு பிழை திருத்தி எடுக்கலாம். தண்ணீர் இறைக்கும் இயந்திரம் (Water Pumb) விற்பனைக்கு உண்டு.

விபரங்களுக்கு:-

0755529630 (8295)

கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.

## YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

- உத்தியோகத்தர்க்கு
- உயர் கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- பிறநாடு செல்பவர்க்கு
- தாய்மார்க்கு
- பாடசாலை மாணவர்க்கு

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர் (8284)




## வீட்டுடன் காணி விற்பனை

Hartley College Pt.Pedro, வேலாயுதம் மகா வித்தியாலயம், சிவப்பிரகாசம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு மத்தியிலும், Pt. Pedro பிரதேச சபை, S.L.T.B, Point Pedro Town மற்றும் சிவன் கோவில் என்பனவற்றிக்கு அருகாமையாகவும் வங்கி, வர்த்தக மற்றும் சிறப்பான கட்டிடங்கள் அமைப்பதற்கு ஏற்றதாகவும் தும்பளை பிரதான வீதியில் 4 1/2 பரப்பு சிறிய வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு Tel. No. 0212226957 அல்லது 0776270133 இலக்கங்களை தொடர்பு கொள்ளவும். (8291)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 2012.04.05 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பவிளக்கு

அமரர் கணேசமூர்த்தி மீனம்மா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.05.2012 நாளை சனிக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தெணி அம்மன் கடற்கரையில் கல்லுப் போடப்படும்.

தொடர்ந்து 06.05.2012 ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனியழைப்பாகவும் ஏற்றுக் கொண்டு கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

வத்தனை
புலோலி மேற்கு, பருத்தித்துறை. (C-6490)

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

# இன்று ஒரு தகவல்

## பணமும் பிணமும்

ஒரு ஊருக்குப் பெயர் கொடையாளிப்பட்டி. அந்தப் பெயருக்குத் தகுந்த மாதிரித்தான் அவ்வூர் மக்களும் இருந்தார்கள். யார் வந்து என்ன கேட்டாலும் இல்லையென்று சொல்லமாட்டார்கள். தங்களிடம் கேட்பதை மறுப்புத் தெரிவிக்காமல் கொடுத்து விடுவார்கள்.

கொடையாளிகள் நிறைந்த ஊர். இலவசமாக மட்டுமல்ல, கடனாகவும் பணம் கொடுப்பார்கள்.

யாருக்காவது அவசரமாக பணம் தேவையென்றால் அந்த ஊரிலே போய் வாங்கலாம். பத்திரம் தேவையில்லை, சாட்சி தேவையில்லை, எந்த உத்தரவாதமும் கேட்காமலே பணம் கொடுத்து விடுவார்கள்.

ஒருவனுக்கு பணம் தேவைப்பட்டது. சொந்த பந்தமெல்லாம் கேட்டுப் பார்த்தான். யாருமே வழங்குவதாக இல்லை. எல்லோரும் அவரவர் சௌகரியங்களைக் கவனத்தில் கொள்பவர்களாக இருந்தார்கள்.

இவன் எல்லோரிடத்திலும் கேட்டுவிட்டு ஒரு இடத்தில் போய் அமர்ந்தான். அந்த நேரம் தான் கொடையாளிப்பட்டியைப் பற்றி கேள்விப்பட்டான்.

உடனே புறப்பட்டான். வயல், காட்டு வழியாக ஊர் எல்லைக்கு வந்து விட்டான்.

இரண்டு பக்கமும் விவசாய வேலைகள் நடந்து கொண்டிருந்தன. ஏர் உழுது கொண்டிருந்தார்கள். அவ்வேளையிலே ஒரு விவசாயியை பாம்பு கடித்து விட்டது. அருகில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஓடி வந்தார்கள். அவசரமாகச் செய்ய வேண்டிய முதலுதவிகளைச் செய்தார்கள். பலன் கிடைக்கவில்லை. அவர் இறந்து விட்டார்.

அவன் இறந்து விட்டான் என்று தெரியவந்தது. அவனை தூக்கி வரம்பிலே போட்டார்கள். மீண்டும் விவசாயிகள் தங்களது வேலையில் கவனத்தைச் செலுத்தினார்கள். அங்கே ஒருவன் இவனைப் பார்த்து சொன்னான்;

ஐயா...நீங்கள் போகிற வழியிலே... இவனது சொந்தக்காரன் இவனுக்கு சோறு கொண்டு வருவான். இவன் இங்கே இறந்து விட்டான் என்று சொல்லும்படியாகக் கூறினான்.

இவனுக்கு மிகவும் ஆச்சரியம். என்னடா இது... பாம்பு கடித்தது என்று பதறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள். இறந்து விட்டான் என்றதும் வரம்பிலே எறிந்து விட்டார்கள்.

இவ்வாறு நினைத்தபடி நடந்து சென்று கொண்டிருந்தான்.

எதிரிலே சோறு கொண்டு ஒருவன் வந்தான். இவன் நடந்த விடயத்தை விபரமாகச் சொன்னான்.

அவனோ சற்றும் அழவில்லை. தான் கொண்டு வந்த சோற்றை பிரித்து வரம்பிலே இருந்தபடி சாப்பிட்டுவிட்டு அப்படியே ஊர் திரும்பினான்.

இப்படியும் ஒரு ஊரா? என நினைத்து ஆச்சரியப்பட்டு ஊருக்குள் திரும்பினான். அங்கே ஒரு பெரியவரிடம் பணம் கேட்டான்.

அவரும் இவனுடைய பெயரையும் இடத்தையும் மட்டும் விசாரித்து விட்டு தேவையான பணத்தைக் கொடுத்தார்.

பணத்தைப் பெற்ற இவன் தன் மனத்தை சஞ்சலப்படுத்திய விடயம் தொடர்பாக கேட்டான்.

நடந்த விடயத்தை விபரமாக சொன்னான்.

இதற்கு அந்தப் பெரியவர் "ஆமாம்... அப்படித்தான் செய்வோம். வேலை முடிந்து வீடு திரும்பும்போது இறந்த உடலை எடுத்துச் சென்று அடக்கம் செய்வோம்" என்றார்.

"மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே" என்றான்.

"ஏன் உங்களின் ஊரிலே யாராவது இறந்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

"எங்களின் ஊரிலே பிணத்தை தூக்க விடமாட்டார்கள். ஒப்பாரி வைப்பார்கள். கட்டுப்புரண்டு அழுவார்கள்" என்றான்.

பெரியவர் அவனிடம் கொடுத்த பணத்தை "லபக்" என்று பறித்து விட்டார். இவன் பதறிப் போனான்.

பெரியவர் சொன்னார்; "பிணத்தையே விடமாட்டேன் என்று கட்டித் தழுவி அழுதா நான் கொடுத்த பணத்தை மட்டும் எப்படித் திருப்பிக் கொடுப்பீர்கள்? சென்று வாருங்கள்" என்று விரட்டி அடித்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை

## நோயாளர்கள் அவலம்

(புளியம்பொக்கணை)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறையால் நோயாளர்கள் பெரும்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வைத்தியசாலையில் ஒரே ஒரு வைத்தியர் மட்டுமே கடமையாற்றுகின்றார். இவ்வைத்தியர் விடுமுறையில் செல்லும் காலப்பகுதியில் பதில் வைத்தியர் இன்மையால் பல மைல் தூரத்திலிருந்து வரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி செல்லவேண்டிய நிலையுள்ளது. கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 10 இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விசுவமடு,றெட்பானா, நெற்பெலியாறு, ஆகிய கிராம மக்கள் இவ்வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கண்டாவளை கிராமத்தில் ஒரு பொது வைத்தியசாலை அமைக்கப்பட்ட போது அங்கு வைத்தியர்கள் நியமிக்கப்படவில்லை. எனவே, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மேற்குறித்த பகுதி நோயாளிகள் செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் தர்மபுரம் வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமித்து வைத்திய தேவைக்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் நோயாளிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-263)

# உப தபாலகத்தை புனரமைக்க கோரிக்கை

(பூந்தோட்டம்)

செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள மீள்குடியேற்றக் கிராமமான பெரியதம்பனை அண்மையில் பெய்த கடும் மழையினாலும் மினிசூறாவளியினாலும் கடும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. இதனால் அப்பகுதி உப தபாலகத்தின் கூரைப் பகுதி முழுமையாக சேதமடைந்துள்ளது. தற்பொழுது கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக பாழடைந்த ஒரு கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இவ் உப தபாலகம் பாழடைந்த கட்டடத்தில் இருப்பதனால் ஆவணங்கள் சேதமடையக்கூடிய அபாய நிலையில் உள்ளன. அத்துடன் பொதுமக்களும் இங்கு சென்று சேவையைப் பெற முடியாத நிலையில் உள்ளனர். இதனால் மினிசூறாவளியினால் சேதமடைந்த உப தபாலக கட்டடத் தொகுதியினை புனரமைத்துத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீள் குடியேறிய இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (அ-9-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 160 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 85 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 35-40 | 40 | 30 | 50 |
| தக்காளி | 100 | 90 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 20 | 20 | 40 |
| கரட் | 40 | 40 | 40 | 60 |
| பூசணி | 25-30 | 20 | 20 | 40 |
| புடோல் | 35 | 40 | 30 | 60 |
| வாழைக்காய் | 15 | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-70 | 40-70 | 80 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 85 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 160 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 90 | 60 |
| லீக்ஸ் | 100 | 90 | 80 | 150 |
| பீற்றூட் | -- | 60 | 30 | 60 |
| கறிமிளகாய் | 40 | 40 | 40 | 60 |
| முருங்கைக்காய் | 160-200 | 160 | 350 | 320 |
| போஞ்சி | -- | 120 | -- | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 110 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 60 | 80 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 30 | 20-25 |

# இராசி பலன்

04.05.2012
(சித்திரை 22, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 2.36 மணிவரை
அத்தம் முற்பகல் 9.40 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணிவரை
சுபநேரம் 5.56-7.26 மணிவரை

**மேடம்** வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் நாள், ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், விலையுயர்ந்த பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்திகரமாக அமையும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**மிதுனம்** பொன்னான நாள்,பிறர் போற்றும் விதத்தில் காரியம் ஒன்றைச் செய்து முடிப்பீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** பிற இனத்தவர்களால் பெருமை சேரும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் தொல்லை தந்தவர்கள் விலகுவர், கௌரவமான நாள்.

**சிங்கம்** ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், வாக்கு மேன்மையுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்,போசன சுகமுண்டு.

**கன்னி** புதிய நபரின் அறிமுகம் கிடைக்கலாம், குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கப்படலாம், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.

**துலாம்** நாணயத்துடன் நடந்து கொள்வதால் அனைவரும் உங்களைப் பாராட்டுவார்கள், வேலைச்சுமை கூடி மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், தொழில் முன்னேற்றமுண்டு.

**தனுசு** நிர்வாகத்திறமை வெளிப்படும் நாள், தனவரவுகள் திருப்திகரமாக அமையும், தூர தேசச் செய்திகளால் தொழில் வளர்ச்சிக்கு நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், நீண்ட நாளைய பிரச்சினைகள் நல்ல முடிபுக்கு வரும், செய்தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

**கும்பம்** பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரித்து மகிழ்ச்சி குறையலாம்,உடல் நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள்,போசன சுகமுண்டு.

**மீனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், வாழ்க்கைத்துணை வழியே வரவுகள் வந்து சேரலாம்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

வளவன்

# வடமராட்சி ச.ச.நிலையங்கள் இயங்கவைக்கப்படவேண்டும்

## மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் உள்ள சனசமூக நிலையங்களை மீளவும் ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களான அம்பன், குடத்தனை, மணற்காடு, பொற்பதி போன்ற இடங்களில் உள்ள சனசமூக நிலையங்கள் கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்ததுடன் நீண்டகாலமாக இயங்காமல் உள்ளது.

குறித்த பிரதேசங்களில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு நீண்டகாலமாகியும் ஒருசில சனசமூக நிலையங்களே சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

ஏனைய சனசமூக நிலையங்கள் முற்றாக இயங்காமையினால் அப்பகுதி மக்களின் வாசிப்புத்திறன் பாதிப்படைவதுடன் வெளியிடங்களில் நடைபெறும் சம்பவங்களை அறிந்து கொள்ளமுடியாதுள்ளது.

எனவே இப்பிரதேசங்களில் இயங்கி வந்த சனசமூக நிலையங்கள் மீளவும் இயங்குவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# வடமராட்சியின் அபிவிருத்திப்பணிகள் மந்தகதியில் இடம்பெறுகின்றன

## மக்கள் விசனம்

(கரவெட்டி)

வடமராட்சிப்பிரதேசங்களில் உள்ள பிரதேசசபை மற்றும் நகர சபைகளின் அபிவிருத்திப் பணிகள் மிகவும் மந்த கதியில் காணப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தில் உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற்ற தரப்பினர் சபைகள் அமைத்து பல வேலைத்திட்டங்களை மேற் கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் நீண்ட காலமாகியும் வேலைத்திட்டங்கள் நிறைவடையாதுள்ளது.

வீதிகளுக்கு மின் குமிழ்கள் பொருத்துதல், வீதி புனரமைப்பு, சந்தைப்புனரமைப்பு, பழுதடைந்த கிணறுகளை திருத்துதல் மற்றும் பொது மயானப்புனரமைப்பு போன்ற வேலைத்திட்டங்கள் நிறைவடையவில்லை.

எனவே மக்களின் சிரமங்களை கருத்தில் கொண்டு மக்களின் அபிவிருத்திப்பணிக்கு வடமராட்சியில் உள்ள பிரதேச சபைகள் மற்றும் நகரசபைகள் செயற்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய இரத்த வங்கியினால் குருதிக்கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு இரத்ததானம் சம்பந்தமான விழிப்புணர்வை உண்டாக்கும் வகையில் இரத்ததானமும் இரத்ததானத்திற்கான தேவைகளும் எனும் எண்ணக்கருவிலான கவிதை, சிறுகதை, சித்திரப்போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக இரத்த வங்கிப் பிரிவு அறிவித்துள்ளது.

இப்போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கான போட்டி, திறந்த போட்டி என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரிவோரும் அவர்களைச் சார்ந்தோரும் பங்குபற்ற முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான கவிதை 48-96 வரிகளிலும் சிறுகதை ஏ4 தாளில் 4-8 பக்கங்களில் அமைந்திருப்பதுடன் தாளின் ஒரு பக்கத்தை மட்டும் பாவித்து தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டெழுத்துப் பிரதியாகவும் அனுப்பிவைக்க முடியும்.

12 வயதிற்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தற் கடிதத்துடனும் வயது எல்லை இன்றி திறந்த போட்டியாளர்களும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பிராந்திய இரத்த வங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஆனி மாதம் 14 ஆம் திகதி உலகக் குருதிக் கொடையாளர் தினமாகும். இதன் பிரகாரமே ஆனி மாதம் 16 ஆம் திகதி இலங்கை முழுவதும் குருதிக்கொடையாளர் கௌரவிப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி நடைபெறும். மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று இரவு 8 மணிக்கு அம்பாள் கிராமத்தின் ஊடாக வீதியுலா வருகின்ற நிகழ்வும் இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9)




## கோண்டாவில் பொது நூலகத்தில் நூலக மெருகூட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நூலக மெருகூட்டல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் பொது நூலக மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் பெ. கனகசபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கோண்டாவில் மருத்துவமனை ஆயுள்வேத வைத்தியர் டாக்டர் கா. நடேசராசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் நீரிழிவு நோயாளர்களுக்கான பராமரிப்பு தொடர்பான ஆலோசனைகளை யாழ். வைத்தியர் வை. யதுனந்தன் வழங்கவுள்ளார்.

அத்துடன் இலவசமாக இரத்தப்பரிசோதனை செய்யப்படவுள்ளது. நீரிழிவு நோய் தொடர்பான துண்டுப் பிரசுரம் வழங்கப்படவுள்ளது. (அ-3)

# யாழ்.போதனாவைத்தியசாலைக்கு ஜூலை மாதம் வருகின்றது லிப்ற்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கான லிப்ற் அமைக்கும் பணிகள் ஜூலை மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் ஊடாக இப்பிரச்சினை தொடர்பாக மின்சார சபைக்கு அறிவித்ததன் பேரிலேயே இப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார சபையினருக்கு லிப்ற் அமைப்பதற்கு 80 இலட்சம் ரூபா கொடுக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்த நிலையிலும் இதுவரை லிப்ற் அமைக்கப்படவில்லை.

எனினும் தற்போது லிப்ற் அமைப்பதில் ஏற்பட்டுள்ள அதீத காலதாமதம் தொடர்பாக சுகாதார அமைச்சர் ஊடாக மின்சார சபைக்கு சுட்டிக்காட்டியதை தொடர்ந்து தற்போது ஜூலை மாதமளவில் லிப்ற் அமைத்து தருவதாக மின்சார சபையினர் கூறியுள்ளனர்.

லிப்ற் வசதி இன்மையால் நோயாளர்கள், பணியாளர்கள், வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் லிப்ற் அமைப்பதில் ஏற்படும் அதீத காலதாமதம் ஏற்புடுத்துவது தொடர்பாகவும் பத்திரிகைகள் பல முறையும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

## அம்பாள் அருட்கொடை நூல் விநியோகம்



வல்வெட்டித்துறை வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் இரதோற்வசத்தன்று நாளை சனிக்கிழமை ஸ்ரீவாணி வெளியீட்டக உரிமையாளர் சி. சிவகுமாரனினால் அம்பாள் அருட்கொடை என்ற நூல் அடியவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தண்டபாணிகதேசிகர் அம்பாள் பணியில் ஐம்பது வருடங்கள் சிறப்பிதழாக வெளிவர உள்ளது. மேலும் ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் புதுமைகள், அம்பாள் அற்புதம், கரகப்பாடல், பக்தி இலக்கியச்சுவை, துறவற நிலையைத் தந்ததேனோ? முதலான பல விடயங்கள் இடம்பெறுகின்றன.

இதில் வைத்திய கலாநிதி க.மயிலேறும் பெருமாள், வைத்திய கலாநிதி ஆ. பேரின்பநாதன் மற்றும் வ. வேலும்மயிலும், வல்வையூர் அப்பண்ணா, தாரணன் ஆகியோரது ஆக்கங்கள் இடம்பெறுகின்றன.

ஸ்ரீவாணி வெளியீட்டகத்தினரின் சமய வளர்ச்சி கருதிய 8 ஆவது வெளியீடாக வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைபதி அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.35 மணி தொடக்கம் முற்பகல் 9.10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளதாக ஆலய அறங்காவலர்கள் அறிவித்துள்ளனர்.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் எனவும் அறிவித்துள்ளனர். (அ-9)





யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மங்கல விளக்கேற்றுவதையும் வித்தியாலய முதல்வர் த. அம்பலவாணர் மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# தீக்கிரையானது மஸ்கெலிய தோட்ட லயன் குடியிருப்பு



ஹற்றன் மஸ்கெலிய மொக்கா தோட்டத்தின் மிட்லோதியன் பிரிவு லயன் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 22 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

இந்த தீ விபத்து நேற்றுக்காலை 10 மணியளவில் ஏற்பட்டது. நேற்றைய தினம் வேலை நாள் என்பதால் குடியிருப்பில் ஒருசிலரை தவிர ஏனையவர்கள் வேலைக்கு சென்றிருந்ததால் தீயை கட்டுப்படுத்தவோ உடைமைகளை அப்புறப்படுத்தவோ முடியாமல் போய்விட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகமாக மிட்லோதியன் பாடசாலையிலும் உறவினர் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்துக்கு மின்சார ஒழுக்கே காரணமாக இருக்கலாம் என்று மஸ்கெலிய பொலிஸார் சந்தேகிப்பதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சேதத்தின் பெறுமதி இதுவரை மதிப்பிடப்படவில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

(அ-2)

# ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் மக்களுக்கான கட்டடங்கள் அமைப்பு

ஜப்பானிய அரசின் 10 மில்லியன்ரூபா நிதியுதவியுடன் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுவதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ்.சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேறிய மக்களுக்கான செயற்றிட்டங்களின் ஒரு பகுதியாக சில திட்டங்கள் பூர்த்தியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய கூவில் ஜே/222 கிராமசேவகர் பிரிவில் பாலர் பாடசாலை மண்டபமும் தளபாடங்கள் உட்பட பொது நோக்கு மண்டபமும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

நகுலேஸ்வரம் ஜே/226 கிராம சேவகர் பிரிவில் பாடசாலை மண்டபமும் தளபாடம் உட்பட பொது நோக்கு மண்டபமும் பூர்த்தி நிலையை அடைந்துள்ளது.

மாவைக்கலட்டி ஜே/225 கிராம சேவகர் பிரிவில் மீளக் கட்டியமைக்கப்பட்ட பல் தேவைக்குரிய நன்னீர் பொதுக்கிணறு அமைக்கப் பட்டுள்ளது.

மேற்படி முடிவுற்ற திட்டங்கள் அனைத்தையும் ஜப்பானிய உயர்ஸ்தானிகராலயத்தின் அறிவுரைஞர் ரிசாவினால் தெல்லிப்பழை பிரதேச செயலர் சிறீமோகனிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இவ் உடன்படிக்கைக்கு அமைவாக மேலும் ஒரு முன்பள்ளி மற்றும் பொது நோக்கு மண்டபமும் பல்தேவைக்குரிய பொதுக்கிணறு ஒன்றும் வலித்தூண்டல் பகுதியில் கடற்றொழில் செய்வோருக்கான வாழ்வாதார திட்ட உதவிகளும் வழங்கப்பட இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2-9)

## பௌர்ணமி கலைவிழா

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் மாபெரும் பௌர்ணமிக் கலை விழா நாளை சனிக்கிழமை காலை 8.30மணிக்கு வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் மு/பாளிநகர் மகாவித்தியாலய திறந்தவெளி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் தமிழ்ப் பாரம்பரியத்தை எடுத்தியம்பும் கலை, கலாசார நிகழ்வுகளுடன் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கல்வி வலய விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (அ-9-15)

# புத்தபூர்ணிமா தின நிகழ்வுகள் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி 166/5, சேர்.பொன்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசேவா நிலையத்தில் புத்த பூர்ணிமாதின நிகழ்வுகள் நர்ளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனமும் காலை 8.45 மணிக்கு கொடியேற்றமும் ஓம்காரம், காயத்திரி மந்திரம், வேதபாராயணம், பஜனை ஆகிய நிகழ்வுகளும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் செல்வி. சிவகௌரி சிவகுரு நாதனின் விசேட சொற்பொழிவும் நடைபெறவுள்ளதாக வே.கருணாகரன் அறிவித் துள்ளார்.

(அ-9)

## மணமக்களை மனதார வாழ்த்துகின்றோம்



அச்சுவேலி கலாமினி கல்யாண மண்டபத்தில் இன்று 04.05.2012 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை திருமாங்கல்யத்தில் இணைந்து கொள்ளும் ஜெயசுதன் சதாநந்தினி தம்பதிகள் பல சௌபாக்கியமும் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

உத்திராவத்தை,
புலோலி வடகிழக்கு, புலோலி.

திரு.திருமதி.இராசையா குடும்பமும் மைத்துனர்மார்களும்.

(8292)

## மரண அறிவித்தல்

### திருமதி.றோ.ம.சபாரத்தினம்

உரும்பிராயை சேர்ந்த திருமதி.றோசபெல்லா மகிழ்மலர் சபாரத்தினம் 03.05.2012 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. தருமரத்தினம் அவர்களின் மகளும், காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை சபாரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான பாஸ்கரன், வினோகரன் மற்றும் சாந்தீகரன், ரசீகரன் ஆகியோரது தாயாரும், அமிர்தராஜா (தவம்), ஆனந்தராஜா (கிளி), இராணி ஹென்ஸ்மன் ஆகியோரது சகோதரியும், நிஷாந்தி , அஷிகா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் 04.05.2012 வெள்ளிக்கிழமை (இன்று) காலை 10 மணிக்கு நடைபெற்று கோப்பாய் அங்கிலிக்கன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் :-றோஸ் கொட்டேஜ்
உரும்பிராய்.

(சி-6489)

## இலங்கை மத்திய வங்கி





**பகிரங்க விரிவுரை** (தமிழ் மொழியில்)

"மத்திய வங்கியின் ஆண்டறிக்கை - 2011 இல் பிரதிபலிக்கப்பட்டவாறு பொருளாதார நிலை"

**பேச்சாளர்**

திரு. யோ. ஜயகாந்,
பொருளியலாளர்,
பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

**காலம்: 2012 மே, 09 (புதன்கிழமை) பி.ப 03.00**

**இடம்: யாழ் பொது நூலக கேட்போர் கூடம்**

அனுமதி இலவசம், அனைவரும் வருக!

இவ் விரிவுரை க.பொ.த உயர்தரம், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தமது அறிவை அதிகரித்துக்கொள்வதற்கு பயனுடையதாக இருக்கும்

வட மாகாண அலுவலகம் , இலங்கை மத்திய வங்கி
இல. 105, அரசடி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0212221856 தொலைநகல்: 0212221857

# அதிசய உலகம்...


## சைக்கிளோட்டிகளைப் பாதுகாக்க அறிமுகமாகிய நவீன அங்கிகள்



சைக்கிளோட்ட வீரர்கள் மற்றும் சாதாரணமாக சைக்கிள்களை பயன்படுத்துபவர்கள் ஆகியோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு நவீன பாதுகாப்பு அங்கிகள் அறிமுகமாகின்றன. இவற்றில் தலைக் கவசம் உட்பட கறுப்புப் பெட்டியைக் கொண்ட மேலங்கியும் காணப்படுகின்றது. தலைக்கவசமானது காற்றினை உள்ளடக்கியதாக (AirBag) அமைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் மேலங்கியில் காணப்படும் கறுப்புப் பெட்டியானது விபத்துகளின் காரணங்களை பதிவு செய்யக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது. அதாவது விமானங்களில் உள்ள கறுப்புப் பெட்டிகளைப் போன்று செயற்படக்கூடியது. இவ் அங்கிகளை சுவீடனைச் சேர்ந்த இரு மாணவர்களே வடிவமைத்துள்ளனர்.

## 2900ஆண்டுகளுக்கு முன்னே புற்றுநோய் இருந்ததாக மம்மியின் மூலம் கண்டுபிடிப்பு



உயிர்க்கொல்லி நோய்களில் ஒன்றாக புற்றுநோய் 2900 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி இருப்பதை மருத்துவர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

கரோடியாவில் உள்ள ஷாகிரேப் தொல்பொருள் அருங்காட்சியகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த ஒரு மம்மியை மருத்துவக் குழுவினர் ஆய்வு செய்தனர். 20 வயது மதிக்கத்தக்க அந்த வாலிபர் எந்த நோய் பாதித்து இறந்தார் என பரிசோதனை செய்தனர். 2900 ஆண்டுக்கு முன்பு இறந்த அந்த வாலிபரின் மூளை அகற்றப்பட்டு இருந்தது. உடல் நறுமணப் பொருட்களால் பூசப்பட்டு கெடாமல் பாதுகாக்கப்பட்டிருந்தது. மண்டை ஓட்டில் இருந்து மூக்கு துவாரத்தின் வழியாக பிசின் போன்ற ஒரு திரவம் ஊற்றப்பட்டு துணியால் சுற்றப்பட்டிருந்தது. அந்த உடலை பரிசோதித்ததில் அவரது தோலில் லாங்கர் கான்ஸ் என்றழைக்கப்படும் செல்கள் இருந்தன. அவை பல வகையாக பெருகி உடலில் நோயினை உருவாக்கக் கூடியவை. இதனால் அந்த மம்மியின் உடலில் எலும்பு மற்றும் மெல்லிய தசை பகுதிகள் பாதிக்கப்பட்டிருந்தது.

எனவே, இது ஒருவகை புற்றுநோய் என ஆய்வு மேற்கொண்ட மருத்துவக் குழுவின் தலைவர் மிஸ்லாவ் கங்கா தெரிவித்துள்ளார். இது மிகவும் அரிதான புற்றுநோய் வகையை சேர்ந்தது. 5 இலட்சத்து 60 ஆயிரம் இளைஞர்களில் ஒருவரை தாக்கும். பெண்களைவிட இது ஆண்களைத்தான் அதிகம் பாதிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த மம்மியை எக்ஸ்ரே சி.டி.ஸ்கான் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கான் மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## செக் குடியரசில் 101 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பாலம் திருட்டு



செக்குடியரசு நாட்டின் கர்லோவிவெய்ரி மாகாணத்தில் ஸ்லாவ்கோவ் நகரின் ஆற்றின் குறுக்கே இரும்பு ரெயில்வே பாலம் உள்ளது. இது பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருந்து. கடந்த 1910 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த பாலம் 101 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. இந்த இரும்பு பாலத்தில் 200 மீற்றர் நீளத்துக்கு தண்டவாளமும் உள்ளது. இதனை சில விஷமிகள் கிரேன் மூலம் பெயர்த்து எடுத்து திருடி சென்றுள்ளனர்.

பட்டப்பகலில் திருடிக் கொண்டிருப்பதைத் பார்த்த பொலிஸார் விசாரித்த போது ரெயில்வே நிர்வாகத்திடம் ஒப்புதல் பெற்று தான் அதனை எடுத்து செல்வதாக தெரிவித்த அந்த கும்பல் அதற்கான போலி ஆவணத்தை காட்டியுள்ளது.மேலும் திருட்டுப் போன இரும்பு பாலத்தின் எடை 10 தொன் எனவும் அதன் மதிப்பு 6 ஆயிரம் மில்லியன் டொலர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

# சட்டவிரோத குடியேற்றம் குறித்து ஆஸி. அமைச்சர்கள் கொழும்பில் பேச்சு

கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குள் நுழைவதை தடுக்கும் நோக்கில் இலங்கை- அவுஸ்திரேலியாவுக்கிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கமிடையிலான விமான போக்குவரத்து ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகவுள்ளன. அவுஸ்திரேலியாவின் குடிவரவு குடியகல்வு மற்றும் பிரஜாவுரிமைக்கான அமைச்சர் கிரிஸ் போவன் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

இலங்கையில் தங்கியிருக்கும் அவுஸ்திரேலிய அமைச்சர் கிரிஸ்போவன் நேற்றைய தினம் இலங்கையின் பிரதிவெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேராவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து அமைச்சின் பிரதான மாநாட்டு மண்டபத்தில் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையிலான விமான போக்குவரத்து தொடர்பான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதான கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேராவும் அவுஸ்திரேலிய அமைச்சரை சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை, இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் அவுஸ்திரேலிய அமைச்சர் இன்று பல முக்கியஸ்தர்களை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார். இதேவேளை, அவுஸ்திரேலிய அமைச்சர் நேற்றைய தினம் ரவூப் ஹக்கீம், சட்டமா அதிபர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சு நடத்துவார் என வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து நாளையதினம் இவர் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்துவாரென எதிர்பார்க்கப்படுவதாகவும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி குறிப்பிட்டார். (அ-2)

## கூட்டுறவு சட்டங்களில் மாற்றம் செய்ய வேண்டும்

தற்போதுள்ள கூட்டுறவு சட்டங்கள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் கொண்டுவரப்பட்டவை. தற்போதைய சூழலுக்கேற்ப அதனை மாற்றம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. நான் கூட்டுறவு அமைச்சராக இருந்த போதும் இச்சட்டங்களை மாற்றத்திற்கு உட்படுத்த முயற்சித்தேன். எனினும் தற்போதாவது இச்சட்டங்களை மாற்றம் செய்து தற்கால சூழலில் அனைவருக்கும் பயனுள்ள செயற்பாடாக மாற்றமடைய செய்ய வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட பனை தென்னை கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தின் இலவச கற்கை நெறியான கணனி மற்றும் ஆங்கில பாட நெறி என்பவற்றை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றையதினம் வவுனியா பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தில் இடம்பெற்றது.

இதன்போது அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் ரவீந்திரன், வவுனியா பனை தென்னை கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தின் தலைவர், பொதுமுகாமையாளர் உட்பட பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர். (அ-2-266)

## தேசியமட்ட சிங்கள போட்டியில் வவுனியா தெற்கு வலயம் சாதனை

(பூந்தோட்டம்)

கல்வி அமைச்சினால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட இரண்டாம் மொழி சிங்களப் போட்டியில் வவுனியா தெற்கு வலய மாணவர்கள் தமது திறமையை வெளிப்படுத்தி சாதனை படைத்துள்ளனர்.

இரண்டாம் மொழி சிங்கள பேச்சுப் போட்டியில் தேசிய ரீதியில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரியை சேர்ந்த தரம்-6 மாணவி வாகீசன் வாரகி மூன்றாம் இடத்தினையும் இதே பாடசாலையைச் சேர்ந்த தரம்-9 மாணவி சுந்தரராஜா பிரியதர்சினி இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையின் தரம்-6 மாணவி கனகரட்ணம் சங்கவி நான்காம் இடத்தினையும் தரம்-8 மாணவி தில்லை ஈஸ்வரநாதன் ரக்ஷனா ஏழாம் இடத்தினையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய தரம்-8 மாணவி பேச்சுப் போட்டியில் ஐந்தாம் இடத்தினையும் பெற்று வலயத்திற்கு பெருமை சேர்த்து தேசியத்தில் சாதனை படைத்துள்ளதாக வவுனியா தெற்கு வலய இரண்டாம் மொழி சிங்களப் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சுஜாதா உபசேன தெரிவித்துள்ளார். (அ-9-266)

## கைவிடப்பட்ட வாகனங்களை பார்வையிட்டவர்களுக்கு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் போர் நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட வாகனங்களினை பார்வையிட்டு உறுதிப்படுத்திக் கொண்ட உரிமையாளர்களுக்கான அறிவித்தல் ஒன்றினை அரச அதிபர் நா.வேதநாயகன் வெளியிட்டுள்ளார்.

அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, எமது மாவட்டத்தில் போர் நடவடிக்கையின் போது கைவிடப்பட்ட வாகனங்களை பார்வையிட்டு அவ்வாகனங்கள் இருப்பதாக உறுதிப்படுத்திக்கொண்ட உரிமையாளர்கள் அவ் வாகனத்திற்கான ஆவணங்களை பொலிஸ் அறிக்கையுடன் நாளைய தினத்திற்கு முன்னர் மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு அவர் மேற்படி வாகன உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளார். (அ-3-15)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கமும் அதன் செயற்பாடுகளும்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பேராசிரியர் துரைராஜாவை முதற்தலைவராக பெற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒரு சங்கமாகும்.இச்சங்கம் பல்துறைசார்ந்த நான்கு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. மருத்துவம், விஞ்ஞானம், விவசாயம், சித்த மருத்துவம், கணிதம், கணனி, சமூக விஞ்ஞானம் போன்ற பல துறைகளை தன்னுள்ளடக்கி பிரிவு A,B,C,D என்னும் பிரிவுச் செயற்பாட்டின் மூலம் ஒருங்கிணைந்து இயங்கி வருகின்றது.

கருப்பொருள் (Theme of the year)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வருடந்தோறும் ஒவ்வொரு கருப்பொருளைத் தேர்ந்தெடுகின்றது.நான்கு பிரிவினரும் அக்கருப்பொருளைத் தத்தம் துறைகளுடன் இணைத்து அவ்வக் கருப்பொருள் தொடர்பான பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இச்சங்கத்தின் பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாக அமையும். இவற்றுள் பாடசாலைத் தோட்டமமைத்தல், Posters , சித்திரம், ஓவியம், பாடசாலைக் கண்காட்சி, எழுத்துப்போட்டி,கட்டுரைப்போட்டி,பேச்சுப்போட்டி, Quiz என்பனவும் ஏனைய பல நிகழ்வுகளும் நடத்தப்படும்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தில் வருடாந்த உறுப்பினராகவோ வாழ்நாள் உறுப்பினராகவோ இணைந்து கொள்ளலாம். உதாரணமாக கலை, முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் போன்ற துறை சார்ந்தவர்களோ அல்லது அவற்றில் ஈடுபாடு கொண்டவர்கள் பிரிவு D யை முதன்மைத் தெரிவாகவும் ஏனைய A,B,C பிரிவுகளை தம் இரண்டாம், மூன்றாம் தெரிவுகளாக பதிவு செய்து இச்சங்கத்தினரிடம் உடனடியாக பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வருடம்தோறும் மிகச் சிறந்த ஆய்வாளரை இனங்கண்டு அவருக்கு வருடாந்த நிகழ்வில் சிறப்புரை நிகழ்வினை ஆற்றுவதற்கு அழைப்பு விடுத்து பேராசிரியர் பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கத்தை விருதாக வழங்குவர்.

அத்துடன் இச்சங்கம் தன் வருடாந்த நிகழ்வை மூன்று நாட்கள் சிறப்பாக நடத்தும். அதில் ஆய்வுக்கட்டுரைகளை ஆய்வாளர்கள் வாசிப்பதும் அதன்பின் கலந்துரையாடி சிறப்பிப்பதும் மிக முக்கிய நிகழ்வாகும்.

**திருமதி சண்முகயோகினி ரவீந்திரன்**
**தலைவர்,**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்.**

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பாடசாலை விஞ்ஞான நிகழ்வுகளை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்ற இவ்வேளையில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஏனைய யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உறுப்பினர்களும் தம் கருத்துக்களையும் பங்களிப்பினையும் www.jaffnascienceassociation.blogspot.com எனும் இணையத்தளத்தினூடாவும் பத்திரிகை வாயிலாகவும் சமர்ப்பித்துப் பயன்பெறலாம்.

# இலங்கைக்கு அனுப்பப்பட்ட பொதியில் இரத்தினக்கற்கள், நகைகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலத்திரனியல் பொருட்களுக்குள் மறைத்து வைக்கப்பட்டு கிறீஸ் நாட்டிலிருந்து கொழும்புக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்ட ஆயிரக் கணக்கான இரத்தினக்கற்கள் மற்றும் தங்க நகைகளை சுங்கத் திணைக்களத்தினர் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கூடாக இன்டர்போல் அதிகாரிகள் வழங்கிய தகவல் மூலம் இவை கண்டுபிடிக்கப் பட்டன.

பல மில்லியன் ரூபா பெறுமதியான தங்க மோதிரங்கள், வளையல்கள், சங்கிலிகள் மற்றும் இரத்தினங்கள் சுங்க அதிகாரிகளால் கைப் பற்றப்பட்டன.

கிறீஸில் பணியாற்றிய இலங்கைத் தம்பதிகளினால் இவை அனுப்பப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேற்படி கணவனும் மனைவியும் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கணவர் கிறீஸ் தலைநகர் எதென்சில் நகையகமொன்றில் பல வருடங்கள் பணியாற்றியவராவார். அவர் அக்கடையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் என்பதால் நூற்றுக்கணக்கான நகைப் பெட்டிகள் அவரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தன.

கடந்த மாத முற்பகுதியில் சுமார் ஒரு வார காலம் இந்த தம்பதியினர் காணாமல் போயிருந்தமை குறித்து எதென்சில் பொலிஸாருக்கு மேற்படி நகை விற்பனை நிலையத்தினர் முறைப்பாடு செய்திருந்தனர். (அ-9)

# மகா சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மகா சபைக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் பரிபாலனசபைத் தலைவர் தி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வருடாந்த மஹோற்சவம், ஆலய புனருத்தாரண வேலைகள், கும்பாபிஷேகம் போன்ற பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பரிபாலன சபை செயலாளர் த. கபிலநாதன் அறிவித்துள்ளார். (அ-9)

# உப்புவெலியில் விபச்சார விடுதி முற்றுகை

(திருகோணமலை)

திருகோணமலை உப்புவெலி-அலஸ்வத்தை தொரன்காடு சந்திப் பகுதியில் நடத்திச் செல்லப்பட்டு வந்த விபச்சார விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

உப்புவெலி பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இந்த விபச்சார விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளது.முற்றுகையின் போது மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் நேற்று முன்தினம் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு குற்றத்தை ஒப்புக்கொண்டதால் 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (அ-2)

# பௌத்த பிக்குகளுக்கும் தமிழ்மொழி போதனை நடத்தி வைக்கிறார்

## M.T.S.RAMACHANDRAN

கடந்தவாரம் நடைபெற்ற சித்திரை புத்தாண்டின் நிகழ்வின் போது 6-13 வரை வயதுடைய 20 பௌத்த பிக்கு மாணவர்கள் கல்கிசை சமுத்திரா சந்த விகாரையில் பௌத்த குருமார்களுக்காக கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு இந்து,பௌத்த கலாசார பேரவையின் செயலாளர் திரு.M.T.S.Ramachandran அவர்கள் தமிழ்மொழி கற்பிப்பதற்காக தமிழ் ஆசிரியர் ஒருவரின் மாதாந்த சம்பளத்தை அந்த விகாரைக்கு பொறுப்பான வணக்கத்துக்குரிய நந்தன தேரரிடம் கையளிப்பதையும் இந்து, பௌத்த கலாசார பேரவையால் தமிழ் மாணவர்களுக்கு எவ்வாறு சிங்கள மொழியை கற்பிக்கின்றதோ அதேபோல் சிங்கள பௌத்த பிக்குகளுக்கும் தமிழ் மொழியை கற்பிப்பதில் அவர்களின் விருப்பத்தோடு இத்திட்டத்தை இலங்கை முழுவதிலும் செயற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக இது எடுக்கப்பட்டுள்ளது. திரு.M.T.S.Ramachandran அவர்கள் தன்னுடைய எளிமையான பழக்கவழக்கத்தாலும் சமூக சேவையாலும் இதை நடைமுறைப்படுத்தியுள்ளார். இவர் மாண்புமிகு ஜனாதிபதியின் புலம்பெயர் மக்களின் இணைப்பாளரும் ஆலோசகரும் என்பது குறிப்பிடத்தக்கது. (சி-6488)



கல்கிசை சமுத்திரா சந்த விகாரையின் பிரதம குரு விறிகொல நந்தன தேரர் அவர்களும் இந்து,பௌத்த கலாசார பேரவையின் செயலாளர் திரு. M.T.S.Ramachandranனும் அவர்களின் பொருளாளர் LUP Mendies அவர்களும் பௌத்தபிக்கு மாணவர்களுடன் படத்தில் காணப்படுகின்றனர்.

# கிழக்கில் கைதுகள் குறித்த சம்பந்தனின் கடிதத்திற்கு பதில் வழங்குவதில் அசமந்தம்

## கொழும்பு ஆங்கில நாளிதழ் சுட்டிக்காட்டு

(திருகோணமலை)

**இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தாம் அண்மையில் எழுதிய கடிதத்துக்கு எந்தப் பதிலும் அனுப்பப்படாதது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சீற்றமடைந்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

கிழக்கில் அண்மைக்காலமாக தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவதை தடுத்து நிறுத்துமாறும் அவர்களை விடுதலை செய்யுமாறும் கோரி ஜனாதிபதிக்கு இரா.சம்பந்தன் கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்திற்கு ஜனாதிபதி இதுவரை பதில் அனுப்பாதது குறித்து இரா. சம்பந்தன் கடும் கோபமடைந்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் மேதின பேரணியில் கலந்துகொண்ட பின் திருகோணமலை திரும்பியுள்ள அவர் கிழக்கு மாகாணத்தில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது குறித்து இலங்கை அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

போர் முடிவுக்கு வந்து மூன்றாண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் இளைஞர்கள் கைது செய்யப்படுவதற்கு எந்தக் காரணமும் கூற முடியாது. விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் அல்லது சந்தேகிக்கப்படுவர்களை குறிவைத்து இலங்கை இராணுவமும் பொலிஸாரும் கிழக்கில் தேடுதல் நடத்துகின்றனர்.

போருக்குப் பிந்திய கைதுகள் ஒரு இடைவிடாத பிரச்சினையாக இருந்து வருகின்றது.

எமது கவலைகளுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்க வேண்டும்.

தொடர்ச்சியாக நடைபெற்று வரும் தேடுதல் மற்றும் கைது நடவடிக்கைகள் எமக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளன. நான் குச்சவெளியில் இருந்த போது அங்கு 30 இளைஞர்கள் கைதாகி கொண்டு செல்லப்பட்டு பொலிஸ்நிலையத்தில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டனர்.

அவர்களை கைது செய்துவந்த தீவிரவாத தடுப்பு உதவி பொலிஸ் அத்தியட்சகர் 30 நிமிடங்களில் அவர்களை விடுவிப்பதாக உறுதியளித்தார்.

ஆனால் அவர்களில் 5 பேர் இதுவரை விடுவிக்கப்படவில்லை. அவர்கள் பூசா மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எழுதிய கடிதத்திற்கு பதில்கூட அனுப்பத் தவறியுள்ளதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார். (அ-2)

# அனைத்து தமிழ் மக்களும் ஜனாதிபதி மீதே நம்பிக்கை வைக்க வேண்டும்

## பிரபா கணேசன், கூறுகிறார்

தென்பகுதியில் மேதின பொதுக் கூட்டத்தை நடத்த முடியாதளவுக்கு வங்குரோத்து நிலைக்கு ஐக்கிய தேசிய கட்சி உள்ளாகி இருப்பதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபாகணேசன் எம்.பி அண்மையில் தெரிவித்தார்.

ஐ.ம.சு முன்னணியின் ஐக்கிய மே தினப் பொதுக்கூட்டம் கொழும்பு மாநகரசபை மைதானத்தில் ஜனாதிபதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மே தினம் என்பது தொழிலாளர்களின் தினமே. உழைக்கும் வர்க்கத்தினர் இரத்தம் சிந்தி பெற்றுக் கொண்டது தான் இத்தினம்.

இந் நாட்டின் மேம்பாட்டுக்காக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 150 வருடங்களுக்கு மேலாக வியர்வை சிந்தி உழைத்து வருகின்றார்கள். அவர்களின் மேம்பாட்டுக்காக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பலவிதமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதனையிட்டு ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் நன்றிகளை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன். என்றாலும் பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

இந் நாட்டில் வாழுகின்ற அனைத்து தமிழ் மக்களும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் மீதே முழுமையாக நம்பிக்கை வைக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமக்கு வெளிநாடுகள் உதவி செய்யுமென நம்பிக் கொண்டிருக்கின்றனர். அந்த நம்பிக்கை எதனையும் பெற்றுத் தராது. அதனால் தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீது முழுமையாக நம்பிக்கை வைத்து தமக்குரிய அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்றார். (அ-2)

# போக்குவரத்தை சீராக நடத்த பொதுமக்கள் கோரிக்கை

(மிருசுவில்)

ஏ-35 வீதி, யாழ்ப்பாணம், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு வீதி இராணுவத்தினரால் போக்குவரத்திற்கு அனுமதித்த பின்னர் அனைத்து யாழ்.- முல்லைத்தீவு பேருந்துகளும் அவ்வீதியாலேயே பயணிக்கின்றன.

இதன் காரணமாக வற்றாப்பளை -முள்ளியவளை ஊடான முல்லைத்தீவு போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் மற்றும் அரச சார்பற்ற ஊழியர்கள் எனப் பலரும் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் பெரும் சிரமப்படுகின்றனர்.

இவற்றை விட தனியார் பேருந்துகளில் வெவ்வேறுபட்ட போக்குவரத்து கட்டணம் அறவிடுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக முள்ளிவளை ஊடான முல்லைத்தீவு வரையான போக்குவரத்தினை சீராக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு மக்களும் அரச ஊழியர்களும் உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-85)

# பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெருவிளையாட்டு போட்டி முடிவுகள்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடைபெற்ற மாவட்டமட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலகரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற பிரதேசப் பிரிவுகளின் பெயர் விபரம் வருமாறு;

**கபடி (ஆண்)**

கரைச்சி பிரதேச பிரிவு அணி

பூநகரி பிரதேச பிரிவு அணி

**கபடி (பெண்)**

கரைச்சி பிரதேச பிரிவு

பூநகரி பிரதேச பிரிவு

**கரப்பந்து (ஆண்)**

கரைச்சி பிரதேச பிரிவு அணி

பூநகரி பிரதேச பிரிவு அணி

**கரப்பந்து (பெண்)**

கரைச்சி பிரதேச பிரிவு அணி

கண்டாவளை பிரதேச பிரிவு அணி

**கிரிக்கெட் (ஆண்)**

கரைச்சி பிரதேச பிரிவு அணி

பூநகரி பிரதேச பிரிவு அணி

**கிரிக்கெட் (பெண்)**

கரைச்சி பிரதேச பிரிவு அணி

கண்டாவளை பிரதேச பிரிவு அணி

**வலைப் பந்து (பெண்)**

கரைச்சி பிரதேச பிரிவு அணி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவு அணி

**உதைபந்து (ஆண்)**

பூநகரி பிரதேச பிரிவு அணி, கரைச்சி பிரதேச பிரிவு அணி

**உதைபந்து (பெண்)**

கரைச்சி பிரதேச பிரிவு அணி, பூநகரி பிரதேச பிரிவு அணி. (அ-2-84)



நாட்டுக்கும் ஜனாதிபதிக்கும் யுத்த வீரர்களுக்கும் ஆசி வேண்டி ஜய பிரித்த பிரார்த்தனை நிகழ்வு கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# 70 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

சிறுவர் நிதியத்தின் உதவியுடன் நல்லூர் கிராமசேவகர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் விவசாயிகள் 70 பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் சென்ற வாரம் வழங்கப்பட்டது. அப்பகுதி கிராமசேவை அலுவலர் கமக்கார அமைப்பினரின் ஒழுங்குபடுத்தலில் வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் முன்னர் உதவிகள் கிடைக்காதவர்களில் இருந்தே இப் பயனாளிகள் தெரிவாகியுள்ளனர்.

அத்தோடு 150 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டம் செய்யக்கூடிய சகல மரக்கறி விதைகளும் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன. (அ-2-84)

# இரண்டாம் உலக யுத்தம்


## ஒரு மீள்பார்வை 120



புடாபெஸ்டில் சோவியத் படைகள்

சோவியத் இராணுவம் ஹங்கேரியினுள் காலடி எடுத்து வைத்ததை அடுத்து சோவியத் யூனியினின் அரசுத் தற்காப்புக்குக் கமிட்டியின் கட்டளைக்கேற்ப 2-வது உக்ரேனிய சேனையின் இராணுவக் கவுன்சில், சோவியத் துருப்புகளின் விடுதலைப் பணியில் அவற்றிற்கு சகல விதங்களிலும் உதவி புரியுமாறு ஹங்கேரிய மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. ஹங்கேரியின் நிலப்பரப்பில் ஏதாவது ஒரு பகுதியைப் பிடிக்கும் நோக்கத்தோடு சோவியத் இராணுவம் ஹங்கேரியினுள் நுழையவில்லை. மாறாக இராணுவத் தேவையின் காரணமாக, நாடு பிடிப்பாளனாக இல்லாமல் ஹங்கேரிய மக்களை பாசிச- ஜேர்மனியக் கொடுமையிலிருந்து விடுவிக்கும் சக்தியாகத்தான் சோவியத் இராணுவம் ஹங்கேரியின் உள்ளே காலடி எடுத்துவைத்தது. விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் ஹங்கேரிய ஆட்சி உறுப்புகளும் பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பு முறையும் நிலவக்கூடிய பழக்க வழக்கங்களும் அப்படியே இருக்கும் என்றும் குடிமக்களின் எல்லா உரிமைகள் மற்றும் உடைமைகளையும் சோவியத் இராணுவ ஆட்சியாளர்கள் பாதுகாப்பார்கள் என்றும் இந்த ஆவணத்தில் விளக்கிக்கூறப்பட்டிருந்தது. இதோடு கூட விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் சோவியத் இராணுவ நிர்வாக உறுப்புகள் தோற்றுவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

சோவியத் துருப்புகளுக்கும் ஸ்தல ஹங்கேரிய மக்களுக்கும் இடையில் நல்லுறவுகளை நிலைநாட்டுவதற்கு இந்த அறைகூவல் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. ஹங்கேரியில் இராணுவ நடிவடிக்கைகள் நடைபெற்ற காலம் முழுவதும் சோவியத் இராணுவ உறுப்புகள் மற்றும் இராணுவ நிர்வாக உறுப்புகளும் நடவடிக்கை முழுவதன் அடிப்படையாக விளங்கிய முக்கிய ஆவணமாக இது திகழ்ந்தது. இப்பெரும் பணியின் பயனாய் சோவியத் துருப்புகளுக்கும் மக்களுக்கும் இடையில் நல்லண்டை உறுவுகள் நிலவின. கம்யூனிஸ்டுக்கட்சியின் ஸ்தல குழுக்கள் மற்ற முற்போக்குக் கட்சிகள், ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் சுறுசுறுப்பாயின. தொழிற் சங்கங்கள் புத்துயிர்ப்புப் பெற்றன. அரசியல் காரணங்களுக்காக நாடு துறந்து சென்றவர்களும் ஹங்கேரியக் கம்யூனிஸ்ட் கட்சி அயல்நாட்டுக் காரியாலய உறுப்பினர்களும் அக்டோபரில் திரும்பிவரத் தொடங்கினார்கள். நவம்பரில் சேகேத் நகரில் இவர்கள் ஒரு மையத்தை உருவாக்கினார்கள். விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் கட்சி ஸ்தாபனங்களுக்கு தலைமை தாங்கும் தற்காலிக மத்தியக் கமிட்டியாக இது இயங்கியது. சேகேத் மையம் புடாபெஸ்டில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமறைவு மத்தியக் கமிட்டியுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. இதில்தான் அ.அப்ரோ, யானஷ் காடர் மற்ற கம்யூனிஸ்ட் பிரமுகர்கள் இருந்தனர். சோவியத் துருப்புகள் ஹங்கேரியப்பரப்பினுள் காலடி எடுத்துவைத்த முதல் நாட்களில் இருந்தே ஹங்கேரியின் முற்போக்குச் சக்திகள் நாட்டு வாழ்வை ஜனநாயகமயப்படுத்துவதில் இறங்கின. தெப்ரேத்சன் திசையில் எதிரி முறியடிக்கப்பட்டதன் மிகமுக்கிய அரசியல் விளைவு இதில்தான் அடங்கியிருந்தது.



புடாபெஸ்டில் சோவியத்தின் டாங்கி அணிகள்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

சோவியத் துருப்புகளின் தெப்ரேத்சன் நடவடிக்கையில் மொபைல் துருப்புகள் திறமையாகப் பயன்படுத்தப்பட்டன. வலுவான தற்காப்பை ஏற்படுத்த முடியாமலிருந்த எதிரியின் மீது விரைவாக பலத்த தாக்குதலைத் தொடுக்கும் அவசியத்தால் சேனையின் முதல்படை வரிசையில் டாங்கிப் படை பயன்படுத்தப்பட்டது. மாறி வந்த நிலவரத்தை சரியாகவும் உரிய நேரத்தில் மதிப்பிட்டது, நன்கு இயங்கும் சக்தியுள்ள மொபைல் பிரிவுகளைத் திறமையாகப் பயன்படுத்தியது. சக்திகளை விரைவாக புதிய திசைக்கு மாற்றியது ஆகியவற்றில் சோவியத் படைத் தலைமையின் உயர்வான போர்த்தந்திரக்கலை நன்கு வெளிப்பட்டது.

மேலும் தெப்ரேத்சன் நடவடிக்கையில் ஒரே ஒரு படை வரிசையை மட்டுமே உடைய போர்முனை இருந்தது, துருப்புகள் கணிசமான அளவு படை மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டன, (இவை எதிரியின் தற்காப்பின் மீது பலத்த முதல் தாக்குதலைத் தொடுக்க அனுமதித்தன) போர் முனை முழுவதும் இடையறா தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கடைசியாகக் கூறப்பட்ட அம்சம் ஹிட்லர் துருப்புகளின் சக்திகளைக் கட்டிப்போட்டு, சோவியத் துருப்புகளின் பிரதான தாக்குதல்களின் திசை சம்பந்தமாக எதிரியின் படைத் தலைமையைக் குழப்பத்திற்கு உள்ளாக்கியது.

சோவியத் படைத் தலைமை, பெத்ரேத்சன் நடவடிக்கைக்குப்பின் இடைவெளியின்றி உடனடியாக புடாபெஸ்டு நடவடிக்கையைத் தொடங்குவதென முடிவு செய்தது. இவ்வாறு முடிவெடுத்தபோது ஐரோப்பாவில் பாசிச ஜேர்மனியின் கடைசி கூட்டு நாட்டின் தலைநகருக்கு இருந்த விசேட முக்கியத்துவம் கவனத்தில் கொள்ளப்பட்டது. ஹங்கேரிய தொழிற்துறை நிலையங்களில் 50 சதவிகிதத்திற்கும் மேலாக இங்கே குவிக்கப்பட்டிருந்தது, கிட்டத்தட்ட இவையெல்லாமே வேர்மஹ்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இயங்கின.


அனுகூலமான போர்த்தந்திர- நேரடி நடைமுறை நிலைமைகளும் புடாபெஸ்டின்மீது உடனடியாகத் தாக்குதலைத் தொடுக்கக் கட்டளையிட்டன. பாசிச ஜேர்மனியப் படைத் தொகுதி தெற்கின் முக்கிய சக்திகள் நியரெத்ஹாஸா-மிஷ்கோல்த்ஸ் திசையில் இயங்கின. புடாபெஸ்டின் வடகிழக்கு நுழைவாயில்களை மூடி பாதுகாக்க இவற்றைப் பயன்படுத்தவும் தென்கிழக்கு நுழைவாயில்களை சண்டைகளில் பலம் குன்றியிருந்த 3-வது ஹங்கேரியப்படையின் துருப்பு களையும் ஜேர்மனிய டாங்கி மற்றும் மோட்டார் டிவிசன்களையும் கொண்டு பாதுகாக்கவும் ஹிட்லரின் படைத் தலைமை முடிவெடுத்தது. புடாபெஸ்ட் திசையில் தற்காப்பில் பாசிசத் துருப்புகளின் அடர்த்தி தெப்ரேத்சன் திசையிலிருந்ததைவிட, 2.1 மடங்கு குறைவாக இருந்தது. 2-வது உக்ரேனிய சேனையின் பிரதான சக்திகள் இதன் மத்தியப்பகுதியிலும் வலப்பிரி விலும் குவிக்கப்பட்டிருந்தன. 35 டிவிசன்களையும் 3 பிரிகேடுகளையும் கொண்ட தெற்குப்படைத் தொகுதியின் சக்திகள் இவற்றிற்கு எதிராக நின்றன.

ஹங்கேரி-போலந்து நட்புறவுச் சின்னம்



(தொடரும்)

# சம்பந்தன் கையில் தேசியக்கொடி; நாட்டுக்கு நல்லதல்ல- குணதாச



(கொழும்பு)

**இலங்கையின் தேசியக்கொடியை சம்பந்தன் கையில் எடுத்திருப்பது நாட்டுக்கு நல்லதல்ல. நாட்டைப் பிரிக்கும் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் சதித்திட்டம் தற்போது அரங்கேற்றப்பட்டுள்ளது.**

**அரசாங்கம் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர எச்சரித்துள்ளார்.**

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐ.நா.செயலாளர் பான் கீ மூன், இந்திய விஜயம் மற்றும் எமது நாட்டுக்கு எதிரான அறிக்கை என்பவற்றைத் தொடர்ந்து அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இவையனைத்தும் பிரபாகரனின் தமிழீழக் கனவை நனவாக்குவதற்கான இந்தியா, அமெரிக்கா,பிரிட்டன் ஆகியன இணைந்து அரங்கேற்றும் சதித்திட்டத்தின் உச்சக்கட்டமாகும். இது பயங்கரமான சூழ்நிலையாகும்.

இதனை நிறைவேற்றிக் கொள்வதற்காக பல்வேறு சதித்திட்டங்கள் நாட்டுக்குள் முன்னெடுக்கப்படுகின்றன.

முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்கப்படும் பின்னணியிலும் அமெரிக்காவின் இலங்கை ஏஜென்டுகள் செயற்படுகின்றன. இதன்மூலம் உலக முஸ்லிம் நாடுகள் எமக்கு வழங்கி வரும் ஆதரவை இல்லாதொழிப்பதே திட்டமாகும்.

லிபியாவைப் போன்று இலங்கையில் புலி ஆதரவாளர்களான இளைஞர்களையும் முஸ்லிம் இளைஞர்களையும் மோதவைக்கும் திட்டம் அமெரிக்காவிடம் உள்ளது. லிபியாவில் காண்பித்த விளையாட்டை இங்கு காண்பிக்க திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் தேசியக்கொடியை சம்பந்தன் கையில் எடுத்திருப்பது நாட்டுக்கு நல்லதல்ல. செல்வநாயகத்தின் கோட்பாட்டை கையிலெடுத்துள்ளார். அதாவது ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகார பரவலாக்கலை கோரியுள்ளார்.

அதாவது முதலில் காணி, பொலிஸ் அதிகாரமில்லாத பரவலாக்கலை பெற்றுக் கொண்டு அதன் பின்னர் அவ் அதிகாரங்களை இந்தியா,அமெரிக்காவின் அழுத்தங்களுடன் பெற்றுக் கொள்வதே திட்டமாகும். இது நிறைவேறினால் தனித் தமிழீழம் தானாக உருவாகும்.

எமது நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டதா இல்லையா? என்பதை ஆராய பிரிட்டனுக்கு அதிகாரம் கிடையாது. பிரிட்டன் தனது வேலையை பார்த்துக் கொண்டு சிவனே என்று இருக்க வேண்டும். அதை விடுத்து எமது பிரச்சினையில் மூக்கை நுழைத்தால் மூக்குடைபடும்.

இலங்கையைப் பிரித்து பிரபாகரனின் கனவை நனவாக்க பலமுறை சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் அரசாங்கம் விழிப்பாக செயற்பட வேண்டும். இந்த சதிகாரர்களிடமிருந்து நாட்டை பாதுகாக்கும் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

(அ-2)

## வெளிநாட்டு அழுத்தங்கள் புலிகளை மீண்டும் தோற்றுவிக்க வழிவகுக்கும்

## அமைச்சர் மைத்திரிபால

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் புலிப்பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்காது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், புலிகள் மீண்டும் தலைதூக்குவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதன் வெளிப்பாடகவே வெளிநாட்டு அழுத்தங்களும் வருகின்றன. என்றாலும் என்னதான் அழுத்தங்கள் வந்தாலும் அவற்றுக்கு தலை சாய்க்காது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் துணிந்து முகம்கொடுத்து வருகின்றது. என்னதான் அழுத்தங்கள் வந்தாலும் புலிப்பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க எமது ஜனாதிபதி ஒருபோதும் இடமளிக்க மாட்டார். அதில் அவர் உறுதியாக உள்ளார். அதனால் புலிகள் மீண்டும் தலைதூக்க நேரடியாகவோ மறைமுகமாகவோ எவரும் உதவக் கூடாது. அதற்கு உதவுவதே பெரும் பிழை. புலிப்பயங்கரவாதத்திற்கு உதவியவர்களுக்கு ஏற்கனவே எமது மக்கள் எப்படி பாடம் புகட்டி இருக்கின்றார்கள் என்பதை நாமறிவோம். அப்படியானவர்களை எமது மக்கள் முழுமையாக நிராகரித்ததே வரலாறு என்றார். (அ-2)

## சர்வதேச கடற்பரப்பில் மீன்களை பிடித்து ஏற்றுமதி செய்யத்திட்டம்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு


சர்வதேச கடற்பரப்பில் மீன்களைப் பிடித்து ஏற்றுமதி செய்யும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு குறிப்பிடுகின்றது.

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான வசதிகள் இலங்கையிடம் இன்னும் காணப்படவில்லை என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கின்றார்.

எனினும் வெளிநாட்டு கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் மீன்வேட்டையில் ஈடுபடுவதால் இலங்கைக்கு பொருளாதார ரீதியாக எவ்வித நன்மையும் கிடைப்பதில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜப்பானின் பாரிய மீன் வர்த்தக நிறுவனம் ஒன்றுடன் ஆழ்கடல் மீன்பிடி தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் குறிப்பிட்டார். அந்த நாட்டிலிருந்து பாரிய மீன்பிடி கப்பல்களை தருவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் கூறினார்.

(அ-2)



UR.Friend Foundation நிறுவனத்தினால் புத்தூர் சொக்கதிடல் மகளிருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மேற்படி நிறுவனத் தலைவர் க.செவ்வேள், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த ஆகியோர் இணைந்து தையல் இயந்திரம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## சிங்கள ஊடகவியலாளர்கள் தடுத்து வைக்கப்பட்டனர்

கொழும்பு தெமட்டகொட பொலிஸ் குற்றத் தடுப்பு நிலையத்தை தொலைக்காட்சிக்காக படம் பிடித்த இரண்டு ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுவர்ணவாஹினி தொலைக்காட்சியின் செய்தியாளரான ஸ்ரீ அரவிந்த மற்றும் ரண்டிவ செய்தித்தாளின் செய்தியாளர் சஞ்சீவ சிந்தக ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

கொலன்னாவையில் கொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிக்காவுக்கு கொலை அச்சுறுத்தல் என்ற செய்தி சம்பந்தமாக ரண்டிவ செய்தி தாளின் ஆசிரியரும் செய்தியாளரும் நேற்று முன்தினம் தெமட்டகொட பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள் இருவரும் குறித்த பொலிஸ் நிலையத்துக்கு செல்வதை சுவர்ணவாஹினி தொலைக்காட்சி செய்தியாளரும் ரண்டிவ செய்தியாளரும் படம் பிடித்தனர்.

எனினும் தமது அலுவலகத்தை படம் பிடிக்க முடியாது என்று பொலிஸார் தெரிவித்து இரண்டு செய்தியாளர்களையும் தடுத்து வைத்தனர்.

இந்த நிலையில் இரண்டு செய்திளார்களும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கிய பின்னர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர். (அ-2)

# அன்பை கொண்டாடுதல்



## ஆன்மீகம் 45

### குற்றச்சாட்டு

யாராவது உங்களை எதற்காவது குற்றம்சாட்டினால், நீங்கள் அதை ஒரு பாரமாக உணர்ந்து, அதைப் பற்றியே எல்லோரிடமும், உங்களைச் சுற்றிலும் ஒரு இனிமையற்ற உணர்வை பரப்புகிறீர்கள். அந்த சமயத்தில் உங்களை நீங்களே தட்டி எழுப்பிக் கொண்டு "நாம் நாமாகத்தான் இருக்கிறோம்; எதுவும் நம்மைப் பாதிக்காது" என்று உணர வேண்டும். நடப்பவை எல்லாமே நீங்களே தயாரித்த நாடகம் போன்றது. இப்படியே மீண்டும் மீண்டும் செய்து வந்திருக்கிறீர்கள்! வாழ்க்கையில் நீங்கள் எதிர்கொள்ளும குற்றச்சாட்டு கள் எல்லாமே உங்களுடைய நினைப்பு அல்லது தயாரிப்புதான். இதை நன்கு அறிந்துகொண்டுவிட்டால், நீங்கள் சுதந்திரமாகவும், இலகுவாகவும் உணர்வீர்கள்!

உங்கள் அனுபவங்கள் யாவற்றிற்கும் நீங்களே பொறுப்பு ஏற்றுக் கொண்டால், அது உங்களை சக்தி வாய்ந்தவராக மாற்றுகிறது. மேலும், இவ்வாறு பொறுப்பெற்றலானது, முணுமுணுத்தல், பழிக்குப்பழி வாங்குதல், தேவையற்ற விளக்கங்கள் அளித்தல் மற்றும் எதிர்மறையான நோக்கங்கள் ஆகியவற்றிற்கு முற்றுப் புள்ளி வைத்து விடும்.

♦ யாரேனும் உங்களை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ குற்றம் சாட்டினால், நீங்கள் என்ன செய்வீர்கள்?

♦ அதிலிருந்து ஒரு பாடம் கற்றுக் கொள்ளாமல் முற்றிலும் அதை நீக்கி விடுகிறீர்களா?

♦ மற்றவர்களிடம் அவர்களது நேரத் தையும் வீணடித்துக்கொண்டு அதைப் பற்றி பேசுகிறீர்களா?

♦ உங்களுடைய குறைகளை நினைத்து, சுயபச்சாதாபம் அடைகிறீர்களா?

♦ மற்றவர்களை நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்களா?

♦ விடயத்தை பொதுமைப்படுத்தி



பிச்சினைக்கு முடிவில்லாமல் அடக்கடி அலசிக்கொண்டே இருப்பீர்களா?

மேற்கூறியவாறு எல்லாம் செய்தால் நீங்கள் ஞானத்தோடு வாழவில்லை என்று பொருள்! நீங்கள் **வாழும் கலை அறிமுகப் பயிற்சியை குறைந்த பட்டசம் 6 தடவைகளாவது** மேற் கொள்ளவேண்டும்; மேலும் இந்த **வாராந்திர ஞா்னத்தொகுப்பையும் படிக்கவேண்டியது** அவசியமாகிறது.

**எப்படியும் நீங்கள் பின்வருவனவற்றைக் கடைப்பிடித்தால், :-**

சிரித்துவிடுங்கள், கவனத்திலேயே எடுத்துக்கொள்ளாதீர்கள்!

ஒன்றுமே நடக்காததுபோல் இருந்து, அதைப்பற்றிப்பேசவோ, நடவடிக்கை எடுக்கவோ லாயக் கற்றது, என்று கொள்ளுங்கள்!

விசனங்களையும் குற்றச்சாட்டுகளையும், நகர்ந்து செல்லும் மேகக் கூட்டம்போல், எடுத்துக்கொண்டு, அதை ஒரு கேளிக்கையாகப் பாவித்துக் கொள்ளுங்கள்!

இனிமையற்ற எதிர்மறையான தருணங்களை, அவற்றிலேயே குளிர் காய்வதை ஊக்குவிக்காமல் விட்டு விடுங்கள்.

தேவையற்ற குற்றச்சாட்டு களுக்கு தீர்ப்பு கூறாத நிலையில் உறுதியாக அசைக்க முடியாத அளவில் உங்களைப் பொறுத்த மட்டில் மாறாத அன்புடன் இருங்கள்.

அமைதியாக, உறுதியாக, உங்களது மூன்னேற்றம், அறிவுபற்றி கர்வம் சிறிதும் கொள்ளாதவராக இருங்கள்.

இப்படியெல்லாம் இருந்தீர்களானால் உங்கள் குருவிற்கு உங்களால் பெருமை, உங்கள் ஆசிரியருக்கும் பெருமை!!!

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

(தொடரும்)


# உங்கள் கைரேகை பலன்கள் 45

## ரேகைகளும் கிரகங்களும்

### புத்தி இரேகை அமைப்பும் பலாபலன்களும்

4. குறுகிய புத்தி இரேகையின் இறுதியில் ஒரு நக்ஷத்திரக்குறியிருந்தால் உயிர் ஆபத்து ஏற்படும். நக்ஷத்திரக்குறி மூளையில் திடீரென உண்டாகக் கூடிய அதிரடியைக் குறிக்கும். அதாவது, இடி சப்தம் உண்டாகும்.


புத்தி இரேகையின் இறுதியில் அணைபோல் குறுக்கிட்ட சிறு இரேகைக் கிராஸ் குறியிருந்தாலும் ஆபாத்தைக் குறிக்கும். குறுகிய இரேகையையடுத்து ஏதாவது தடையைக் காட்டும் குறியிருந்து வரும். விபரீதத்தைக் காணும் போதெல்லாம் இரண்டு கை இரேகைகளையும் ஒத்திட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.



இடக்கையில் இரேகை சிறியதாயிருந்து, வலக்கையில் இரேகை நீளமாயும் நன்கு அமையப்பெற்றுமிருந்தால் மனோவிசாலத்தால் முன்னேற்றமடைந்து வருவதைக் குறிக்கும்.

இரண்டு கைகளிலும் இருதய இரேகையின்றிப் புத்தி இரேகை மாத்திரம் குறுக்கிட்டு நீளமாய் அமைந்திருந்ததால் பேராசையை முன்னிட்டே எல்லா விவகாரங்களும் நடைபெற்றுவரும். அளவுக்கு மிஞ்சின ஆசையுடையவர் என்பது பலர் அறிய விளங்கும். புத்தி இரேகையில் எவ்விதக் குற்றங்குறைகள் இருந்தாலும் மனத்தின் சங்கட நிலையைக் குறிக்கும். மனக்கவலையே சிலருக்கு நோய்க்குக் காரணமாவதால், ஆயுள் இரேகையில் காணப்படும் குற்றங் குறைகளைப் புத்தி இரேகை ஊர்ஜிதப் படுத்தும். மூளைத் தொந்தரவால் ஏற்படும் நோய் தேகத்தில் பலவாறாகத் தோன்றும். புத்தி இரேகையில் குற்றங் குறை காணப்படுங்கால் ஆயுள் இரேகையோடு ஒத்திட்டுப்பார்க்க வேண்டும்.

5. புத்தி இரேகை உற்பத்தியிலிருந்து நேரே சென்றிருக்கிறதா அல்லது வளைவு காணப்படுகிறதா என்றறிய வேண்டும். உற்பத்தியில் புத்தி இரேகை ஆயுள் இரேகையோடு ஒன்றுபட்டு கொஞ்சதூரம் இணை பிரியாதிருந்து பிறகு கிளைபோல் செல்லும். ஒன்றுபட்டுள்ள கால அளவு இளமையில் தன்னைப்பற்றி எவ்விதக் கவலையும் அற்றவராயிருப்பர் என்பதைக்குறிக்கும். எவ்வளவு காலம் புத்தி இரேகை ஆயுள் இரேகையோடு ஒன்றுபட்டிருக்கிறதோ, அதுவரை தன்னம்பிக்கையற்றவராவர். இவ்விதம் சுமார் பத்து அல்லது பன்னிரண்டு வருடம் வரையிலிருக்கும், புத்தி இரேகை படிப்படியாய் மெல்லியதாயும், இறுதி கூராயுமிருந்தால் நுண்ணறிவுடையவராயிருப்பார். எதையும் சுலபமாய் அறிந்துகொள்வர். தம்மைப் பற்றி எவரும் குறை கூறினால் சற்றும் சகித்திரார். மற்றவர் மனம் சங்கடப் படும்படி பேசமாட்டார்.




விரல் கட்டையாயும், கை சதுரமாய் அல்லது சங்குபோலிருப்பின், புத்தி அவ்வளவு கூர்மையாயிராது.

6. இனி ஆறாம் படத்தைப் பாருங்கள். புத்தி உற்பத்தியில் ஆயுள் இரேகையுடன் சம்பந்தமின்றித் தனித்திருக்குமாயின், இளமையிலிருந்தே கூர்மையான புத்தியுடையவரென்பதைக் குறிக்கும். இன்னும் தன்னம்பிக்கை தன் காரியத்தில் பிறர் ஆதரவின்றி நடத்தல், சுயமாய் யோசனை செய்தல், தைரியமாயிருத்தல் முதலானவைகளையும் குறிக்கும். எவ்வளவுக்குப் புத்தி இரேகை ஆயுள் இரேகையினின்று விலகி உற்பத்தியாகிறதோ அவ்வளவுக்குத் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் அதிகமாக்கி மூடத்தனத்தைக் கொடுக்கும். புத்தி இரேகை ஆயுள் இரேகையை விட்டு அகன்று உற்பத்தியாகி, கை விரல்களும் கூராய் அமைந்து கையும் ஒடுக்கமாய் இருந்தால் அசாத்தியமான தன்னம்பிக்கை கொண்டு புதிய யோசனைகள் செய்து பெருந் தவறுகளை செய்வர். விரல்களும் சிறியனவாய் இருந்தால் மனோ வேகத்தைத் துரிதமாக்கிவிடும். பிரிவினை எவ்வளவுக்கு அகன்று விடுகிறதோ அவ்வளவுக்குத் தன்னம்பிக்கையுள்ள தன்னந்தனியே நிலைமையைக் குறிக்கும்.

**சக்தி**

(தொடரும்)

# பிரகீத் குறித்த விவகாரத்தை கையிலெடுக்கிறது அமெரிக்கா

## இலங்கைக்கு அடுத்த தலையிடி

**கடத்தப்பட்டு காணாமற் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட விவகாரம் குறித்து அமெரிக்கா கூடிய கவனம் செலுத்தி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கையில் ஊடகவியலாளர்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த தமது பார்வையின் ஒரு பகுதியாக எக்னெலிகொட விவகாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஊடகத்துறையினர் மீது மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல்கள், தாக்குதல்கள் குறித்தும் அமெரிக்கா முதன்மைப்படுத்தவுள்ளது.

உலக ஊடக சுதந்திர நாள் கொண்டாடப்படும் நிலையிலேயே இலங்கையில் ஊடகத்துறை எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து அமெரிக்கா முக்கிய கவனம் செலுத்தவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

காணாமற் போன ஊடகவியாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பான வழக்கில் நீதி வழங்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பது அமெரிக்காவின் நோக்கம் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் விரைவில் அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி இந்து மத குரு பீட ஒன்றியத்தில் இயங்கும் ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரி யாழ்ப்பாணக் கிளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை, சங்கானை, ஆனைக்கோட்டை ஆகிய கிளை நிறுவனங்களில் இக்கற்கைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கவுள்ளதாக ஈ.சிற்றி ஆங்கிலக் கல்லூரி அதிபர் லயன் ஜெ. றஜீவன் தெரிவித்துள்ளார். (அ-9)

# இலங்கையில் தொடர்ந்தும் ஊடக அடக்குமுறை

## பொதுநலவாய ஊடகவியலாளர் சம்மேளனம் சுட்டிக்காட்டு

இலங்கையில் தொடர்ந்தும் செய்தித் துறையின் மீது அடக்குமுறையும் வன்முறையும் தணிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் ஜனநாயத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் பொதுநலவாய ஊடகவியலளர் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

சுதந்திர ஊடகமுறை மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பன ஊடகங்களின் மீது பிரயோகிக்கப்படுவதாக பொதுநலவாய ஊடகவியலாளர் சம்மேளன தலைவர் ரிட்டா பாய்னே தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலேயே இந்த நிலை கடுமையாக காணப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் 2011 ஆம் ஆண்டு 179 செய்தியாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். 67 செய்தியாளர்கள் கொல்லப்பட்டனர். 2012 ஆம் ஆண்டில் 17 செய்தியாளர்கள் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில் பாகிஸ்தான், செய்தியாளர்களுக்கு எதிரான பயங்கர நாடாக கருதப்படுகின்றது. தென்னாபிரிக்காவும் செய்தித்தணிக்கையை மேற்கொண்டு வருவதாக பொது நலவாய ஊடகவியலாளர் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# நாடு கடத்தப்பட்டவர்கள் பாதுகாப்பாக உள்ளனர்

## அவுஸ். அரசு தெரிவிப்பு

அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் அந்த நாட்டில் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் குடிவரத்துறை அமைச்சர் கிரிஸ் போவன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டவர்கள் யாவரும் உண்மையான அகதிகள் இல்லாதபடியால் அவர்களுக்கு இலங்கையில் பாதுகாப்பு பிரச்சினை இருக்கப்போவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்குள் அகதிகளாக வருபவர்களில் யாரை திருப்பியனுப்புவது, யாரை திருப்பயனுப்பக்கூடாது என்பது தொடர்பில் முழுமையான நடைமுறைகளை தமது அரசாங்கம் கடைப்பிடிப்பதாக போவன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நாட்டுக்கு திரும்பினால் பாதுகாப்பு பிரச்சினையில்லை என்ற அடிப்படையில் இணங்காணப்படுவோரையே அவுஸ்திரேலியா திருப்பியனுப்புகிறது என்றும் போவன் தெரிவித்துள்ளார்.

போவன் இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(பூந்தோட்டம்)

கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் கல்வி அமைச்சினால் நடத்தப்படும் வவுனியா தெற்கு கல்வி வலய பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் நோக்கில் 5 வயது தொடக்கம் 9 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பாக இருப்போம் என்ற நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றைய தினம் ஆரம்பமாகி இன்று வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம், தாலிக்குளம் அ.த.க. பாடசாலை, கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம், பாரதிபுரம் பாரதி வித்தியாலயம், இராஜேந்திர குளம் அ.த.க. பாடசாலை, வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், தாண்டிக்குளம் பிறமண்டு வித்தியாலயம், கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயம், கற்பகபுரம் அ.த.க. பாடசாலை, மதீனா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகின்றது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழிப்புணர்வு கருத்தரங்கில் கருத்துரைகளை கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்மொழி மூல பயிற்றுநர் ஜெகன் பிரகாஷ், வடமாகாண உளசமூக வளநிலைய உதவி முகாமையாளர் ச. ஆனந்த நடராஜன், வவுனியா தெற்கு வலய ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர் வீ. பரஞ்சோதி, வவுனியா தெற்கு வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆ. சுபாஸ்கரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-3-266)

# கண்ணிவெடிகளை இதுவரை அகற்றுவதற்கு

# அமெ. 34.5 மில்லியன் டொலரை வழங்கியது

(கொழும்பு)

தமிழர்கள் மீதான இலங்கையின் இன வழிப்பு போரின் போது இலங்கைப் படையினர் கொத்தணிக்குண்டுகளை பாவித்த விடயம் ஐ.நா. அதிகாரியொருவரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நிலக்கண்ணிகள் தொடர்பிலான அமெரிக்காவின் மூத்த இராணுவ உயர் அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு சென்று திரும்பியுள்ளது.

இவர்களின் பயணத்தினை இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் நிலக்கண்ணி விவகாங்களுக்கான பிரதி உதவிச் செயலர் மேஜர் ஜெனரல் வோல்டர் ஜிபன் தலைமையிலான உயர்மட்டக்குழுவினரே இலங்கை வந்து திரும்பியுள்ளனர்.


தமிழர் தாயகத்தின் கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய இடங்களுக்குச் சென்று கண்ணிவெடி மற்றும் வெடி பொருட்கள் அகற்றும் நடவடிக்கைகள் குறித்து கள ஆய்வினை மேற்கொண்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதி ஜெகத் உட்பட இலங்கையின் கடற்படை தளபதியையும் சந்தித்து இக்குழுவினர் கலந்துரையாடியுள்ளனர்.

1993 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் நிலக்கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கி வருகின்ற அமெரிக்கா இதுவரை இந்நடவடிக்கைகளுக்காக 34.5 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. (அ-2)








வவுனியா வைரவப் புளியங்குளம் இளவேனில் பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலையத்தின் 2 ஆம் ஆண்டு கலைவிழா அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் 2 ஆம் ஆண்டு நிறைவு மலரினை பாடசாலையின் அதிபர் வெளியிட்டு வைக்க வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் பெற்றுக்கொள்வதையும் பாலர்களின் நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# பொன்சேகாவை வைத்தியசாலையில் வைத்திருப்பதா? விளக்கமளிக்கவும்

## சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் பணிப்பு

(கொழும்பு)

பிணை மனு விசாரணை முடிந்து தீர்ப்பு வழங்கப்படும் வரை சரத் பொன்சேகாவை தொடர்ந்தும் நவலோக வைத்தியசாலையில் தங்கியிருக்க அனுமதிப்பதா இல்லையா என்பது குறித்து எதிர்வரும் 9 ஆம் திகதி நீதிமன்றிற்கு தெரியப்படுத்துமாறு உயர்நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

பொன்சேகா தாக்கல் செய்துள்ள பிணை மனு நேற்று முன்தினம் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பிரதம நிதீயரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க உள்ளிட்ட மூன்று நீதியரசர்கள் குழு இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நுரையீரல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகா தற்போது நவலோக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவரது சட்டத்தரணி நலின் லத்துவஹெட்டி குறிப்பிட்டார். ஏதாவது காரணத்திற்காக சரத் பொன்சேகா வைத்தியசாலையில் இருந்து சிறைக்கு அனுப்பப்பட்டால் அவரது உடல் நிலை மேலும் மோசமடையும் என சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் பிணை மனு விசாரணைக்குட்படுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும் வரை சரத் பொன்சேகாவிற்கு தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும் என பணிக்கும்படி நலின் லத்துவஹெட்டி கேட்டுக் கொண்டுள்ளார். எதிர்தரப்பு சட்டத்தரணியின் கோரிக்கை குறித்து ஆலோசணை பெறாமல் எதுவும் கூற முடியாது என அரச வழங்கறிஞர் தெரிவித்தார்.

அதன்படி எதிர்வரும் 9 ஆம் திகதி குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானித்த உயர் நீதிமன்றம் அன்றையதினம் நீதிமன்றில் கருத்து தெரிவிக்கும்படி சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

(அ-2)

# வோஷிங்டன் செல்லும் பீரிஸ் குழுவை பலப்படுத்தும் பணியில் இலங்கை

## ஆங்கில நாளிதழ் தகவல்

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனை சந்திப்பதற்காக எதிர்வரும் 18 ஆம் திகதி வோஷிங்டன் செல்லும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவில் அமைச்சர் அனுர பிரியதர்சன் யாப்பாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதையடுத்து அமெரிக்கா செல்லும் குழுவில் இடம்பெறவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரிக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சஜின் வாஸ் குணவர்த்தன, நாமல் ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் இடம்பெறுவதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், வோஷிங்டனில் இலங்கைக் குழுவுக்கு அழுத்தங்கள் அதிகம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் இந்தக் குழுவில் ஐந்தாவதாக அனுர பிரியதர்சன யாப்பா சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அதேவேளை தனது வோஷிங்டன் பயணம் குறித்து இன்னமும் உறுதியாகவில்லை என்று அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா கூறியுள்ளார்.

(அ-2)

# பிக்குவின் குற்றம் நிரூபிக்கப்பட்டது

(கொழும்பு)

பிரிட்டனில் உள்ள பிரபல பௌத்த பிக்குகளில் ஒருவரான பகலகம சோமரட்ண பிக்கு பெண்களிடம் கண்ணியத்தை மீறி நடந்தார் என்று குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவருக்கான தண்டனை எதிர்வரும் ஜுன் முதலாம் திகதியில் வழங்கப்படும். அதேவேளை வயதுக்கு வராத பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்திருந்தார். 1970 கள் மற்றும் 80 களில் பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

65 வயதான இவர் பிரித்தானியா குறைடனில் உள்ள தேம்ஸ் பௌத்த விகாரையின் தலைமை பிக்குவான பகலகம சோமரட்ணவே தண்டனைக்கு உள்ளாகவுள்ளார்.

(அ-2)

# 2012.05 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1493- திருத்தந்தை ஆறாம் அலெக்சாண்டர் புதிய உலகை ஸ்பெயினுக்கும் போர்த்துக்கல்லுக்கும் பிரித்துக் கொடுத்தார்.

★ 1494- கிறிஸ்தோபர் கொலம்பஸ் ஜமெய்க்காவில் கால் பதித்தார்.

★ 1626- டச்சு பயணி பீட்டர் மின்யூனிட் மான்ஹற்றன் தீவை அடைந்தார்.

★ 1799- நான்காம் மைசூர் போர்: திப்பு சுல்தான் பிரித்தானியப் படையினரால் கொல்லப்பட்டு ஸ்ரீரங்கப்பட்டணம் கைப்பற்றப்பட்டது.

★ 1814- பிரான்ஸ் மன்னன் முதலாம் நெப்போலியன் நாடுகடத்தப்பட்ட நிலையில் எல்பா தீவை அடைந்தான்.

★ 1855- அமெரிக்க நாடுகாண் பயணி வில்லியம் வோக்கர் நிக்கராகுவாவைக் கைப்பற்றும் நோக்கில் 60 பேருடன் சான்பிரான்ஸிஸ்கோவை விட்டுப் புறப்பட்டார்.

★ 1886- ஹேமார்க்கெட் கலகம்: சிக்காகோவில் இடம்பெற்ற தொழிலாளர் கலகத்தில் பொலிஸார் மீது எறியப்பட்ட குண்டுவீச்சுக்குப் பின் இடம்பெற்ற பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்தனர்.

★ 1904- பனாமா கால்வாய் கட்டுமானம் ஐக்கிய அமெரிக்காவினால் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1912- ரோட்ஸ் என்ற கிரேக்கத் தீவை இத்தாலி ஆக்கிரமித்தது.

★ 1919- மே நான்கு இயக்கம்: சீனாவின் பகுதிகள் ஜப்பானுக்கு வழங்கப்பட்டதை எதிர்த்து தலைநகர் பீஜிங்கில் தியானன்மென் சதுக்கத்தில் மாணவர் போராட்டம் இடம்பெற்றது.

★ 1924- பாரிஸ் நகரில் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஆரம்பமாகின.

★ 1930- பிரித்தானியப் பொலிஸாரினால் மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டு யெராவ்தா மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

★ 1942- இரண்டாம் உலகப்போர்: ஜப்பானினால் முதல்நாள் ஆக்கிரமிக்கப்பட்ட துளகி தீவின் (சொலமன் தீவுகள்) மீது அமெரிக்கக் கடற்படையினர் தாக்குதலைத் தொடுத்தனர்.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹாம்பூர்க் நகரில் இருந்த நியூவென்காம் வதைமுகாமை பிரித்தானிய இராணுவத்தினர் விடுவித்தனர்.

★ 1945- இரண்டாம் உலகப்போர்: வடக்கு ஜேர்மனி பிரித்தானியாவிடம் சரணடைந்தது.

★ 1949- அகில மலாயா தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராக இருந்த எஸ்.ஏ.கணபதி மலாயாவின் ஆட்சியாளர்களான பிரித்தானியர்களால் கோலாலம்பூர் புடு சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டார்.

★ 1949- இத்தாலியில் இடம்பெற்ற விமான விபத்தில் டொரினோ உதைபந்தாட்ட அணியின் அனைத்து விளையாட்டு வீரர்களும் உயிரிழந்தனர்.

★ 1973- சியேர்ஸ் கோபுரம்,சிக்காகோவில் உள்ள வானளாவி கட்டி முடிக்கப்பட்டது.

★ 1979- மார்க்கரெட் தட்சர், ஐக்கிய இராச் சியத்தின் முதலாவது பெண் பிரத மரானார்.

★ 1982- போக்லாந்து போர்: பிரித்தானியாவின் போர்க்கப்பல் ஒன்று ஆர்ஜென்டீனாவின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகியதில் 20 கடற்படையினர் உயிரிழந்தனர்.

★ 1994- இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபினுக்கும் பாலஸ்தீன ஜனாதிபதி யாசர் அரபாத்துக்கும் இடையில் எட்டப்பட்ட அமைதி உடன்பாட்டின்படி காசாக் கரையில் பாலஸ்தீனர்களுக்கு தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டது.

★ 2000- லண்டனின் முதலாவது நகரத் தந்தையாக கென்லிவிங்ஸ்டன் தெரிவு செய்யப்பட்டார்.

★ 2002- நைஜீரியாவில் உள்ளூர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 148 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1767- தியாகராஜர், கர்நாடகஇசை மும்மூர்த்திகளில் ஒருவர் (இ.1847)

★ 1945- என்.ராம், இந்தியப் பத்திரிகையாளர்.

### இறப்புக்கள்

★ 1799- திப்பு சுல்தான், மைசூர் மன்னன் (பி.1750)


★ 1879- சேர் முத்துக்குமாரசுவாமி, இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர் (பி.1834)

★ 1949- எஸ்.ஏ.கணபதி,மலாயா தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் (பி.1925)

★ 1980- டிட்டோ, யூகோஸ்லாவியாவின் ஜனாதிபதி (பி.1892)

### சிறப்பு நாள்


★ அனைத்து நாடுகள் தீயணைக்கும் • படையினர் தினம்



★ 1983- தமிழ், தெலுங்கு திரைப்பட நடிகை த்ரிஷாவின் பிறந்த தினம்




# எந்நாளும் உற்சாகம்



எத்தனையோ சிந்தித்துப் பார்த்தும் ஒரு விடயம் காமேஷுக்கு விளங்கவில்லை. எல்லாவற்றிலும் அவன் ரமேஷுக்கு சமமாகஇருந்தும் ரமேஷ்மட்டும் எவ்வாறு எந்நாளும் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் இருக்கிறான் என்பதுதான் அவனை வாட்டி வதைத்தது. எப்படியாவது அவனை துக்கத்தில் ஆழ்ந்த வேண்டும் என்று துடியாய்த் துடித்தான்.

## அம்புலி மாமா கதைகள்

ஒருநாள் இமயமலையில் தவம் செய்து கொண்டிருக்கும் ஒரு யோகி அந்த கிராமத்திற்கு வந்தார். மக்களுடைய எந்த ஒரு பிரச்சினையையும் தீர்த்து வைப்பதில் வல்லவராக இருந்த அந்த யோகி சிலருக்கு அவர்கள் விரும்பியதை வரமாகவும் அளிக்கும் ஆற்றலும் பெற்றிருந்தார். முதல் வேலையாக அந்த யோகியை தன் வீட்டிற்கு அழைத்த காமேஷ் அவர் மனம் மகிழுமாறு விருந்தளித்தான்.



பின்னர் அவரிடம் தான் விரும்பியதை அளிக்குமாறு வரம் வேண்டினான். புன்னகை புரிந்த யோகி, உன்னுடைய வரத்தால் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வண்ணம் வரம் கேள்! என்றார்.

உடனே காமேஷ், எல்லா வியியங்களிலும் என் பக்கத்து வீட்டு ரமேஷை விட நான் சிறந்து விளங்க வேண்டும்! அவனுக்கு அதிகமாக பிரச்சினைகள் ஏற்பட்டு மகிழ்ச்சி என்பதே அவன் வாழ்வில் இருந்து மறையட்டும்! இதுவே நான் விரும்பும் வரம்! என்றான்.

புருவங்களை நெரித்த யோகி, நீ கேட்கும் வரம் மற்றவர்களுக்குத் துன்பம் தருவதாக இருக்கக் கூடாது என்று நான் ஆரம்பத்திலேயே சொன்னேனே! இத்தகைய வரத்தை நான் தர முடியாது! என்றார்.

அதற்குக் காமேஷ், போகட்டும்! விடுங்கள்! நான் அவனை விட செல்வம், அதிர்ஷ்டம், புகழ் யாவற்றிலும் சிறந்து விளங்க வேண்டும்! அவனை விட மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்! இதுவாவது தர முடியுமா? என்று கேட்டான்.

மீண்டும் மிகவும் சுயநலமான வரமாகக் கேட்கிறாய்! பரவாயில்லை! இந்த வரத்தை நான் உனக்கு அளிக்கிறேன் என்றார். ஏதோ இந்த மட்டும் வரம் தந்தாரே என்று காமேஷ் திருப்தி அடைந்தான்.

மறுநாள் காலையில் ரமேஷ் தன் தோட்டத்தை தோண்டிக் கொண்டு இருக்கையில் ஒரு வெள்ளிச் செம்பு கிடைத்தது. அதற்குள் ஆயிரம் பொற்காசுகள் இருந்தன. இந்த விடயமறிந்து கிராமத்தினர் ரமேஷை வாழ்த்தினர். வழக்கமாக ரமேஷைக் கண்டு பொறாமை அடையும் காமேஷ் இந்தமுறை ரமேஷின் அதிர்ஷ்டத்தை எண்ணிப் பொறாமை கொள்ளவில்லை. யோகி கொடுத்த வரத்தின்படி, தனக்கு இதை விட அதிகமாக அதிர்ஷ்டம் அடிக்கும் என்று அவன் உறுதியாக இருந்தான்.

அதேபோல் அன்று மாலை, காமேஷ் தன் தோட்டத்தை தோண்ட அவனுக்கு ஒரு வெள்ளிக் குடமே கிடைத்தது. அதனுள் பதினாயிரம் பொற்காசுகள் இருந்தன. கிராமத்து மக்கள் திரளாகக் கூடி காமேஷின் அதிர்ஷ்டத்தை புகழ்ந்து வாழ்த்திவிட்டு, நீ எங்களுக்கு ஒரு விருந்தளிக்க வேண்டும்! என்றனர்.

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்த காமேஷ் உடனே அதற்கு ஒப்புக்கொண்டான். அந்த விருந்தில் ரமேஷும் கலந்து கொண்டான். தன்னைவிட பெரிய அதிர்ஷ்டம் காமேஷுக்கு கிட்டியதைக் குறித்து ரமேஷ் பொறாமைப்படாமல் மிகுந்த உற்சாகத்துடன் விருந்தில் கலந்து கொண்டான்.

இதைப் பார்த்த காமேஷ் அவன் மீது பொறாமை கொள்ள, அவன் மகிழ்ச்சி சென்ற இடம் தெரியவில்லை. சில நாட்கள் கழித்து ரமேஷின் உறவினர் ஒருவர் இறந்து போக, அவருடைய நான்கு ஏக்கர் நிலம் ரமேஷுக்கு கிடைத்தது. அது நடந்து சில நாட்களில், காமேஷின் உறவினர் ஒருவர் தனது பத்து ஏக்கர் நிலத்தை அவன் பெயரில் எழுதிவிட்டு இறந்து போனார். இந்த முறை ரமேஷ் கிராமத்து மக்களை கூப்பிட்டு விருந்து வைத்தான். அதற்குக் காமேஷையும் அழைத்தான். தனக்கு இந்த முறையும் குறைவான அதிர்ஷ்டமே கிட்டியும், ரமேஷ் எப்போதும் போலவே மகிழ்ச்சியாக இருந்ததைக் கண்டு காமேஷ் அவனிடம் உனக்கு கிடைத்தது நான்கு ஏக்கர் நிலம்! எனக்கோ பத்து ஏக்கர். அப்டியும் உன்னால் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?



என்று கேட்டான். அதற்கு ரமேஷ் சிரித்துக் கொண்டே, அதிர்ஷ்டம் எப்போதாவது ஒருமுறையே வருகிறது. எனக்கு அதிர்ஷ்டம் அடிக்கும் போது மட்டும் தான் மகிழ்ச்சியடைய வேண்டும் என்றால், நான் எப்போதோ ஒருமுறை மட்டும் தான் மகிழ்ச்சியாக இருப்பேன். அந்த தற்காலிக மகிழ்ச்சி எனக்குத் தேவையில்லை. அதற்குப் பதிலாக, மற்றவர்களுக்குக் கிட்டும் அதிர்ஷ்டத்தையும் எனக்கே கிடைத்ததாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தால் நான் என்றென்றும் உற்சாகத்துடன் இருப்பேன் என்றான். காமேஷ் அதைக் கேட்டுத் துணுக்குற்றான்.

யோகி யிடம் வரம் வாங்கியும், எந்த நோக் கத்திற்காக வரம் பெற்றேனோ அது நிறைவேறாது என்று அறிந்து காமேஷ் மனம் உடைந்து போனான்.

## ஆளுநர் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(பூநகரி)

வடமாகாணத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் கலைத்துறையில் சிறந்த சேவையாற்றிய கலைஞர்களில் இருந்து ஆளுநர் விருது வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விருது பெறுவதற்கு 60 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் தாம் விண்ணப்பிக்கும் வரையில் கூடுதலான சேவையை ஆற்றியமைக்கான ஆவணங்களும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிப்போர் பிரதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமையென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2-84)

# இரத்தப்பரிசோதனை மூலம் மார்பக புற்றுநோயை கண்டறியலாம்

## ஆய்வில் தகவல்

மார்பக புற்றுநோயை அது உருவாவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே எளிய இரத்த பரிசோதனை மூலம் கண்டறிய முடியும் என்று பிரித்தானிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தகைய பரிசோதனைகள் மூலம் குறிப்பிட்ட பெண்களுக்கு மார்பக புற்றுநோய் வரக்கூடும் என்பதனை பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடிக்க முடியும் என்று இந்த ஆய்வை மேற்கொண்டவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

கேன்சர் ரிசர்ச் என்கிற மருத்துவ சஞ்சிகையில் இந்த ஆய்வின் முடிபுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

லண்டனில் இருக்கும் இம்பீரியல் கல்லூரியை சேர்ந்த மருத்துவர் ஜேம்ஸ் பிளானகன் தலைமையிலான ஆய்வுக்குழுவினர் ஆயிரத்து 380 பெண்களின் இரத்த மாதிரியை பரிசோதனைக்கு எடுத்துக்கொண்டனர். இவர்களைத் தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

காலப்போக்கில் இவர்களில் 640 பேருக்கு மார்பக புற்றுநோய் உருவானது இந்த 640 பேரின் இரத்தத்தில் இருக்கும் வெள்ளை அணுக்களில் இருக்கும் ஏடிஎம் எனப்படும் குறிப்பிட்ட மரபணுவில் ஏற்படும் மாறுதல் இந்தப் பெண்களின் மார்பக புற்றுநோயை தூண்டியதாக இந்த ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

இதன் அடுத்த கட்டமாக இந்த குறிப்பிட்ட மரபணு ஏன் மாற்றமடைகின்றது என்பதை இவர்கள் ஆராய்ந்த போது இந்த மரபணுவின் மேற்புறத்தில் இருக்கும் மிதைலேடன் எனப்படும் குறிப்பிட்ட இரசாயனப்பொருளில் ஏற்படும் மாற்றமே மரபணுவின் மாற்றத்தை தூண்டுவதை இவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

எனவே ஒரு பெண்ணின் இரத்தத்தில் இருக்கும் வெள்ளை அணுக்களில் இந்த குறிப்பிட்ட மிதைலேடன் என்கிற இரசாயனம் அதிகரித்து காணப்பட்டால் அந்த பெண்களுக்கு மார்பக புற்றுநோய் உருவாவதற்கான சாத்தியம் 2 மடங்கு அதிகம் இருப்பதாக இவர்கள் கணித்திருக்கிறார்கள்.

இவர்களின் இந்தக் கணிப்பை மார்பக புற்றுநோய் உருவான 640 பெண்களின் இரத்த மாதிரிகளில் காணப்பட்ட அதிகரித்த மிதைலேடன் உறுதி செய்ததாக இந்த ஆய்வுக்கு தலைமை தாங்கிய மருத்துவர் ஜேம்ஸ் பிளானகன் தெரிவித்திருக்கிறார்.

இந்த ஆய்வின் முடிபுகள் மார்பக புற்றுநோய் தடுப்பில் மட்டுமல்ல மரபணு மூலக்கூறுகள் எப்படி செயற்படுகின்றன என்கிற துறையிலும் ஒரு புதிய பரிமாணத்தை உருவாக்கியிருப்பதாக இந்த ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அதாவது மரபணு காரணிகள் எப்படி மாற்றம் அடைகின்றன என்பதற்கான புதிய புரிதலையும் இந்த ஆய்வு வழங்கியிருப்பதாக இவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (அ-2)

# ரூபாவின் பெறுமதி 3 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று முன்தினம் 3 வீதத்தினால் அதிகரித்தது. திறைசேரி செயலரின் அறிவிப்பை அடுத்தே இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.

கடந்த திங்கட்கிழமையன்று கருத்து வெளியிட்டிருந்த திறைசேரியில் செயலாளர் பி. பி. ஜயசுந்தர, ரூபாவின் பெறுமதி உரிய நிலைக்கு அப்பால் அதிகரித்தால் சந்தை தலையீடுகள் அவசியம் என்று எச்சரித்திருந்தார்.

டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி 125 ரூபாவாகவே இருக்க வேண்டும். அதற்கு அதிகமாக செலவு வாய்ப்புக்கள் இல்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் ஏற்றுமதியாளர்கள் டொலர்களை அதிகளவில் விற்பனை செய்துள்ளனர். இதன் காரணமாகவே ரூபா 3 வீதம் அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# அரச நிறுவனங்களின் மோசடிகளுக்கு நிறுவனத் தலைவர்களே பொறுப்பு

## ஜனாதிபதி செயலகம் சுற்றறிக்கையில் தகவல்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் இடம்பெறும் அனைத்து ஊழல், மோசடிகள் தொடர்பிலும் அந்த நிறுவனங்களின் தலைவர்களே பொறுப்புக் கூற வேண்டுமென ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள ஜனாதிபதி செயலகம் சகல அரச நிறுவனத் தலைவர்களுக்கும் இது தொடர்பில் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கான சுற்றறிக்கையொன்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டு சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண செயலாளர்கள் மற்றும் சகல அரச நிறுவனத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் அரச ஊழியர்கள் மத்தியில் உரையாற்றிய போது மேற்படி விடயம் தொடர்பில் அரச அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

ஜனாதிபதியின் மேற்படி பணிப்புரைக்கமைய இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டு சம்பந்தப்பட்ட விடயத்தில் உடனடிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஊழல் மோசடியில் மட்டுமின்றி அரச நிறுவனங்களில் இடம்பெறும் வீண் செலவுகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மேற்படி சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பல்வேறு செலவுகள் தொடர்பில் கணக்காய்வுக்கு உட்படுத்துவது நிறுவனத் தலைவர்களின் பொறுப்பு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் வீண் செலவுகள் உட்பட வீண் விரயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது தலைவர்களின் பொறுப்பு என அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அந்தந்த நிறுவனங்களில் இடம்பெறும் செலவுகள் சம்பந்தமாக முகாமைத்துவ செயற்றிட்டமொன்றை அமுல்படுத்தி அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ஊடாக ஒவ்வொரு மாதமும் அறிக்கையின் பிரதியொன்றை ஜனாதிபதி செயலகம் மற்றும் உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சருக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களுக்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள், ஆலோசனைகளுக்கு தொடர்ச்சியான அவதானத்தை செலுத்துவதுடன் நாட்டு மக்களின் உயரிய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக்கூடிய அரச சேவையை வழங்குவதற்கான விசேட பிரிவொன்றை சகல அமைச்சுக்களிலும் உருவாக்கப்பட வேண்டுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் திருப்திப்படும் அரச சேவையை வழங்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய முறையான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரச நிறுவனத் தலைவர்களும் இதன்மூலம் அறிவுறுத்தப்படவுள்ளனர். (அ-2)


**University of Jaffna, Sri Lanka**

**Diploma in Journalism Examination-2009 (Full Time)**

**Diploma in Journalism Examination-2008 (Part Time)**

**Special Examination**

The Above Examination will commence on 14.05.2012. Eligible Candidates are requested to collect the Admission Cards at MRTC on 10th May 2012.

03.05.2012 (C-6407) Registrar


# ரஜவெவ- அக்போபுர புத்தர் சிலை கண்டெடுப்பு

(கொழும்பு)

கந்தளாய் ரஜவெவ- அக்போபுர பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஒருவர் நிலத்திற்கு அடியில் இருந்து புராதன புத்தர் சிலை ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.


நேற்று முன்தினம் 2 ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

புராதன சின்னமாக கருதப்படும் ஐந்தரை அடி அகலமும் ஐந்து அடி நீளமும் கொண்ட புத்தர் சிலை ஒன்றை கண்டுள்ளார்.

இதனையடுத்து அவர் உடனடியாக கோமரன் கடவல மரபுரிமை அலுவலகத்திற்கு அறிவித்துள்ளார். பின்னர் கந்தளாய் பொலிஸாரின் உதவியுடன் புத்தர் சிலை மரபுரிமை அலுவலக அதிகாரிகளினால் மீட்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (அ-2)

# புதுக்கோட்டை இடைத்தேர்தல் களம்

## கருணாநிதியின் கதாயுதம்... மீண்டும் டெசோ உயிர் பெறுகிறது



**தமிழீழம் வேண்டும் என்றும், அதற்காக 1985 வாக்கில் அமைக்கப்பட்ட டெசோ அமைப்பை மீண்டும் உயிரூட்டி கூட்டம் போட்டிருப்பதன் மூலமும் காங்கிரஸை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகிச் சென்று கொண்டிருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.** தமிழகத்தில் புதிய கூட்டணி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அவர் காங்கிரஸை விலக்கி வைத்துவிட்டு தே.மு.தி.க.வை சேர்த்துக்கொள்வதற்கான வியூகங்களில் இறங்கியுள்ளார். அதை வலுப்படுத்தும் வகையில்....?

தமிழகத்தில் ஜூன் 12 ஆம் திகதி அன்று மீண்டும் ஓர் இடைத்தேர்தல் மோதல் உருவாகப்போகிறது. ஆளும் கட்சியான அ.தி.மு.கவும் எதிரணியில் இருக்கும் தி.மு.க.வும் களத்தில் சந்திக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. எளிமை மிக்கவராக திகழ்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.எல்.ஏ. முத்துக்குமரன் இறந்ததையொட்டி புதுக்கோட்டை இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போதே சங்கரன்கோவில் இடைத்தேர்தலைவிட அதிக எண்ணிக்கையில், அதாவது 52 சிறப்பு தேர்தல் பொறுப்பாளர்களை அறிவித்து களமிறங்கியுள்ளது அ.தி.மு.க. அதுமட்டுமல்ல, கூட்டணிக்கட்சியான எதிரணிக்கட்சிக்கு இத்தொகுதியை விட்டுக் கொடுக்காமல் தானே களமிறங்குகிறது.

புதுக்கோட்டை தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடவில்லை என்று அறிவித்த அக்கட்சியின் மாநில

### தமிழகப் பார்வை

செயலாளர் தா.பாண்டியன், "அ.தி.மு.க. தலைமையிடம் நியமனத்தைக் கேட்டு கடிதம் எழுதினேன், அதற்கு பதில் வரவில்லை. ஆகவே இடைத்தேர்தல் சூழ்நிலைகளை மனதில் வைத்து அங்கு போட்டியிடுவதில்லை" என்று அறிவித்தார் தா. பாண்டியன். அதேநேரத்தில் அ.தி.மு.க. தன் கட்சி வேட்பாளராக கார்த்திக் தொண்டைமானை அறிவித்திருக்கிறார். இவர் ஏற்கனவே இங்கு மூன்று முறை போட்டியிட்டு காங்கிரஸ் எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்ற விஜயரகுநாத தொண்டமானின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது. **புதுக்கோட்டையை அனைவரும் தொண்டைமான் தொகுதி என்றே கூறுவார்கள். அந்த அளவிற்கு ராஜா வம்சத்தினர் போட்டியிட்டு வெற்றிபெற்ற தொகுதி இது.**

தொன்று தொட்ட காங்கிரஸ் தொகுதியாக இருந்த புதுக்கோட்டையை முதன் முதலில் 1989 சட்டமன்ற தேர்தலில்தான் தி.மு.க. கைப்பற்றியது. **அ.தி.மு.க. ஜானகி அணி, ஜெயலலிதாஅணி என்று இரண்டாக பிளவுபட்டு நின்ற நேரம். காங்கிரஸும் தனித்துப்போட்டியிட்ட சமயம். அதைப் பயன்படுத்தி இங்கே தி.மு.க.வின் வேட்பாளராக போட்டியிட்ட பெரியண்ணன் வெற்றி பெற்றார். தி.மு.க.விற்கு இங்கு கிடைத்த முதல் வெற்றி இது.** அந்த வகையில் 1967 இற்குப் பிறகு நடைபெற்ற 12 தேர்தலில் மூன்றில் மட்டுமே தி.மு.க. இங்கு வெற்றிபெற்றது. அந்த மூன்று கட்டங்கள் 1989 தேர்தல், 1996தேர்தல், மூன்றாவதாக பெரியண்ணன் இறந்த போது நடைபெற்ற இடைத்தேர்தல். அதேபோல் அ.தி.மு.க. இந்த தொகுதியில் 2001 இல் தான் வெற்றி பெற்றது. அப்படி முதலில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் இப்போது மாவட்டச் செயலராக இருக்கும் விஜயபாஸ்கர். அதைத் தொடர்ந்து 2006 சட்டமன்ற தேர்தலிலும் அ.தி.மு.க. இங்கே வெற்றி பெற்றது. இதுவரை இங்கே இருமுறை மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறது அ.தி.மு.க.. பொதுவாக காங்கிரஸுக்கு பலமான தொகுதி புதுக்கோட்டை என்பதால் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் காங்கிரஸ் கட்சிக்கே இத்தொகுதியை கூட்டணியில் விட்டுக்கொடுத்து வந்தன. இத்தொகுதிக்கு ஒரு மோசமான சென்டிமென்ட் உண்டு. தொகுதியில் மிகவும் பிரபலமாக இருக்கும் எம்.எல்.ஏ. அந்த சட்டமன்ற காலம்வரை பதவியில் இருக்க மாட்டார். தி.மு.க.வில் பிரபலமாக இருந்த பெரியண்ணன் எம்.எல்.ஏ.வும் இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் பிரபலமாக இருந்த முத்துக்குமாரன் எம்.எல்.ஏ. இறந்து இடைத்தேர்தல் வந்தது, இந்த சென்டிமென்டை மேலும் பலப்படுத்துகிறது. இங்கு மிகக் குறைந்த வித்தியாசத்தில் வெற்றிபெற்ற எம்.எல்.எ காங்கிரஸ் வேட்பாளராக 1980இல் போட்டியிட்ட விஜயரகுநாத தொண்டைமான்–அவர் 1273 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதிக வித்தியாசத்தில் வெற்றிபெற்ற எம்.எல்.ஏயும் காங்கிரஸ் வேட்பாளரே. 1991 இல் ராஜீவ் கொலை நடைபெற்றபோது தன்னை எதிர்த்துப்போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளரை 43 ஆயிரத்து 319 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார் காங்கிரஸ் வேட்பாளரான சுவாமிநாதன் இப்படி காங்கிரஸ் தொகுதியாக இருந்த புதுக்கோட்டை காலப்போக்கில் தி.மு.கவிற்கும் அ.திமு.க. விற்கும் உரிய தொகுதியாக மாறிவிட்டது.

**நடக்கப்போகின்ற தேர்தலில் அ.தி.மு.க. விற்காக உழைக்க 52 சிறப்பு தேர்தல் பொறுப்பாளர்கள் ஏற்கனவே களமிறங்கி விட்டார்கள். கடந்த சனிக்கிழமை புதுக்கோட்டையிலுள்ள பிரகதாம்பாள் ஆலயத்தில் பூஜை செய்து விட்டு தன் பிரசாரத்தை தொடங்கிவிட்டார் அக்கட்சியின் வேட்பாளர் கார்த்திக் தொண்டைமான்.** அ.தி.மு.க. விற்கு இங்கு சொந்த பலம் அதிகம் உண்டு. அக்கட்சியால்தான் மற்ற கூட்டணி கட்சிகளுக்கு பலமே தவிர, கூட்டணிக் கட்சிகளால் அ.தி.மு.க.விற்கு பலமில்லை. அதனால், இந்தமுறை அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் போன்றவை இல்லாதது பெரும் மாற்றத்தை உருவாக்கி விடப்போவதில்லை. ஏனென்றால், இந்த மூன்று கட்சிகளும் சேர்ந்து மொத்தம் 10 ஆயிரம் வாக்குகள் பெற்றால் பெரிய விடயம். அதனடிப்படையில் பார்த்தால் சென்ற தேர்தலில் முத்துக்குமரன் வாங்கிய 65 ஆயிரத்து 466 வாக்குகளில் ஏறக்குறைய 55 ஆயிரம் வாக்குகள் அ.தி.மு.க. விற்கு சொந்தமானது. இது 1989 இல் அ.தி. மு.க. பிளவுபட்டு நின்று இரு அணி யின் வேட்பாளர்களும் (ஜா.அணி, ஜெ.அணி) பெற்ற 52 ஆயிரம் வாக்குகளுக்கு அருகில் வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பலத்துடன், ஆளும்கட்சி என்ற இடைத் தேர்தல் பலம், அ.தி.மு.க.விற்கு இங்கே அதிகம் இருப்பதால், வெற்றி வாய்ப்பிற்கு கூட்டணி கட்சிகளின் தயவை நாடியிருக்க வேண்டியதில்லை. **அது மட்டுமின்றி வேட்பாளராக இருக்கும் கார்த்திக் தொண்டைமான் காங்கிரஸ் பாரம்பரியத்தில் வந்த விஜயரகுநாத தொண்டைமானின் மகன்.** ஆகவே இங்குள்ள காங்கிரஸ் வாக்காளர்கள் சுமார் 25 ஆயிரம் பேரில் குறைந்தது 15 ஆயிரம் வாக்காளர்களாவது கார்த்திக் தொண்டமானுக்கு வாக்களிக்கும் சூழ் நிலை இருக்கிறது. இது தவிர இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, அ.தி.மு.க. வேட்பாளர் தனது பிரச்சாரத்தை தொடங்கிய அன்று மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. முத்துக்குமாரனின் படத் திறப்பு விழாவை வைத்துள்ளார்கள். அன்றைய தினம் தா.பாண்டியன் மற்ற அ.தி.மு.க. அமைச்சர்களுடன் அந்த மேடையில் அமர்ந்திருந்தார். ஆகவே, இந்திய கம்யூனிஸ்ட் வாக்காளர்களும் அ.தி.மு.க. விற்கு ஆதரவு அளிக்கும் சூழ்நிலை அமைந்துள்ளது. ஆகவே, மொத்தத்தில் புதுக்கோட்டை தொகுதியில் அ.தி.மு.க. முதன்மை பெற்று நிற்கிறது.

அ.தி.மு.க.வை எதிர்த்து இங்கே யார் போட்டியிடுவது என்ற கேள்வி எழுந்துள்ளது. டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிடவில்லையென்று அறிவித்து விட்டது. அக்கட்சிக்கு ஆயிரம் வாக்குகள் கூட இங்கு இல்லை என்பது வேறு விடயம். ம.தி.மு.க. விற்கு சுமார் 14 ஆயிரம் வாக்குகள் இங்கு உண்டு. கடந்த 1996 மற்றும் 2001 தேர்தல்களில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் பார்த்தால்கூட குறைந்தது 10 ஆயிரம் வாக்குகளாவது அக்கட்சிக்கு இங்கே இருக்கிறது. ஆனால், கட்சியின் மாவட்டச்செயலாளர்கள் கூட்டத்தைக் கூட்டிய வைகோ, புதுக்கோட்டை மாவட்டச் செயலாளரை விட்டே புதுக்கோட்டையில் ம.தி.மு.க. போட்டியிட வேண்டாம், அதற்கு பதில் கட்சி மாநாடுகள் நடத்த அந்த பணத்தை செலவழிக்கலாம் என்று பேச வைத்திருக்கிறார். ஆகவே, அக்கட்சியும் இங்கு போட்டியிடும் மூடில் இல்லை. காங்கிரஸ் கட்சி தி.மு.க. கூட்டணியில் வேண்டாவெறுப்பாக இருக்கிறது. அக்கட்சிக்கு முன்னாள் மத்திய அமைச்சர் திருநாவுக்கரசர். தொண்டைமான் பாரம்பரியம் உள்ள சாருபாலா தொண்டமான் போன்ற வேட்பாளர்கள் இருந்தும், இடைத் தேர்தலில் எதிர்காலக் கூட்டணி கட்சியாக வரும் வாய்ப்புள்ள அ.தி.மு.க.வுடன் மோத வேண்டுமா என்ற தயக்கத்தில் இருக்கிறது. தே.மு.தி.க.வைப் பொறுத்தமட்டில் இங்கு 6 ஆயிரம் வாக்குகள் இருக்கிறது. அதற்காக இங்கே போட்டியிட்டு கையைச் சுட்டுக்கொள்ள வேண்டாம் என்று அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் எண்ணுவதாக தெரிகிறது.

எஞ்சியிருப்பது தி.மு.க. மட்டுமே. இந்த கட்சி கடந்த 2006 இல் 1950 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை அ.தி.மு.க.வுடன் இழந்தார், அக்கட்சியின் முஸ்லிம் முகமாக இருந்த ஜாபர் அலி. அடுத்து 2011 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட பெரியண்ணன் அரசு 3101 வாக்குகள் குறைவாக பெற்று முத்துக்குமரனிடம் தோற்றார். அப்போது தி.மு.க. வாங்கிய வாக்குகள் 62,365 இதில் காங்கிரஸ் வாக்குகள் 15 ஆயிரம் போனால்கூட 47 ஆயிரம் வாக்குகள் மட்டுமே எஞ்சியிருக்கிறது. இந்த வாக்குகளை அப்படியே வருகின்ற இடைத்தேர்தலில் வாங்க முடியுமா என்ற சந்தேகம் தி.மு.க. தலைமைக்கு இருக்கிறது. ஏனென்றால் இங்கு அக்கட்சிக்குள்ள வாக்குகள் என்பது தி.மு.க. மோசமாகத் தோல்வியடைந்தபோதே (1991 தேர்தல்) 38 ஆயிரம் வாக்குகள் தான். அதிலும் ம.தி.மு.க. கணிசமான வாக்குகளைப் பிரித்து விட்டது. ஆகவே 30ஆயிரம் வாக்குகளுக்குள் வாங்கி, அ.தி.மு.க. ஏற்கனவே வாங்கியுள்ள 65 ஆயிரம் வாக்குகளை விட அதிகமாக வாங்கினால் சங்கரன் கோவில் போல் டெபாஸிட் போகும் சூழ்நிலை தி.மு.க. விற்கு மீண்டும் வரலாம். ஆகவேதான் தேர்தல் கமிஷன் ஒழுங்காக தேர்தலை நடத்தும் என்ற நம்பிக்கையில்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி ஏற்கனவே அறிவித்திருக்கிறார். தி.மு.க. சார்பில் போட்டியிடுவீர்களா என்று கேட்டதற்கு மே 17 ஆம்திகதி அதுபற்றி அறிவிக்கப்படும் என்று கூறியுள்ளார். வேட்பு மனு தாக்கல் செய்யும் நாள் மே 18 என்பது குறிப்பிடத்தக்கது. இடைத் தேர்தலில் மீண்டும் போட்டியிட வேண்டுமா என்று தி.மு.க. தலைவர்களுக்குள் பட்டிமன்றம் நடைபெறுகிறது. புதுக்கோட்டையில் போட்டியிட வேண்டாம் என்பதே அக்கட்சி தலைவர்களின் கருத்தாக இருக்கிறது. இதை ஆமோதிக்கும் வகையிலேயே தி.மு.க. தலைவர் கருணாநிதியும் கருத்துச் சொல்லி வருகிறார் என்றே தெரிகிறது.

தமிழீழம் வேண்டும் என்றும் அதற்காக 1985 வாக்கில் அமைக்கப்பட்ட டெசோ அமைப்பை மீண்டும் உயிரூட்டி கூட்டம் போட்டிருப்பதன் மூலமும் காங்கிரஸை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகிச் சென்று கொண்டுருக்கிறார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. தமிழகத்தில் புதிய கூட்டணி அமைக்கும் முயறிசியில் ஈடுபட்டிருக்கும் அவர் காங்கரஸை விலக்கி வைத்துவிட்டு தே.மு.தி.க.வை சேர்த்துக் கொள்வதற்கான வியூகங்களில் இறங்கியுள்ளார். அதை வலுப்படுத்தும் வகையில் தே.மு.தி.க. சார்பிலோ அல்லது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலோ பொது வேட்பாளர் என்று யாரையாவது நிறுத்தினால், அவர்களை தி.மு.க. ஆதரிக்கும் மனப்பான்மையிலேயே அக்கட்சி தலைமை இருக்கிறது. அடுத்து அமையும் புதிய கூட்டணிக்கு புதுக்கோட்டை இடைத் தேர்தல் அச்சாரமாக அமையவேண்டும் என்று தி.மு.க. தலைமை விரும்புகிறது. ஆனால், அதை இவ்வளவு சீக்கிரம் தே.மு.தி.க.வோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ ஏற்றுக் கொண்டு பொது வேட் பாளரை நிறுத்த முன்வருமா என்பது கேள்விக்குறியே. ஏனென்றால், புதிய அணி அமைந்தால் அதில் தங்களின் சீட் பேரம் எந்தவிதத்திலும் குறைந்துவிடக் கூடாது என்பதில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் எச்சரிக்கையுடனே இருப் பார். தி.மு.க.வின் விருப்பத்திற்கு ஏற்ப பொது வேட்பாளர் அமையாவிட்டால், தி.மு.க.வே களமிறங்கி போட்டியிடும் வாய்ப்பு ரொம்பக் குறைவு என்பதே இப்போது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பான பேச்சு. ஆகவே, இப்போதைக்கு புதுக்கோட்டை இடைத் தேர்தல், புது கூட்டணி அமைக்க உதவுமா என்பதை நோக்கியே அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் யோசித்து முன்னேறிக் கொண்டிருக்கிறது.

# பழைய நினைவுகளை மீட்டுத்தரும் நிழற்பட சேமிப்பை இன்றே தொடங்குங்கள்

புகைப்படங்கள் என்பது மனிதர்களின் வாழ்வில் அன்றும் இன்றும் என்றும் தவிர்க்க முடியாத ஒரு அம்சம் என்றே சொல்லலாம். மனித னின் வாழ்வியலோடு ஒன்றிவிட்ட ஒரு அம்சமாக இந்த புகைப்படங்கள் காணப்படுகின்றன. எமது வாழ்க் கையை, வளர்ச்சியை மீட்டிப்பார்க்க புகைப்படங்கள் பெரிதும் துணை புரிகின்றன. வாழ்க் கையில் சந்திக்கின்ற ஆயிரம் தரு ணங்களில் என்றும், எப்போதும் நம் மோடு இருக்க வேண்டும் என்று சில தருணங்களில் தோன்றுவது உண்டு. அந்த நேரங்களில் விட்டுப்போன பழைய நினைவு களை அதே யதார்த்ததுடன் சொல்லும் சக்தியும் புகைப்படங்களுக்கு உண்டு. சுருங்கச் சொன்னால் இன்றைய புகைப்படங்களும் நாளைய வரலாறுதான். வாழ்வின் மறக்க முடியாத, மறக்கக் கூடாத நிமிடங்கள் எப்போதும் எம்மோடு இருக்க வேண்டும் என நினைக்கிற பல புகைப்படங்கள் காலத்தால் அழியக் கூடியன. எனவே இவற்றை பாதுகாக்க நம்மில் பல பேர் அவற்றை மின் வடிவத்திற்கு மாற்றி கணனிகளில் சேமித்து வைத் திருப்போம்.

எனவே, சில முக்கிய நிழற்பட பகிர்வு (Photo sharing) தளங்களை அவற்றின் சிறப்பியல்புகளோடு தருகின்றோம். உங்களுக்கு பொருத்தமானதை தெரிவு செய்து தொடங்குங்கள்.

இந்த இணையத்தளமானது முற்றிலும் இலவசமான நாம் யாவரும் அறிந்த கூகுள் தேடு பொறி நிறுவனத்தின் ஒரு வெளியீடாகும். இதில் நீங்கள் உங்கள் ஜிமெயில் கணக்கை மட்டுமே வைத்து உள்நுழை யலாம். உங்கள் விருப்பப்படி படங்களை தரவேற்றலாம். ஆனால் தரவேற்றம் தொடர்பில் கூகுள் ஒரு நிபந்தனை விதித்தி ருக்கின்றது. அதாவது உங்களுக்கு இலவசமாக படங்களை தர வேற்ற 1GB கொள்ளளவு மாத்திரமே வழங்கப்படுகின்றது. மேலும் ஒன்லைனிலேயே படங்களை எடிட் செய்ய Picnik இணையத்தளம் இதில் உட்பொதிக்கப்பட்டு (Inbuild) காணப் படுகின்றது. அது மட்டுன்றி உங்கள் இடத்தை கூட இதில் Tag செய்யலாம். வழமையாக நாம் எதிர்பார்க்கும் Privacy இதில் கொஞ்சம் கூடுதலாகவே கிடைக்கின்றது. இதன் இணைய முகவரி Http://picasawab.google.com/ என்பதாகும்.

அடுத்து நான் சொல்கின்ற ஃப்ளிக்கர் இணையத்தளமும் ஒரு இலவச சேவைதான். ஆனால் இது ஆரம்பத்தில் Ludicocorp தம்பதிகளால் உருவாக்கப்பட்டு பின் பிரபல Yahoo நிறுவனத்தால் விலைக்கு வாங்கப்பட்டது. அடிப்படையான அனைத்து வசதிக ளோடும் மேலும் இந்த பிரபலமான தளமானது. வலைப்பதிவாளர்களுக்கு தங்கள் ஒளிப்படங்களை சேமித்து அதனை தங்கள் வலைப்பதிவுகளில் காட்சிப்படுத்த ஏதுவான வகையில் சாத்தியங்களையும் வழங்குகின்றது. இந்த சேவைக்கு நவீன நகர்பேசிகளான ஐஃபோன், பிளாக் பெர்ரி மற்றும் விண்டோஸ் ஃபோன் ஆகியவற்றிலிருந்து நேரடியாக ஒளிப்படங்களையும் நிழற் ்படங்களையும் குறித்த தளத் தின் உத்தியோகபூர்வ செய் நிரல் களைப் பயன்படுத்தி நேரடியாக மேலேற்றவும் முடியும். மற்றும் உங்கள் Yahoo கணக்கை பயன்படுத்தி உள் நுழையலாம். இதன் வலைமனை முகவரி www.flickr.com.

இதுவும் இலவச சேவை வழங்குநர்தான், ஆனால் இதில் கட்டாயம் கணக்கு உருவாக்க வேண்டும். வழமையான சிறப்பம்சங்களுடன் இது உங்களுக்கு தரவேற்றம் தொடர்பில் எந்த கட்டுப்பாடும் விதிப்பதில்லை Unlimite Upload Space ஐ வழங்குகிறது.

ஒரு புகைப்பட வலைப்பதிவு (Photo blog)அமைக்கும் வசதியும் வழங்கு கிறது. முகவரி www.photobucket.com. இது இலவசமான சேவை மற்றும் இது பெரும்பாலும் இணையதள நடத்துநர்களுக்கான சேவையையே வழங்குகின்றது. அதாவது படங்க ளுக்கான URL ஐ இது வழங்குகின்றது. இதன் மூலம் வேறு தளங்களில் படங்களை காட்சிப்படுத்தவும் முடியும். இதன் முகவரி www.tinypic.com.





# கூகுளில் படங்களை தேட இன்னுமொரு வழி

5.03 PM google tips and tricks No comments. பொதுவாக படங்களை கூகுளில் தேட http://www.image.google.com/ இற்கு செல்வோம். ஆனால் இன்னும் ஒரு முறையிலும் கூகுளில் படங்களை தேட முடியும் என்பது தெரிந்ததுதான். ஆனால் பெரும் பாலானோருக்கு தெரியாது. சரி எப்படி தேடுவது என்று பார்ப்போம். உங்களுக்கு தேவைப்படும் படத்தின் பெயருடன் ஒரு இடைவெளிவிட்டு image என்று தேடுங்கள் ஈசியாக கிடைத்துவிடும் என்ன? புரியவில்லையா? கீழே உதாரணம் இருக்கு பாருங்கள்.

உங்களுக்கு Nokia 6120 c இன் படம் வேண்டும் என்றால் Nokia 6120 c image என்று கூகுளில் தேடவும். இப்படி நீங்கள் தேடினால் உங்கள் நேரமும் மிச்சம். நீங்கள் எதிர்பார்த்த படம் உடனே கிடைத்துவிடும்.


# ஜிமெயிலை கணனியின் வன்தட்டாக பயன்படுத்துங்கள்



இணைய உலகில் ஒன்லைன் தகவல் பரிமாற்றத்திற்கு சிறந்த தொடர்பாடல் ஊடகமாக காண ப்படும் ஜிமெயிலை உங்கள் கணனியின் வன்தட்டாக (hard disk) பயன்படுத்த முடியும்.

இதன் மூலம் உங்கள் கண னியின் தகவல் சேமிப்பதற்கான வசதியை மேலும் 25MB வரை அதிகரிக்க முடியும்.


இதற்கான வசதியை Gmail Drive என்ற இலவச மென் பொருள் ஒன்று தருகின்றது. இதனைப் பயன்படுத்தி அமைக்கப்படும் மெய்நிகர் (virtual) வன்தட்டில் drag-dropமுறை மூலம் தகவல்களை சேமிக்க முடியும். இச்சேவையை பெறு வதற்கு இணைய இணைப்பு அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது.




**மெய்நிகர் வன்தட்டை உருவாக்கு வதற்கான படிமுறைகள்.**

1.இந்த தளத்திற்கு சென்று http://www.filehippo.com/download gmail Drive/gmail Drive என்ற மென்பொருளை தரவிறக்கம் செய்து உங்கள் கணனியில் நிறுவிக் கொள்ளவும்

2. தற்போது உங்களது my computer பகுதியில் மேலதிகமாக ஒரு வன்தட்டின் உருவம் காணப்படும். அதில் Right click செய்து தோன்றும் மெனு வில் Login As என்பதனை தெரிவு செய்யவும்.



3. அதன் பின் தோன்றும் விண்டோ வில் உங்களுக்குரிய பயனர் பெயர், கடவுச்சொல் என்பவற்றை கொடுத்து உள்நுழையவும்

4. இப்போது குறித்த வன்தட்டை பயன்படுத்த முடியும். வன்தட்டை செயலிழக்க செய்வதற்கு அதன் மேல் Right click செய்து தோன்றும் மெனுவில் Log out என்பதை தெரிவு செய்யவும்.

# அனைத்து வகையான ட்ரைவ்களையும் ஒரே இடத்தில் தரவிறக்க முடியும்

Drive CD களை தொலைத் துவிட்டவர்களுக்கு அல்லது குறித்த Drive இனை தேடுவோருக்கு இன் றைய தளம் மிகவும் பயனுள் ளதாக இருக்கும். இதில் பல வகை யான Drive கள் முற்றிலும் இல வசமாக Windows Xp, Windo ws 7 (32-Bit) , Windows 7 (64-Bit)போன்றவற்றுக்கு கிடைக்கும்.




**தரவிறக்கக்கூடிய Drive கள்**

Audio Drivers, Barebone Drivers, Bluetooth Drivers, EEE PcDrivers,Fax- Modem Drivers,Graphics Card Dri vers, LCD Monitors Drivers, Mobile Phone Drivers, Modem Drivers,MotherBoard Drivers,Mouse Drivers, Netbook Drivers,Networking Drivers, Notebook Drivers, Other Drivers, Printer Drivers, Scanner Drivers, Sound Drivers, TV Card Drivers, Webcam Drivers, Wireless Drivers,

**தரவிற்கு முகவரி**

http://www.all-driver. com

# இலங்கையில் சிறுவர் மீதான வன்முறைகள் அதிகரிப்பு

## பிரித்தானியாவின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**சிறுவர் உரிமை தொடர்பான ஐ.நா. சாசனத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்ற போதிலும் தற்போதும் இலங்கையில் சிறுவர் பாலியல் முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக மனிதஉரிமைகள் தொடர்பான தனது இறுதி அறிக்கையில் பிரித்தானிய வெளிவிவகார பணியகம் குறிப்பிட்டுள்ளது.**

உள்ளூர் ஊடகங்களின் கருத்துப்படி 2011 இல் இலங்கையில் முன்னெப்போது மில்லாதவாறு சிறுவர் பாலியல் துர்நடத்தைகள், பாலியல் வன்புணர்வுகள் போன்ற மீறல் சம்பவங்களை இலங்கை பொலிஸார் அதிகளவில் பதிவு செய்துள்ளனர்.

6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாக சில மதிப்பீட்டு தகவல்கள் சுட்டிகாட்டிநிற்கின்றன.

பாலியல் துர்நடத்தை மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்களுக்கு உட்படுத்தப்பட்டு தாக்கத்திற்கு உள்ளான சிறுவர் நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் பாதுகாப்பை வழங்கி வருகின்றது.

ஆனால், இந்தப் பிரச்சினையை முதன்மைப்படுத்தி அதற்கு சரியான தீர்வை எட்டக் கூடிய எந்தவொரு பயனுள்ள நிகழ்ச்சி திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என பிரித்தானிய வெளிவிவகார பணியகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் சிறுவர்களை கட்டாயமாக படையில் இணைத்தமையை வெளிக்கொண்டு வருவதில் போதியளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பிரித்தானிய மனித உரிமைகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் இடம்பெற்ற வேளையில் கிழக்கில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் அமைப்பால் பலாத்காரமாக படையில் இணைக்கப்பட்ட 13 சிறார்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் காணாமற் போன 600 சிறார்கள் தொடர்பான முறைப்பாட்டை யுனிசெப் நிறுவனத்தின் காணாமற் போனவர்களை கண்டுபிடித்து மீளவும் அவர்களது குடும்பங்களுடன் இணைக்கும் பிரிவு பெற்றுக் கொண்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரித்தானியா தொடர்ந்தும் கவனம் எடுத்துள்ளதாகவும் கூறும் அந்த அறிக்கையில் சிறுவர் மற்றும் ஆயுத மோதல் விவகாரத்துக்கான ஐ.நா. பாதுகாப்பு சபையின் செயற்பாட்டுக்குழு உள்ளடங்கலாக பல அமைப்புகளின் ஊடாக இலங்கையில் காணாமற்போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட சிறார்களின் நிலைப்பாடு தொடர்பாக பிரித்தானியா தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# அரசிற்கு முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் உதவி வழங்கும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு நல்கும் என அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் மேற்கொண்டுவரும் பேச்சுவார்த்தைகள் மூலம் அவர்களைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குக் கொண்டு வர முடியும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.ம.சு. முன்னணியின் ஐக்கிய மேதினப் பொதுக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் கொழும்பு மாநகரசபை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஸ்ரீ.மு.கா.மேதின வைபவங்களில் கலந்து கொள்ளும் பாரம்பரியத்தைக் கொண்ட கட்சி அல்ல. என்றாலும் தற்போதைய சூழ்நிலையை கருத்தில்கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஐக்கிய மேதினக் கமிட்டித் தலைவரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும விடுத்த அழைப்பை ஏற்று இவ்வைபவத்தில் கலந்து கொண்டிருக்கின்றேன்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் உரையாற்றுகின்ற முதலாவது மேதினக் கூட்டம் இதுவே. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐ.ம.சு.முன்னணியின் இறுதியாக இணைந்த பங்காளிக் கட்சி ஸ்ரீ.ல.மு.கா தான். அதனால் எமக்கும் பொறுப்புக்கள் உள்ளன. இதனை நாமறிவோம்.

யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் நிறைவேற்றப்பட வேண்டிய பல பொறுப்புக்கள் உள்ளன. அதனால் இந்த நாட்டின் முஸ்லிம் கட்சி என்ற வகையில் இச்சந்தர்ப்பத்தில் எமக்கு முக்கிய பாத்திரமுள்ளது.

அதனால் நாம் அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம்.

நாட்டில் முழுமையான அமைதியும் சமாதானமும் ஏற்படவும் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்க்கப்படுவதற்கு நாம் உச்ச அளவில் பங்களிப்புக்களை நல்குவோம் என்றார். (அ-2)

# ஆக்கங்களை அனுப்பலாம்

(பூநகரி)

பூநகரி கலாசார பேரவையினால் வெளியிடப்படவிருக்கும் **பூந்துணர் நறவம்2** இற்கான ஆக்கங்களை பூநகரிப் பிரதேசத்தில் வசிக்கும் படைப்பாளிகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டில் பூநகரிப் பிரதேச கலாசார விழாவின் போது முதலாவது வெளியீடு இடம்பெற்றது.

இவ்வருடம் எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் இரண்டாவது வெளியீடு வெளியிடப்படவிருக்கிறது.

இச்சஞ்சிகைக்கான ஆக்கங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு பூநகரி பிரதேச கலாசார பேரவையினரால் கேட்கப்பட்டுள்ளது. (அ-2-84)

# டெசோ அமைப்பின்மூலம் சர்வதேச ஆதரவை பெறலாம்

## திருமாவளவன் நம்பிக்கை

தி.மு.க. டெசோ அமைப்பை தொடங்கி இருப்பதை வரவேற்கிறோம். சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெற இது உதவும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது,

இலங்கை சென்ற குழுவில் இருந்த காங்கிரஸ் எம்.பிக்கள் பிரதமரிடம் ராஜீவ்-ஜயவர்த்தன ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என அறிக்கை சமர்ப்பித்து உள்ளனர். இது சரிவராது. எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் இலங்கை ஜனாதிபதியை தனியாக சந்தித்து பேசியது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

ஈழத்தமிழர்கள் பகுதியில் சிங்களவர்கள் குடியேறுவதை தடுக்க வேண்டும். அங்கிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும். (அ-2)

# கிழக்கில் 45 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு



கிழக்கு மாகாண விவசாய, கால்நடை, மீன்பிடித்துறை அமைச்சு மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இறால் குழி கிராமத்தில் 45 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான மீன்பிடி வள்ளங்கள், வலைகள், மீன் சேகரிக்கும் பெட்டிகள் என்பனவற்றுடன் துவிச்சக்கர வண்டிகளையும் வழங்கி வைத்துள்ளது.

அமைச்சர் துரையப்பா நவரெட்ணராஜா இதனை நேரடியாகச் சென்று வழங்கி வைத்துள்ளார். கடந்த பல தசாப்தங்களாக அபிவிருத்தி பணிகளில் இக்கிராமம் முற்றாக புறக்கணிக்கப்பட்டு இருந்தது. இப்பகுதி மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவித்து இருந்தார்கள். இப்பிரதேச மக்களின் குறைபாடுகளை நீக்கும் முகமாக இவை வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து அமைச்சர் கஜமுக வித்தியாலயத்தில் பிரதேச மக்களைச் சந்தித்து குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டார். (அ-2)

# கெய்ரோவில் பாதுகாப்பு அமைச்சகத்தை கண்டித்து கட்சியாளர்கள் போராட்டம்

## 20 பேர் பலி; 150 பேர் காயம்



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவில் நடந்த கலவரத்தில் 20 பேர் பலியாகியுள்ளனர்.

எதிர்வரும் 23,24 ஆம் திகதி ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெறவுள்ளது. எழு பிரதான கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றன. தேர்தல் ஆணையகமும் இடைக்கால இராணுவ உயர் மட்ட குழுவும் தேர்தலை முறைப்படி நடத்த நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கூறி சில கட்சிகள் தேர்தலை புறக்கணித்து விட்டன.

இதற்கிடையே தலைநகர் கெய்ரோவில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தை கண்டித்து சில கட்சியினர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஒரு வன்முறை கும்பல் கல், கண்ணாடி மற்றும் கையெறி குண்டுகளை வீசினர். ஆறு மணி நேரம் நடந்த இந்த சண்டையில் 20 பேர் கொல்லப்பட்டனர். 150 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

போராட்டக்காரர்களுக்கு எதிராக இராணுவம் சில கூலிப்படைகளை ஏவி இந்த வன்முறையை அரங்கேற்றியுள்ளதாக முஸ்லிம் சகோதர சுதந்திர நீதி கட்சியும் சுயேட்சைகளும் கண்டனம் தெரிவித்துள்ளன. (அ-2)

# ஆளில்லாத விமானங்களால் தாக்குதல் நடத்தக்கூடாது என்ற சட்டம் இல்லை

## அமெரிக்கா தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஆளில்லாத விமானங்கள் மூலம் தாக்குதல்கள் நடத்த கூடாது என்று எந்த சட்டமும் இல்லை என அமெரிக்கா கூறியுள்ளது.

அல்கொய்தா பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ளும் இத்தகைய தாக்குதல்கள் குறித்து பாகிஸ்தான் கவலை தெரிவித்திருந்தது.

அமெரிக்காவின் இதுபோன்ற நடவடிக்கைகளால் அப்பாவி பொது மக்கள் பலரும் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் பாகிஸ்தான் குற்றம் சாட்டியிருந்தது.

இந்த நிலையில் தனது தாக்குதல் முறையில் தவறு ஏதுமில்லை என்று அமெரிக்கா திட்டவட்டமாக கூறியுள்ளது.

இதனால் பாகிஸ்தான் எல்லை பகுதிகளிலும் பிற இடங்களிலும் ஆளில்லா விமான தாக்குதல் தொடரும் என்பதை அமெரிக்கா உறுதி செய்துள்ளது.

அல்கொய்தா பயரங்கரவாத இயக்கத்தின் தலைவர் பின்டேலன் கொல்லப்பட்டு ஓராண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு வோஷிங்டனில் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது.

இதில் பங்கேற்ற அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கான ஆலோசகர் ஜான் பெர்னென் பேசும் போது,

கொடூரமான பயங்கரவாத இயக்கங்களுக்கு எதிராக ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்துவது சரியான நடவடிக்கை தான்.

அமெரிக்காவுக்கு எதிராக பயங்கர ஆயுதங்களுடன் போர் நடத்தும் அல்கொய்தா, அமெரிக்க இராணுவ நிலைகளையும் குறிவைக்கிறது.

எனவே அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ஆளில்லாத விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தக்கூடாது என்று எந்த சர்வதேச சட்டமும் இல்லை. பயங்கரவாதிகள் மூலம் எத்தனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை வெளிப்படையாகவே தெரிவியுங்கள் என்று ஜனாதிபதி ஒபாமா இராணுவ அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

எனவே இதனை விபரிப்பதில் எங்களுக்கு எவ்விதமான தயக்கமும் இல்லை என்றார். ஆள் இல்லாத விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்படுவது குறித்து அமெரிக்கா இப்போதுதான் முதல் முறையாக வெளிப்படையாக பேசியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தாக்குதலை நிறுத்தாவிட்டால் பொருளாதாரத்தடை விதிக்கப்படும்

## ஐ.நா.சபை எச்சரிக்கை

(ஜெனீவா)

தாக்குதல்களை நிறுத்தாவிட்டால் சூடான், தென்சூடான் ஆகிய இரு நாடுகளின் மீதும் பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என்று ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆபிரிக்க நாடான. சூடானில் இருந்து பிரிந்து தெற்கு சூடான் கடந்த ஆண்டு உதயமானது. அதிலிருந்தே இரு நாடுகளுக்கும் இடையே மோதல் நடந்து வருகிறது.

இங்கு ஏராளமான எண்ணெய் கிணறுகள் உள்ளன. இவற்றுக்கு இரு நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன.

இதனால்தான் மோதல் நடந்து வருகின்றது. இந்த நிலையில் ஹெக்லிக் பகுதியை தெற்கு சூடான் இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. தற்போது இரு தரப்பு இராணுவமும் சண்டையில் ஈடுபட்டு வருகின்றன.

சண்டையில் இருந்து விலகி இரு இராணுவமும் தங்கள் நாட்டு உட்பகுதிக்கு சென்றுவிட வேண்டும் என்று ஐ.நா. சபை கேட்டுக்கொண்டது. ஆனால் அதை இருநாடுகளும் மதிக்கவில்லை. இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்பு சபைக்கூட்டம் நடந்தது.

அதில் இரு நாடுகளும் சண்டையை நிறுத்த வேண்டும். பிரச்சினைக்குரிய இடத்தில் இருந்து இரு நாட்டு படைகளும் வாபஸ் பெற வேண்டும். இல்லை என்றால் சூடான் மற்றும் தெற்கு சூடான் மீது பொருளாதாரத்தடை விதிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. (அ-2)

# கப்பல் பயணிகளை சுட்டுக்கொன்று இணையத்தளத்தில் ஒளிபரப்ப ஏற்பாடு

## அல்கொய்தாவின் சதித்திட்டம் அம்பலம்

(பேர்லின்)

பயணிகள் கப்பல்களை கைப்பற்றி அதிலுள்ள பயணிகள் ஒருவர் பின் ஒருவராக சுட்டுக்கொன்று அதை இணையத்தில் நேரடியாக ஒளிபரப்ப அல்கொய்தா தீட்டியிருந்த திட்டம் வெளியாகியுள்ளது.

அல்கொய்தாவின் திட்டங்கள் ஒன்லைனிலும் வீடியோ சீடிகளிலும் மெமரி ஸ்டிக்களிலும் உலா வருவது வழக்கம். இதை உளவுப் பிரிவினர் அவ்வப்போது கண்டுபிடித்து சதித்திட்டங்களை முறியடித்து வருகின்றனர்.

பெரும்பாலும் பாதுகாப்புப் படையினரிடம் தீவிரவாதிகள் சிக்கும் போது அவர்களது வீடுகளில் நடத்தப்படும் சோதனைகளில் சதி திட்டங்கள் அடங்கிய கணனி ஹார்ட் டிஸ்குகள் , சிடி.க்கள் உள்ளிட்டவை சிக்குவது வழக்கம்.

ஆனால் அதையும் திசை திருப்ப இந்த சதித்திட்டம் ஆபாச வீடியோக்களில் சேர்த்து மறைக்க அல்கொய்தா தீவிரவாதிகள் முயன்றுள்ளனர்.

முதலில் இதை ஆபாச வீடியோ என நினைத்து உளவுப் பிரிவினர் தொடர்ந்து முழு வீடியோவையும் பார்த்தபோது இதில் என்க்ரிப்ட் செய்யப்பட்ட டேட்டா இருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து அந்த வீடியோ பைலை ஆராய்ந்த போதுதான் அதில் பயணிகள் கப்பல்களை கடத்தும் திட்டம் குறித்த விபரங்களும் இருந்தது தெரிய வந்தது.

இந்தத் திட்டத்தின் படி 10 தீவிரவாதிகள் பயணிகள் கப்பலைக் கடத்துவது பின்னர் பயணிகளுக்கு அல் கொய்தா தீவிரவாதிகளுக்கு தரப்படும் சிவப்பு நிற உடை போன்ற உடைகளை அணிவிப்பது பின்னர் பயணிகளை ஒருவர் பின் ஒருவராக சுட்டு வீழ்த்துவது. இதை இணையத்தில் நேரடியாக ஒளி பரப்புவது என்று சதி தீட்டப்பட்டிருந்தது.

இதையடுத்து லோதினும் ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவிலும் இருந்த அவரது கூட்டாளியான யூசுப் ஒகேக் என்பவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களது தலைவனாக ரஷீத் ரெளப் என்பவர் செயற்பட்டதும் தெரிய வந்துள்ளது. (அ-2)

# உலக தரிசனம்

# ரஷ்யாவில் மக்கள் தொகையை அதிகரிக்க குடும்பத்தில் இரு பிள்ளைகள் அவசியம்

## ரஷ்ய அரசு கோரிக்கை

(ரஷ்யா)

ரஷ்யாவில் மக்கள் தொகை வேகமாக குறைந்து வருவது கவலை அளிப்பதாக உள்ளது என விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக ரஷ்யாவின் மொத்த மக்கள் தொகையில் புள்ளி 5 சதவீதம் தொடர்ந்து குறைந்து வருவதாகவும் இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு பெற்றோரும் குறைந்தது 2 குழந்தைகளையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ரஷ்ய அரசு அறிவித்துள்ளது.

மேலும் இரண்டாவது குழந்தை பெற்றக்கொள்ளும் பெற்றோருக்கு 5 இலட்சம் ரூபா வழங்கும் திட்டத்தையும் ரஷ்ய அரசு அறிமுகப் படுத்தியுள்ளது.

இருப்பினும் குழந்தை பிறப்பு விகிதத்தில் போதுமான முன்னேற்றம் எதுவுமில்லை. இந்நிலை தொடந்தால் தற்போது 143 மில்லியனாக இருக்கும் ரஷ்யாவின் மக்கள் தொகை 2050 ஆம் ஆண்டில் 111 மில்லியனாக குறைந்து விடும் என ரஷ்ய ஆர்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தை பெற்றுக்கொள்பவர்களுக்கான அரசின் உதவிகள் போதுமானதாக இல்லை என்று குற்றம் சாட்டும் பொது மக்களில் சிலர் குழந்தை வளர்ப்புக்கு ஆகும் செலவு கூடிக்கொண்டே இருப்பதை ரஷ்ய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என கூறப்படுகின்றது. (அ-2)



மே தினத்தையொட்டி தாய்லாந்து நாட்டின் பாங்கொங் நகரில் அந்நாட்டு மன்னர் புமிபூல் அயோத்துல்லா, அவரது மனைவி ஆகியோர் உருவப்படத்தினை யானை மீது வைத்து பொதுமக்கள் பேரணி நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# உலகிலேயே பெரிய கடித உறை தயாரித்து மாணவர்கள் சாதனை

(அலிகார்)

உத்தரப்பிரதேசத்தில் உள்ள அலிகார் பல்கலைக்கழக மாணவர்கள் கடதாசியினால் செய்யப்பட்ட உலகிலேயே பெரிய கடித உறையை உருவாக்கி சாதனை புரிந்துள்ளனர்.

அலிகார் பல்கலைக்கழக மாணவர்கள் 12 பேர் ஒருங்கிணைந்து 39 × 27 அடியில் இந்த கடித உறையை உருவாக்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் வெவ்வேறு துறையை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கடித உறையில் அமைதி வழியை முன்னெடுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் முகவரி எழுதப்பட்டிருந்தது. கடிதத்தில் அமைதி வலியுறுத்தும் வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

இந்தச் சாதனை குறித்து உலக சாதனைக்கான கின்னஸ் புத்தக அமைப்பிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போதுவரை 32×23 அடியில் உருவாக்கப்பட்ட கடித உறையே உலகின் மிகப்பெரிய கடித உறையாக இருந்து வருகிறது. இது இங்கிலாந்தை சேர்ந்த ஸ்டான்லி அன்ட் கோ எனும் அமைப்பு மூலம் உருவாக்கப்பட்டது. இந்த உறையும் மாணவர்களால் உருவாக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பாரதச் செய்தி

# அவதூறாக பேசியவர்களுக்கு நித்தியானந்தா எச்சரிக்கை

மதுரை இளைய ஆதீனமாக நித்தியானந்தா நியமிக்கப்பட்டதற்கு இந்து முன்னணி அமைப்புக்கள் மற்றும் ஏனைய ஆதீனகர்த்தாக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் சுவாமி நித்தியானந்தா தன்னைப் பற்றி அவதூறாக பேசியவர்கள் இன்னும் 10 ஆம் திகதிக்குள் விளக்கமளிக்க வேண்டுமென்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஒருவேளை அவர்கள் விளக்கமளிக்காத பட்சத்தில் மான நஷ்ட வழக்கு தொடுக்கவுள்ளதாகவும் தனது சீடர்கள் உண்ணாவிரதம் இருக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் நித்தியானந்தாவிற்கு எதிராக மதுரை உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவில் இளைய ஆதீனம் பதவியிலிருந்து நித்தியானந்தாவை நீக்க உத்தரவிடுமாறு கூறப்பட்டுள்ளது. இம்மனு நாளையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (அ-2)

# கச்சதீவில் தஞ்சம் புகுந்த தமிழக மீனவர்கள் விரட்டியடிப்பு

கடலில் மீன் வளம் பெருகுவதற்காக தற்போது விசைப்படகு மீனவர்கள் கடலுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நாட்டுப் படகு மீனவர்களுக்கு இந்தத் தடை கிடையாது. அவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடித்து வருகின்றார்கள்.


இந்நிலையில் இராமேஸ்வரம் அருகே பாம்பனில் இருந்து நேற்றையதினம் நூற்றுக்கணக்கான நாட்டுப் படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது பலத்த காற்று வீசியது. இதில் 5 படகுகள் அவர்கள் கட்டுப்பாட்டை இழந்து காற்றடித்த திசையை நோக்கி சென்றன. இறுதியில் அந்த 5 படகுகளும் கச்சதீவில் கரை ஒதுங்கின. அந்தப் படகுகளில் இருந்த 25 மீனவர்களும் கச்சதீவில் இறங்கி நின்றனர்.

அந்த நேரத்தில் இலங்கை கடற்படையினரின் ரோந்து படகு அங்கு வந்தது. இலங்கை கடற்படையினர் பாம்பன் மீனவர்களை இங்கு ஏன் வந்தீர்கள் என்று கேட்டனர். அதற்கு காற்று அடித்ததால் திசை மாறி வந்துவிட்டோம் என்றும் உயிர் பிழைக்க இங்கு கரையேறியுள்ளோம் என்றும் கூறினார்கள்.

ஆனால் அவர்கள் சிறிதும் மனிதாபிமானம் இன்றி இங்கே யாரும் நிற்கக் கூடாது. உடனே உங்கள் பகுதிக்கு சென்றுவிடுங்கள் என்று கூறி விரட்டியடித்தனர். இதனால் 25 மீனவர்களும் தங்கள் படகுகளை எடுத்துக் கொண்டு திரும்பினார்கள். (அ-2)

# தமிழீழத்தை அமைப்பேன்; கலைஞரின் நிலை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது

## பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ்



(சென்னை)

**இலங்கை இனச் சிக்கலுக்கு தமிழீழம்தான் ஒரே தீர்வு என்பதில் தமிழ் உணர்வாளர்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. இதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு அளிக்கப்பட வேண்டும் என்பதையும் எவரும் மறுக்க முடியாது. ஆனால் தமிழகத்தில் ஆட்சி பொறுப்பில் இருந்தபோது தமிழீழம் அமைப்பதற்காக அல்லது ஈழத்தமிழர் படுகொலையை தடுப்பதற்காக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத கருணாநிதி ஆட்சிபொறுப்பை இழந்த பின்னர் தமிழீழம் அமைத்தே தீருவேன் என்று முழங்க தொடங்கியிருப்பது தான் தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் பல்வேறு ஐயங்களை ஏற்படுத்தியிருக்கிறது என பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

டெசோ அமைப்பு உருவாக்கியுள்ள தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் பல்வேறு கேள்விகளை கேட்டுள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளை ஒன்றிணைத்து தமிழீழம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள் வதற்காக தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு (டெசோ) தொடங்கப்பட்டிருப்பதாகவும் அதன் தலைவராகவும் தாம் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும் தி.மு.க. தலைவர் தெரிவித்திருக்கிறார்.

அதுமட்டுமன்றி டெசோ அமைப்பின் முதல் கூட்டம் நடைபெற்றுவிட்ட போதிலும் தமிழீழம் அமைப்பதற்கான அதன் செயற்றிட்டம் என்ன என்பது அறிவிக்கப்படவில்லை. மாறாக தனித்தமிழீழம் அமைக்க தமிழர்கள் வாழும் பகுதிகளில் ஐ.நா.மூலம் பொது வாக்கெடுப்பு நடத்த முயற்சி மேற்கொள்ளும் படி மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்படும் என்று கூறியிருப்பதால் எந்த பயனும் ஏற்படபோவதில்லை. அதுமட்டுமன்றி மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுப்பதற்கு கருணாநிதி சாதாரண மனிதர் அல்ல. மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் மிக மூத்த தலைவர் கருணாநிதிதான்.

இவ்வளவு செல்வாக்கு உள்ள மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுப்பதை விட்டுவிட்டு தமிழீழம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்படி காங்கிரஸ் தலைமைக்கு நிர்ப்பந்திக்க வேண்டும். ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளது. அப்போது தனி தமிழீழம் அமைப்பதற்காக உலகம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்களிடையே ஐ.நா. மூலம் பொது வாக்கெடுப்பு நடத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை கருணாநிதி முன்மொழிந்து நிறைவேற்ற வேண்டும்.

மத்திய அமைச்சரவை கூட்டத்திலும் இதேபோன்ற தீர்மானத்தை தி.மு.க. கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். டெசோ அமைப்பின் குறிக்கோளை நிறைவேற்றும் நோக்குடன் இலங்கை இனச்சிக் கலுக்கு தனி தமிழீழம் அமைப்பதை தவிர வேறுவழியில்லை என்ற உண்மை நிலையை வட இந்திய தலைவர்களுக்கும் உலக நாடுகளின் தலைவர்களுக்கும் உணர்த்தவும் அவர்களின் ஆதரவை திரட்டவும் தேவையான நடவடிக்கைகளையும் உடனே தொடங்கும் படி தி.மு.க. தலைவர் கருணாநிதியை கேட்டுக் கொள்கிறேன் என்று ராமதாஸ் கூறியுள்ளார். (அ-2)




தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜோக்கப் ஜூம்மா (வலது) மற்றும் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேல் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

# தனித் தெலுங்கானா பிரச்சினையால் இந்திய நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

(புதுடில்லி)

மீண்டும் தனித்தெலுங்கானா பிரச்சினையை தெலுங்கானா எம்.பிக்கள் கிளப்பியதை அடுத்து மக்களவை நேற்று முன்தினம் நண்பகல் வரை ஒத்திவைக்கப் பட்டது.

பாராளுமன்றத்தின் மக்களவை நேற்றுமுன்தினம் காலை கூடியதும் சந்திரசேகரராவ், விஜய சாந்தி ஆகிய தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி எம்.பிக்கள் தனித் தெலுங்கானா பிரச்சினையை வலியுறுத்தி சபையின் மையப்பகுதிக்குச் சென்று கோசங்களை எழுப்பினார்கள். தனி தெலுங்கானா அமைக்கக்கோரும் வாசகங்கள் அடங்கிய கோரிக்கை பதாகைகளை கைகளில் ஏந்தியபடி அவர்கள் அரசுக்கு எதிராக கோசங்களை எழுப்பினார்கள்.

அப்போது தனி தெலுங்கானா வேண்டும் என்றும் தெலுங்கானா வாழ்க என்றும் அவர்கள் கோசம் எழுப்பினார்கள்.

இதனால் சபையில் பெரும் அமளி ஏற்பட்டது. மக்களவையில் ஏற்கனவே இந்த எம்.பிக்கள் இப் பிரச்சினை குறித்து அமளியில் ஈடுபட்ட நிலையில் மீண்டும் இப் பிரச்சினை குறித்து அமளி ஏற்படுத்தியதால் கேள்வி நேரத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. கோசம் எழுப்பிய எம்.பிக்களை அவரவரது இருக்கைக்கு சென்று அமருமாறு சபாநாயகர் மீரா குமார் கேட்டுக்கொண்டார்.

ஆனால் அவரது வேண்டுகோளை ஏற்க மறுத்த தெலுங்கானா எம்.பிக்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

நேற்று நண்பகல் 12 மணி வரை சபாநாயகர் மீராகுமார் ஒத்தி வைத்தார். (அ-2)

தேரைகள் ஓடையிலே சேர்ந்து மிதக்கையிலே
நாரைகள் வந்திடவே பாவி மனம் நைந்து
குலைந்தடி —கவிமணி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கூடாத கூட்டத்தில் கூடியதால் நடந்த நாசங்கள் மோசங்கள்

காட்டு நரி ஒன்று வீட்டுப்பூனையைச் சந்தித்தது.

பூனையின் வாயில் இருந்து பசுப்பால் மணம் வீசிற்று.

இந்த மணத்தால் மகிழ்ந்த நரி, பூனையாரே! இஃது என்ன நறுமணம் என்று வினவியது.

இது பசுப்பால். என் வீட்டில் எனது எஜமான் நாள்தோறும் இந்தப் பாலை எனக்குத் தருவார். அதனைப் பருகி நான் மகிழ்ந்து கொள்வேன் என்றது பூனை.

பூனையின் கதையில் விருப்புக் கொண்ட நரி, பூனையாரே! எனக்கும் பசுப்பால் பருக விருப்பம். உதவுவீரா? என்று கேட்டது.

அதற்கு சரி! என்னோடு வா என்று கூறி பூனை, நரியைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றது.

வீட்டில் இருந்தவர்கள் உறங்கும் நேரம். ஒரு பெரிய சட்டியில் பசுப்பால். அதோ பசுப்பால் உன் விருப்பம்போல் பருகிக் கொள் என்றது பூனை.

கிடையாக் கிடைப்பு. சட்டியில் இருந்த பால் முழுவதையும் மூசிமூசிக் குடித்துத் தள்ளியது நரி.

பால் குடித்து வயிறு நிறைந்த நரி பூனையாரே நான் பாடப் போகிறேன் என்றது.

அப்படியா நன்றாகப் பாடு, உன் பாட்டிசையால் என் எஜமான் மிகவும் மகிழ்வார் என்று கூறி விட்டு பூனை அவ்விடத்தில் இருந்து நழுவிக் கொண்டது.

பால்குடித்த சுவையில் நரி ஊளையிட்டது.

நரியின் ஊளைச் சத்தம் கேட்டு எழுந்த வீட்டின் எஜமான் தன் வீட்டில் நரி நிற்பதைக் கண்டு திகைத்து அதனைத் தடி கொண்டு அடித்துக் கொன்று வீதியோரத்தில் வீசிவிட்டார்.

தம் கூட்டத்தில் இருந்த நரியைக் காணாத நரிக்கூட்டம் அதனைத் தேடும் பணியில் ஈடுபட்டது.

ஊர்ஊராகத் தேடிவரும் வேளையில் வீதியோரத்தில் வீங்கிவிறைத்தபடி அந்த நரி இறந்து கிடப்பதை நரிக்கூட்டம் கண்டது.

எப்படி நரி இறந்திருக்கும்? நரிக்கூட்டத்தில் இருந்தவர்கள் ஆளுக்காள் கருத்துக் கூறினர்.

நரி 1: கூடாத கூட்டங்கள் கூடி இருப்பார் போல.

நரி 2: கூடாத கூட்டம் கூடியிருந்தாலும் பரவாயில்லை. கூடங்கள் மாடங்களும் ஏறியிருப்பார் போல.

நரி 3: கூடங்கள் மாடங்கள் ஏறியிருந்தாலும் பரவாயில்லை.நாதங்கள் கீதங்களும் இசைத்திருப்பார் போல.

நரிக் கூட்டத்தின் தலைவன்: நாதங்கள் கீதங்கள் இசைத்ததால்தான் இந்த நாசங்கள் மோசங்கள் நடந்திருக்கும். இவ்வாறு நரியின் இறப்புக்கு காரணம் கூறிக்கொண்டனர்.

இந்தக் கதைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் நிறையத் தொடர்பு உண்டு.

தங்கள்பாட்டில் மே தினத்தை கொண்டாடுவதை விடுத்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூடி மே தினத்தைக் கொண்டாட நினைத்தது முதல் பிழை.

அவ்வாறுதான் மே தினத்தை நடத்துவதாக இருந்தால், மேடையேறி கொடி பிடிப்பதையாவது தவிர்த்திருக்க வேண்டும்.

என்னசெய்வது கூடாதகூட்டத்துடன் கூடி மே தினத்தைக் கொண்டாடி, மேடையேறி சிங்கக் கொடியைப் பிடித்ததால் மீண்டும் ஒரு தடவை சிங்கள அரசியல் தலைமையின் சதியில் நம் தமிழ் அரசியல் தலைமை வீழ்ந்து விட்டது. கூடவே தமிழ் அரசியல் தலைமை வெறும் ஏமாளிகள்தான் என்பதும் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

# புலிக்கொடியை வைத்து அரசியல் நடத்துகிறது மஹிந்தவின் அரசு

## மனோ கணேசன் கொதிப்பு

விடுதலைப்புலிகளை அழித்துவிட்டோம் என்று சொல்லி அவர்களை இன்னமும் திட்டித்தீர்க்கும் இந்த அரசாங்கம் இன்று புலிக்கொடியை வைத்து அரசியல் செய்யும் வங்குரோத்து நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சிங்கள மக்களிடம் தமது செல்வாக்கைத் தக்கவைத்துக்கொள்ள இவர்களுக்குப் புலி, புலிக் கொடி என்ற வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் எஞ்சியில்லை என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

எதிர்க் கட்சிகளின் ஊர்வலத்தில் புலிக் கொடி இருப்பதாக உடனடியாக அரச தொலைக்காட்சியில் காட்டப்பட்டது. அதாவது இன்று நாட்டில் சட்டவிரோதமாக்கப்பட்டுள்ள புலிகளின் கொடியைப்பிடிப்பவரைக் கண்டால் ஆளைப்பிடிப்பதை விட்டுவிட்டு அந்தக் காட்சியை அரச தொலைக்காட்சிக்காரர்கள் படம்பிடித்துள்ளார்கள். இதன் பின்னணியைப் புரிந்து கொள்வது கஷ்டமானது அல்ல, என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சிகளின் யாழ் மே தின ஊர்வலத்தில் புலிக் கொடி காட்டப்பட்டதாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்;

தேசியக் கொடியை சிங்கள மக் கள் சிங்கக் கொடி என்று தான் பரவலாகக் கூறுகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன், இந்த சிங்கக் கொடி என்ற தேசியக் கொடியை கையில் எடுத்தது கூட இந்த அரசாங்கத்திற்கு ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக தெரிய வில்லை. அந்த அளவுக்கு தமது சொந்த அரசியல் நோக்கங்கள் இவர்களது கண்களை திரையிட்டு மூடியுள்ளன.

வடக்கில் நிகழ்ந்து முடிந்த மே தின நிகழ்வில் தேசிய ஒற்றுமை, தேசிய ஐக்கியம் என்பவை பற்றித் தான் அதிகம் பேசப்பட்டன.

உண்மையான தேசிய ஐக்கியத்திற்கு அடிப்படையாக தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரம் பிரித்து வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து தேசிய ஒற்றுமை கருத்துகளுக்கு இணையாக பேசப்படவில்லை. இது தற்செயலாக நிகழ்ந்துவிட்ட யதார்த்தம். இவை அனைத்திற்கும் சிகரமாக பிரிபடாத இலங்கைக்குள் வாழும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பின் அடையாளமாக கூட்டமைப்பு தலைவர் தேசிய சிங்க கொடியை கையில் ஏந்தினார்.

அதன்மூலம் சிங்கள மக்களுக்கு அவர் ஒரு செய்தியை வெளிப்படுத்தினார் என நான் நம்புகின்றேன்.

ஆனால் இத்தனை அரசியல் நாகரிகத்துடன் கூடிய நல்லெண்ண அடையாளங்களுக்கு பின்னரும் இந்த அரசாங்கம் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்து கொண்டுள்ளது.

இந்த அரசுடன் தமிழ் மக்களின் தலைமைகள் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்த கொள்ள வேண்டும் என்பதை இந்த நிகழ்வுகள் அறிவுறுத்துகின்றன. (அ-2)

# மஹோற்சவம்

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ்வுற்சவ நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் 6-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை திருக் கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளதாக பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## ஸ்ரீ வடபத்திரகாளி கோவில்

தாவடி – கொக்குவில்

### தேர்த் திருவிழா (இன்று)

தேரேறி வாருமம்மா எங்கள்
தெய்வமே பத்திரகாளி
தாவடி பதி உறையும்
தாயே உன் காலடி கதி என்றே
காத்துக் கிடக்கின்றோம்

அன்புடனே உனைத் தொழும்
அடியார்கள் குறை தீர்க்க
அன்னை பத்திரகாளியே இன்று
தேரேறி வாருமம்மா

கற்பூரச் சட்டியும்
காவடியும் புடைசூழ
பஜனையும் அடியழிப்பும்
பிரதட்டையும் பின்தொடர

வேப்பமரக் கிளைகள்
சாமரை வீசிட
அரச மர இலைகள்
ஆலவட்டம் பிடித்திட
தேரேறி வாருமம்மா

பகைமைகள் பூசல்கள்
ஓடி ஒழித்திட
பண்பாக எல்லோரும்
இன்பமாய் வாழ்ந்திட

அம்மா அம்மா என்றே
அடியார்கள் அழைக்கின்றார்
அருள் மழையைப் பொழிய
அருகினில் வாருமம்மா
வட பத்திரகாளியே

- உமைவண்ணன்

# மருதங்கேணிக்கு இன்று மின்சாரம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதிக்கு இன்று வெள்ளிக்கிழமை முதல் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மின்சார சபையினர் மேற்கொண்டுள்ளனர். மருதங்கேணி வைத்தியசாலை, உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், பொலிஸ் நிலையம், தாழையடி றோ.க. த.க. பாடசாலை மற்றும் திணைக்களங்களுக்கு இன்று மின்சார இணைப்பு வழங்கப்படவுள்ளது.

இப் பகுதி மக்களின் நீண்டகால வேண்டுகோள் இன்று நிறைவேற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-10)




ஒருவரோடு சேர்ந்திருந்த பின்னர் பிரிவது என்பது பெருந்துன்பம் தருவதாகும். மனித வாழ்க்கையில் இப்பிரிவு பல நிலைகளில் உணரப்படலாம். ஆணும் பெண்ணும் பிரிதல், தாயும் சேயும் பிரிதல், உறவினர் பிரிதல், நட்புடையோர் பிரிதல் எனப்பல நிலைகள் உண்டு. சேர்ந்திருப்பதன் நெருக்கமான நிலை புணர்தல் எனப்படுகிறது. சிறப்பாக ஆண் பெண்ணின் நெருக்கமான சேர்க்கையே புணர்தல் எனப்படுகிறது. சிறப்பாக ஆண் பெண்ணின் நெருக்கமான சேர்க்கையையே புணர்தல் என்ற சொல் குறித்து நிற்கிறது. ஆனால் பக்திநிலையில் இச்சொல் இறைவனுக்கும் இறையடியார்க்கும் இடையேயுள்ள உணர்வுநிலையைச் சுட்டி நிற்கிறது.

மணிவாசகர் பாடிய திருச்சதகப் பாடல்களுள் ஆனந்தத்தழுந்தல் என்னும் பகுதியிலுள்ள பாடல்கள் இறைவனது பேரின்பத்தில் முழுகி நிற்கும் நிலையை விளக்குகின்றன. இப்பகுதியிலுள்ள முதற்பாடல் புணர்ப்ப என்றசொல் நான்கடிகளிலும் தொடக்கச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மணிவாசகர் இறைவன் குருந்தரமர நிழலிலே வீற்றிருந்து தன்னை அருள்நோக்கம் செய்ததைப் புணர்ப்ப தொக்க எந்தையென்னை யாண்டு பூண நோக்கினாய் என்று பாடியுள்ளார். இங்கு பக்திநிலையிலே அடியவளை இயைவிக்கும் காலம்வரும்போது இறைவன் வலியவந்து ஆட்கொள்ளும் அற்புத நிலை சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. மனப்பக்குவம் ஏற்படும்போது நெருக்கம் ஏற்படும். மனிதவாழ்வில் ஆண், பெண் அன்பான உறவுநிலை இதை விளக்கி நிற்கிறது. ஆனால் மணிவாசகர் இறைவனின் ஆழமான அன்பு நிலையை விளக்கவே புணர்ப்ப என்ற சொல்லைப் பாடலில் பயன்படுத்தி உள்ளார். பூணநோக்குதல் என்பது அடிமைத்தொண்டு பூணும்படி தன்னை நோக்கியதை விளக்கியுள்ளது.

தமிழிலே காணல், பார்த்தல், நோக்கல் என மூன்று சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. காணல் என்பது ஒன்றைக் கண்ணால் காணுதல். பார்த்தல் என்பது கண்ணாற்கண்டதைக் குறிப்பாகப் பார்த்தல். நோக்கல் என்பது பார்த்ததனுடைய தொடர்பை அறிவிக்கக்கூர்மையாகப் பார்வையைப் படரவிடல். இம்மூன்று நிலைகளில் இறைவனை நோக்கினால் தன்மனதில் ஏற்பட்ட மாற்றத்தை மணிவாசகர் அழகாகப் புலப்படுத்தியுள்ளார். ஏனெனில் இறைவன் தன்னைப்பிரிந்த போது புணர்ப்பது அன்று இது எனப் பிரிந்ததாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு பிரிந்தால் இவருடைய தொடர்பும் என்னாகும் என்பதே மணிவாசகர் கேள்வியாகும். கருணை வள்ளலான இறைவன் இப்படியென்னைப் பிரிவது சரியன்று. எனவே இறையன்பு என்னை மீண்டும் தன்னோடு இணைத்துக் கொள்ள வேண்டும். எனக்கு நின்கழற் கண்ணே புணர்ப்பதான நிலையே வேண்டும். இறைவன் திருவடிகளிலே இணைகின்ற அன்புதான் நிரந்தரமானது. அதுவே உயர்ந்த சிவானந்தப் போகமாகும். நயனதீட்சை செய்த நிலையை மணிவாசகர் நோக்குதல் என்ற சொல் மூலம் விளக்கியுள்ளார்.

இறைவனை அங்கணாளன் எனக் குறிப்பிட்டு இருப்பது கவனத்திற்குரியது. இச்சொல் அழகிய கண் என்ற விளக்கத்திற்கும் அப்பால் அருட்பார்வையுடையவன் என்ற சிறப்பான பொருளையும் தந்து நிற்கின்றது. இறைவன் பிரிவுக்குரிய காரணம் மணிவாசகருக்குத் தெளிவாய்த் தெரிகிறது. தான் இந்த மண்ணுலகிலே அனுபவிக்கவேண்டிய பிராரத்த கன்மம் முடிபு பெறவில்லை என்பதை உணர்ந்தே இறையருளை

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வேண்டுகிறார்.


*புணர்ப்ப தொக்க எந்தை யென்னை*
*யாண்டு பூண நோக்கினாய்*
*புணர்ப்ப தன்றி தென்றபோது*
*நின்னொ டென்னா டென்னிதாம்*
*புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு*
*நின் கழற்கணே*
*புணர்ப்ப தாக அங்கணாள*
*புங்கமான போகமே*

# ஒரு பெரிய மனிதனின் புதிய நாடகம்

## வைகோவின் கேள்விக்கணைகள்

### ஜூனியர் விகடன்

தமிழீழ முகமூடியை மறுபடியும் தாங்கி வலம் வரத் தொடங்கி விட்டார் கருணாநிதி. நேரத்துக்கும் ஆளுக்கும் தகுந்த மாதிரி வேடம் தாங்குவது அவருக்கு வழக்கமானதுதான். ஆனால், அதற்கு தமிழ் இனத்தையும் ஈழத்தில் கொன்று குவிக்கப்பட்ட உடல்களையும் பணயம் வைக்க அவர் முடிவெடுத்திருப்பதுதான் வேதனையானது.



இலங்கைத் தீவில் இலங்கை அரசு ஈவு இரக்கம் இன்றி தமிழ் இனப்படுகொலையை நடத்தியதற்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைப் போர்க்களத்தில் முறியடிப்பதற்கும் இந்தியாவின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ரேடார்களும் ஆயுதங்களும் கொடுத்துதான் அடிப்படைக் காரணம். ஆயிரக்கணக்கான கோடி ரூபாயும் வழங்கி இந்தியாவின் முப்படைத் தளபதிகளையும் அவ்வப்போது அனுப்பி வைத்து இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலை யுத்தத்தை இயக்கியதற்கு அசைக்க முடியாத ஆதாரங்களும் சாட்சிகளும் உள்ளன. இந்த மன்னிக்க முடியாத துரோகத்தை செய்த இந்திய அரசின் அமைச்சரவையில் பங்கேற்று உடந்தையாக செயற்பட்டார் கலைஞர் கருணாநிதி.

தமிழ் இனப்படுகொலைக்கு இவரும் ஒரு காரணம் என்று உலகத் தமிழர்கள் உள்ளங்களில் ஏற்பட்டுள்ள பழியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் தடுமாறித் தத்தளிக்கும் தி.மு.கழகத்தின் தொண்டர்களை ஏமாற்றுவதற்காகவும் தமிழீழ விடுதலை முகமூடியை அணிந்து கொண்டு தமிழர் தரணியில் இப்போது பவனி வரத் துடிக்கிறார்.

2004 ஆம் ஆண்டு சோனியாவின் ஆளுமையில் டாக்டர் மன்மோகன்சிங் தலைமையில் ஐக்கிய முற் போக்கு கூட்டணி அரசு அமைந்தவுடன் இலங்கையோடு இந்திய இராணுவ ஒப்பந்தம் செய்ய இருக்கி றது என்ற செய்திகள் வெளியானபோது அதைத் தடுப்பதற்கு கருணாநிதி ஒருதுரும்பையாவது தூக் கிப்போட்டாரா? ஆட்சேபனை தெரிவித்தாரா? எடுத்ததற்கெல்லாம் கடிதங்கள் எழுதினேன் என்று பட்டியல் போடுகிறவர் இது குறித்து ஏதாவது ஒரு கடிதம் எழுதியதாகச் சொல்ல முடியுமா?

இலங்கை அரசுக்கு இந்திய அர்சு ரேடார்கள் கொடுக்க இருக்கின்ற செய்தி வந்த போது அது தமிழர்களைக் குண்டு வீசிக் கொல்வதற்குத்தான் பயன்படும் என்று பதறித் தடுக்க முனைந்தாரா? 2007 இல் இந்தியா இலங்கைக் கடற்படை தகவல் பரிமாற்ற ஒப்பந்தம் செய்த போது இவர் அதைக் கண்டித்தது உண்டா?

இந்திய அர்சு, ஈழத் தமிழர்களை அழிக்க இலங்கை அரசுக்குச் செய்து வந்த உதவிகளை மேற்கொண்ட நடவடிக்கைகளை எழுத்து மூலமாகக் குறிப்பிட்டு இந்திய அரசைக் கண்டித்து இந்தத் துரோகத்தைத் தமிழ் இனமும் வருங்காலத் தலைமுறையும் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள் என்று எச்சரித்தும் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை நேரடியாகப் பல முறை சந்தித்துத் தந்த கடிதங்களைத் தொகுத்து குற்றம் சாட்டுகிறேன் என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் நூலாக நான் வெளியிட்டதற்காக என் மீது கருணாநிதி அரசு தேசத்துரோக வழக்கைத்தானே பதிவு செய்தது.

தமிழீழம் என்ற உயிர் மூச்சான இலட்சத்தியத்துக்காக சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் ஈழத்தில் நடப்பது என்ன? என்று நான் பேசியதற்காக அதே தேசத்துரோகக் குற்றச்சாட்டைத் தொடுத்து என்னைக் கைது செய்து புழல் மத்திய சிறையில் அடைத்தவர்.


1993 ஆம் ஆண்டு தி.மு. கழகத்தில் இருந்து என்னை நீக்க வேண்டும் என்று அவர் முடிவு எடுத்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் மீதுதான் பழியை சுமத்தினார். எனது அரசியல் முன்னேற்றத்துக்காக கலைஞர் கருணாநிதியை விடுதலைப் புலிகள் கொலை செய்யத் திட்டமிட்டார்கள் என்ற ஊர்ஜிதமாகாத மத்திய அரசின் உளவுப் பிரிவுத் தகவலைக் குற்றச்சாட்டாக ஆக்கி என்னைத் தி.மு.கழகத்தில் இருந்து நீக்கினார்.

விடுதலைப் புலிகள் மீது அல்லவோ அன்று கொடும் பழியைச் சுமத்தினார்?

எதற்கெடுத்தாலும் சகோதர யுத்தம்தான் ஈழத்தமிழர் வீழ்ச்சிக்குக் காரணம் என்று ஒருநாடக ஒப்பாரி வைக்கிறாரே. கோடிக்கணக்கான மக்கள் நெஞ்சில் அண்ணாவின் இயக்கத்தைச் சுடராக ஏற்றிய மக்கள் திலகம் எம். ஜி. ஆரை இவர் சகித்தாரா? விளக்க அறிக்கைக்கான கெடு முடிவதற்கு உள்ளாகவே அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து அல்லவா அவரை நீக்கச் செய்தார்?

கட்சியை, தலைமையை உயிருக்கும் மேலாக நேசித்து சர்வ பரித்தியாகத்துக்கும் சித்தமாக இருந்த என் மீது கொலைப்பழி சுமத்தியபோது அதை உண்மை என்று தொண்டர்கள் நம்பி இருந்தால் என்ன ஆகும்? எத்தகைய துன்பத்துக்கு அவன் ஆளாவான்? எத்தனை தலைமுறைகளுக்கு அவனும் அவனது குடும்பமும் இந்தப் பழியைச் சுமக்க நேரும்? என்று கடுகு அளவேனும் கருதியது உண்டா? மனிதாபிமானமோ மனிதநேயமோ அவர் மனதில் நிழலாடியது உண்டா?

புரட்சி அமைப்புக்களில் விடுதலை இயக்கங்களில் எதிர்ப் புரட்சியாளரை, ஊடுருவல் துரோகிகளை எப்படி நடத்தினார்கள் என்பதற்கு சரிதத்தில் ஏராளமான சாட்சியங்கள் உண்டு. பிரபாகரன் அவர்களின் உயிர் குடிக்கச் சதி செய்த மாத்தையாவை மாவீரன் என்றும் கிழக்கு மாகாணத்தில் கருணாவை வீரத் தளபதி என்றும் இவர்களையெல்லாம் பிரபாகரன் அழித்து விட்டார் என்றும் வசை பாடியது யார்? அதைவிடக் கொடுமை என்னவென்றால் இலட்சியத்துக்காகப் போராடும் வேளையில் களத்தில் இறந்த வீரர்களுக்குக் கல்லறைகள், துயிலகங்கள் கட்டுவதில் சக்தியையும் நேரத்தையும் வீணாக்கினார்கள் என்று புலிகளை ஏகடியம் செய்தவர் யார்?



பிரபாகரனைத் தன் மணிவயிற்றில் சுமந்த அன்னை பார்வதி அம்மையார் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெறத் தமிழகம் வந்தபோது தமிழ் நாட்டு மண்ணில் அவர் கால் எடுத்து வைக்கவும் அனுமதிக்காமல் வந்த விமானத்திலேயே மேலும் நான்கு மணி நேரம் திரும்பிப் பயணிக்கின்ற போது அந்தத் தாயின் உயிருக்கே ஆபத்து விளையக்கூடுமே என்ற அபாயத்தைப் பற்றியும் எள் அளவும் எண்ணிப் பார்க்காமல் விரட்டி அடித்த குற்றவாளி கலைஞர் கருணாநிதி.

உலகில் எங்கும் நடைபெற்றிராத இக்கொடுமையைக் கண்டித்து இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் போராட்டம் நடத்த முனைந்த என்னையும் அண்ணன் பழ.நெடுமாறன், விடுதலை இராசேந்திரன், ஆவடி மனோகரன், பாவலர் இராமச்சந்திரன், எம். நடராசன் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்தது மட்டும் அல்ல தனித்தனியாக நான்கு மத்தியச் சிறைகளுக்குப் பிரித்து அனுப்ப உத்தரவிட்டவரும் இந்தப் பெரிய மனிதர்தான்.

தமிழர் மனமெல்லாம் அணையாத சுடராக ஒளி வீசிக் கொண்டு இருக்கின்ற தியாக தீபங்களாம் முத்துக்குமார் உள்ளிட்ட 17 பேர் ஈழத் தமிழரைக் காக்க, யுத்தத்தை நிறுத்த, இந்திய அரசின் துரோகத்தைத் தடுக்க தீக்குளித்து மடிந்தபோது இவர் இரங்கல் தெரிவித்தது உண்டா? தனது மகன் பிறந்த நாளை பட்டு வேட்டி, பட்டுச் சட்டை, பட்டு பீதாம்பரத்துடன் இவர் கொண்டாடிக் கொண்டு இருந்த போது தியாகச்சுடர் முத்துக்குமாரின் உயிர் அற்ற சடலம் கொளத்தூரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் வீரவணக்கத்தை ஏற்றுக் கொண்டு இருந்தது. ஈழத் தமிழருக்காகப் பள்ளப்பட்டி ரவி தீக்குளித்த போது குடும்பச் சண்டையால் செத்தான் என்று கொச்சைப் படுத்தி அறிக்கை வெளியிட வைத்தவரும் இவர்தான். (தொடரும்)

# புனேயுடனான பரபரப்பு ஆட்டத்தில் மும்பை ஒரு ஓட்டத்தால் வெற்றி

(புனே)

ஐ.பி.எல்.போட்டித் தொடரின் 45-வது லீக் ஆட்டம் நேற்றிரவு புனேயில் நடை பெற்றது.

இந்த ஆட்டத்தில் கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் ஹர்பஜன் சிங் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

நேற்றைய போட்டியில் புனே அணியில் இரண்டு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன.

மார்லன் சாமுவேல்ஸ் நீக்கப்பட்டு ஜெஸி ரைடர் சேர்க்கப்பட்டிருந்தார்.

அசோக் டின்டாவும் நேற்றைய ஆட்டத்தில் விளையாடினார்.

மும்பை இந்தியன்ஸ் அணியில் திஸார பெரேராவும் பிரக்யான் ஓஜாவும் சேர்க்கப்பட்டிருந்தனர்.



நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ஹர்பஜன் சிங், முதலில் துடுப்பாட்டம் செய்வதாக அறிவித்தார்.

இதனையடுத்து அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக ஜேம்ஸ் பிராங்லினும் சச்சின் டெண்டுல்கரும் களமிறங்கினர்.

அவர்கள் நிதானமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர்.

பிராங்லின் 25 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து டெண்டுல்கருடன் சர்மா ஜோடி சேர்ந்தார். சர்மா வந்த வேகத்திலேயே ரன் அவுட் முறையில் வெளியேறினார்.

அடுத்து டெண்டுல்கரும் 34 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க மும்பை இந்தியன்ஸ் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 120 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

இதையடுத்து 121 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கியது புனே அணி.

மும்பை போலவே புனேயும் ஓட்டங்களைக் குவிக்க சிரமப்பட்டது.

விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் சரிந்ததன.

புனேயிற்கு இறுதியில் 19-வது ஓவரில் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

முனாப் பட்டேல் பந்து வீசினார்.

முதல் பந்து ஓட்டமில்லை.2-வது பந்து அகலப் பந்து, 2-வது பந்து ஒரு ஓட்டம், 3-வது பந்து ஒரு ஓட்டம், 4-வது பந்து - ஒரு ஓட்டம் 5-வது பந்து 4 ஓட்டம்.

இறுதிப் பந்து 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. ஆனால் பெற்றதோ 2 ஓட்டங்கள் இதனால் புனேயின் வெற்றிக் கனவு கலைந்தது.

மும்பை ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக லசித் மலிங்க தேர்வானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**

இரவு 8 மணிக்கு சென்னையில் நடைபெறும் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதுகின்றன.

# ரியல் மட்ரிட் 32ஆவது முறையாக ஸ்பெயின் தொடரை வென்றது

ஸ்பானீஷ் லீக் கால்பந்து போட்டியில் நட்சத்திர கால்பந்து அணியான ரியல் மட்ரிட் அணி, அத்லெடிகா பில்போ அணியை வீழ்த்தி நான்கு வருடங்களுக்கு பின்பு 32 ஆவது முறையாக பட்டத்தை வென்றது.



ஸ்பானீஷ் லீக் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி, அத்லெடிகா பில்போ அணியுடன் மோதியது.

ரியல் மட்ரிட் கால்ப் பந்து அணி ஆரம்பம் முதலே அசத்தலாக விளையாடியது. போட்டியின் 16 ஆவது நிமிடத்தில் கோன்சலோ ஹீகுவான் ஒரு கோல் அடித்தார். இதனைத் தொடர்ந்து 20ஆவது நிமிடத்தில் மெசட் ஓசில் மற்றொரு கோல் அடித்தார்.

முதல் பாதியில் ரியல் மட்ரிட் அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பாதியிலும் அதிரடியாக விளையாடிய ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியனோ ரொனால்டோ 50 ஆவது நிமிடத்தில் மூன்றாவது கோல் அடித்தார்.

பில்கோ அணியால் பதில் கோல் அடிக்க முடியவில்லை. போட்டியின் முடிபில் ரியல் மட்ரிட் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நேற்றுடன் 36 ஆட்டங்கள் ஸ்பானீஷ் லீக்கில் முடிந்துள்ளது. இந்த 36 ஆட்டங்கள் மூலம் ரியல் மட்ரிட் கால்பந்து அணி 94 புள்ளிகள் பெற்றுள்ளது.

இரண்டாவது இடத்தில் உள்ள பார்சிலோனா அணி 87 புள்ளிகள் மட்டுமே 36 ஆட்டங்கள் மூலம் பெற்றுள்ளது. மீதமுள்ள இரு ஆட்டங்களில் பர்சிலோனா அணி வெற்றி பெற்றாலும் பயனில்லை.

இதையடுத்து ரியல் மட்ரிட் அணி ஸ்பானீஷ் லீக்கில் 32 ஆவது முறையாக பட்டத்தை கைப்பற்றியுள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டிற்கு பிறகு தற்போது தான் ரியல் மட்ரிட் அணி ஸ்பானீஷ் லீக்கில் பட்டத்தை பெற்றுள்ளது.

# சிறையிலிருந்து விடுதலையானார் மொகமட் ஆசிப்



இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக இங்கிலாந்தில் ஒரு ஆண்டுகாலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் மொகமட் ஆசிப் பிரிட்டன் சிறையிலிருந்து விடுதலை ஆனார்.

ஆகஸ்ட் 2010 இல் மொகமட் ஆசிப், மொகமட் அமீர், சல்மான் பட் ஆகியோர் லோட்ஸ் டெஸ்ட் போட்டியில் சூதாட்டத்தில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ஆசிப் விளையாடுவதற்கு 7 ஆண்டுகள் தடை விதித்துள்ளது. இதனை எதிர்த்து அவர் மேல் முறையீடு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மொகமட் அமீர் 3 மாத சிறைத் தண்டனைக்கு பின்பு கடந்த பெப்ரவரி மாதம் விடுவிக்கப்பட்டார். பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவராக இருந்த சல்மான் பட் 30 மாத சிறைத்தண்டனையை இன்னும் அனுபவித்த வருகிறார்.

இவர்களை சூதாட்டத்தில் ஈடுபடுத்திய மஷர் மஜீத் என்ற சூதாட்டக்காரர் 32 மாத சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.

# போட்டியைக் காண 12 ராட்சத திரைகள்

ஐ.பி.எல் தொடரில் புனேவாரியர்ஸ், கொல் கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதும் லீக் ஆட்டம் கொல் கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், கொல்கத்தாவின் இளவரசன் என்றழைக்கப்படும் செளரவ் கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் மோதும் இப் போட்டியைக் காண ரசிகர்கள் ஆவலோடு உள்ளனர்.

இந்த போட்டிக்கான ரிக்கெட்டுக்கள் அனைத்தும் விற்றுத்தீர்ந்து விட்ட நிலையில், ரசிகர்களின் வசதிக்காக பெங்கால் கிரிக்கெட் சபையின் சார்பில் கொல் கத்தா முழுவதும் 12 இராட்சத திரைகள் அமைக்கப்பட்டு நேரடி ஒளிபரப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# சேவாக் ஓர் இயல்பான தலைவர் ; மஹேல



டெல்லி டேர்டேவில்ஸ் அணியின் தலைவர் விரேந்திர சேவாக் ஓர் இயல்பான தலைவர் என இலங்கை அணியின் தலைவரும் டெல்லி டேர்டேவில்ஸ் அணியின் வீரருமான ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

டெல்லி டேர்டேவில்ஸ் அணிக்காக இந்தப் பருவகாலத்தில் வீரேந்திர சேவாக் மிகச் சிறப்பான பணியைச் செய்துள்ளதாகவும் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

உலகின் மிகச்சிறந்த அணித்தலைவர்களுள் ஒருவராகக் கருதப்படும் மஹேல ஜெயவர்த்தன இறுக்கமான தருணங்களில் சிறப்பான முடிபுகளை எடுப்பதற்காக பெயர் போனவர். இந்நிலையிலேயே மஹேல ஜெயவர்த்தன இன்னுமொரு அணித்தலைவரைப் பற்றி சிறப்பான வார்த்தைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

வீரேந்திர சேவாக் மிகச்சிறந்த பணியைச் செய்துள்ளதாகக் குறிப்பிட்ட மஹேல இந்தத் தொடரின் வழியே அவர் சில மிகச்சிறந்த முடிபுகளை எடுத்துள்ளமையைத் தான் கண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அவரது முடிபுகள் மிகச் சிறந்த முடிபுகளைத் தந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வீரேந்திர சேவாக் ஓர் இயல்பான அணித் தலைவர் எனத் தெரிவித்த மஹேல இருபது-20 போட்டிகளில் சில விரைவான முடிபுகளை எடுப்பதற்கு சிறந்த தெளிவான மன நிலையுடன் காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வீரேந்திர சேவாக்குடன் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்குவது சிறந்த அனுபவம் எனத் தெரிவித்த அவர் டில்சான், சேவாக் போன்ற வீரர்களுடன் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்குவது இலகுவானது எனவும் தெரிவித்தார்.

டில்சான், சேவாக் போன்ற வீரர்கள் அடித்தாடும் இயல்புடைய வீரர்கள் ஆரம்பம் முதலே மற்றைய அணியைக் கட்டுப்படுத்தி ஆடுவதன் காரணமாக மறுபுறத்தில் ஆடும் வீரர் அவர்கள் துடுப்பெடுத்தாட வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதையே பிரதானமாக கொண்டிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



கவுரவ 'லெப்டினன்ட் கர்னல்' அந்தஸ்தில் உள்ள இந்திய அணி கேப்டன் தோனி, சென்னையில் உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாடமியின் பொன் விழாவில் பங்கேற்று பேசினார்.



புனேயில் நடந்த கிரிக்கெட் அருங்காட்சிய திறப்பு விழாவில் பங்கேற்க வித்தியாசமான 'ஹேர்-ஸ்டைலுடன்' வந்த இந்திய வீரர் சச்சின்.

# சம்பந்தன் சிங்கக் கொடி தூக்கி...

எதிர்க் கட்சிகளுடன்இணைந்து யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மே தினக் கூட்டத்தை நடத்தியிருந்தது.

இந்தக் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கியத் தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தேசியக் கொடியான சிங்கக் கொடியை உணர்ச்சி பொங்க கூட்ட மேடையில் நின்று அசைத்து சிங்கள பெரும்பான்மை இனத்தினரின் ஏகோபித்த வரவேற்பை பெற்றிருந்தார்.

எனினும் இதன்மூலம் தமிழ் மக்களின் மனங்களில் நீங்காத வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்தார்.

இந்த நடவடிக்கைக்கு அக்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சி உறுப்பினர்கள், இணையத்தளங்கள், யாழ். மாவட்டத்தில் உள் ஒரு சில ஊடகங்கள் கண்டனங்களையும் விமர் சனங்களையும் வெளிப்படுத்தியிருந்தன.

இதனால் பாரிய நெருக்கடிக்குள்ளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிங்கக் கொடியை அசைத்ததற்கு தமிழ் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோருவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், மே தினக் கூட்டத்தில் சிங்கக் கொடியை அசைத்ததன் மூலம் எமது கட்சி பல்வேறு தரப்பினரின் விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் உள்ளானது.இதைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளக்கூடியதுமில்லை.

இதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்க மன்னிப்பை தமிழ் மக்களிடம் கோருகின்றது.

அத்தோடு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எமது தலைவரிடம் சிங்கக் கொடியை கொடுத்து மேடையில் அசைக்க வைப்பது மே தினக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இல்லை.

இது எமக்கே தெரியாது. தற்செயலாக நடந்த ஒன்று. இவ்வாறு நடக்குமென்று எமது தலைவருக்குக்கூடத் தெரியாது.

திணிக்கப்பட்ட ஒன்றே அன்றி விருப்பப்பட்டு செய்ததல்ல. இதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மன்னிக்க வேண்டும்.

பலர் உயிர்த் தியாகம் செய்தது,பலர் போராடியது எங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காகத்தான்.

எனவே இது தற்செயலாக நடந்ததொன்று என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த சிங்கக் கொடி விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்களும் தமது கண்டனத்தை தெரிவிக்கும் போது, தான் ஒரு சிங்களப் பேரினவாதக் கட்சி என்பதை ஐக்கிய தேசியக் கட்சி மறுபடியும் நிரூபித்துக் காட்டிவிட்டது என்றனர்.

அத்தோடு கூட்டமைபு எதிர்க் கட்சியுடன் இணைந்து நடத்த இருந்த மே தினக் கூட்டத்தை நாங்கள் புறக்கணித்ததற்கு காரணமும் இதுதான். சிங்கள பேரினவாதக் கட்சி என்பதை இப்போது காட்டிவிட்டது ஐக்கிய தேசியக் கட்சி எனவும் மிகவும் கோபத்துடன் தெரிவித்தனர்.

இந்த மே தினக் கூட்டத்தில் எதிர்க் கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தியிருந்த மே தினக் கூட்டத்தை கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ இயக்கம், புளொட் என்பன ஏற்கெனவே புறக்கணித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

# தேசியக் கொடியை...

உறுப்பினர் சம்பந்தனின் மனமாற்றம் இலங்கையில் இடப்பெறப்போகும் புரட்சிகரமான இன நல்லிணக்கத்திற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். இது எனக்கு அளப்பரிய மகிழ்ச்சியை அளிக்கின்றது. அரசாங்கம் இதனை வரவேற்க வேண்டும்.

ஆனால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பது இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்பவே காணப்பட வேண்டும். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் ஊடாக பேச்சுவார்த்தைகளை நடத்தி கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதன் ஊடாகவே இனப்பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வை நோக்கி நகர முடியும். ஆனால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துகொள்வதற்காக அரசாங்கமோ, ஐக்கிய தேசியக் கட்சியோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது வேறெந்த அரசியல் கட்சிகளுமோ நிபந்தனைகளை விதிக்கக் கூடாது.

இவ்விவகாரத்தில் நிபந்தனைகள் விதிப்பதென்பது அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கு தடைகளை ஏற்படுத்தும். எனவே நிபந்தனைகளின்றி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் பங்குபற்றவேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றுவதன் மூலம் அரசியல் தீர்வு தொடர்பான ஆளும் தரப்பு மற்றும் எதிர்த் தரப்பினரின் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள முடியும். அவ்வாறான நிலைமை இல்லாமல் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் கண்டுவிட முடியாது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் சர்வகட்சிக் குழுவில் கலந்து கொண்ட கட்சிகள் மத்தியில் இணக்கப்பாடுகள் காணப்பட்டன.அதிகாரப் பரவாலாக்கல் தொடர்பான பெரும்பாலான விடயங்களில் ஜாதிக ஹெல உறுமயவும் இணங்கியது.

ஆனால் பொலிஸ்,காணி உட்பட சில விடயங்கள் தொடர்பில் மத்திய அரசாங்கத்துடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விவகாரம் தொடர்பில் இறுதித் தீர்வை காணமுடியாமல் போனதால் ஜாதிக ஹெல உறுமய சர்வ கட்சிக் குழுவிலிருந்து வெளியேறியது. எனவே இவை தொடர்பில் மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பேச்சுவார்த்தைகளை நடத்தி இணக்கப்பாட்டுக்கு வரமுடியும் என்பது எனது நம்பிக்கை.

அதிகாரத்தை பரவலாக்குவதற்காக அரசியலமைப்பில் பல் திருத்தங்களை மேற் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

மத்திய அரசாங்கத்தையும் பங்குதாரர்களாக்கிக் கொண்டு அதிகாரங்களை மாகாணங்களுக்கு பரவலாக்குவது தொடர்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்துள்ளார். (ந-8-11)

# மண்டைதீவில் 'பூமி பூஜை'

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள இராஜ கோபுரத்திற்கான பூமி பூஜை இன்று காலை 6.40 மணிக்கு இடம் பெறும்.

எதிர்வரும் யூன் மாதம் முதலாந்திகதி இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் திருப் பணியும் நடைபெறவுள்ளது. (ந)

# இரட்டைக் குடியுரிமை...

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் போட்டியிட முடியாது என்பதுடன் ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட முடியாது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் அரசாங்கத்தினுள்ள அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அமைச்சர் டளஸ் அழகப்பெரும உள்ளிட்டோர் அமெரிக்காவின் கிறீன் காட் குடியுரிமை பெற்றவர்கள் என்பதும் அத்துடன் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் அமெரிக்காவின் கிறீன் காட் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

# அரசுக்கும் கூட்டமைப்...

உறவு நிலவிவரும் நிலையில் அரசியல் விடயங்கள் தொடர்பிலேயே அவ்வப்போது விவாதிக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஹக்கீம் சந்திப்பதொன்றும் புதிய விடயமில்லை எனவும் கூறினார்.

அவசியம் ஏற்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் நேரடியாகக் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும். இடையில் எவரும் தேவையில்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தெரிவுக்குழுவில் சேரும்படி எம்மிடம் பேசுவதற்குப் பதிலாக அரசியல் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முயற்சிக்க வேண்டும். அவரால் இது முடியுமா என எனக்குத் தெரியவில்லை என்றார் சுரேஷ் பிரேமச் சந்திரன். (ந-8,11)

# ஜப்பானிய பிரதிப்...

விஜயம் செய்கிறார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் டி.எம்.ஜயரட்ண மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதுடன் ஜப்பானிய அரசாங்கத்தினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் சென்று பார்வையிடவுள்ளார்.

இதேவேளை இலங்கை வரும் ஜப்பானிய பிரதிப் பிரதமர் நாளை 5-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் வேலணைக்கு சென்று அங்கு ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் நடைபெறும் கருவாடு பதனிடல், இறால் வளர்ப்புத் திட்டங்களைப் பார்வையிடுவார். (ந-8;11)

# யாழ்ப்பாண மே தின...

கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் மாவை சேனாதிராசாவும் இரா. சம்பந்தனும் உரையாற்றியிருந்தனர்.

அதேசமயம் இந்தக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு மிகவும் முயற்சிகள் எடுத்திருந்த மனோ கணேசன் இந்தக் கூட்டத்தில் பேச அனுமதிக்கப்படவில்லை.

விஜயகலா மகேஸ்வரன்,யோகராஜன் போன்றவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்று ரீதியான துரோகத்தின் ஒரு கட்டமாகவே பார்க்க முடிகிறது.

நாங்கள் நல்ல பாடங்களை மே தினத் தில் கற்றிருக்கிறோம் என்றும் சிறிதரன் கூறினார்.

இந்த மே தினக் கூட்டத்தை விஜகலாவும் ஐ.தே. கவின் பிரதேச பொறுப்பாளர்களுமே ஒழுங்கு செய்ததாக ரணில் விக்கிரமசிங்கவும் அங்கு குறிப்பிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.(ந-8;11)

# ஆஞ்சநேயர் ஸ்வரூபத்திற்கு இன்று அடிக்கல் நாட்டு

(யாழ்ப்பாணம்)

இணுவில் மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலில் அமைக்கப்படவுள்ள அறுபது அடி ராஜகம்பீர வீர ஆஞ்சநேய ஸ்வரூபத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு இன்று காலை 9.40 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்ளும் அடியவர்கள் தங்கள் கைகளால் அடிக்கல் நாட்டும் அருட்பேறைப் பெறமுடியும் என ஆஞ்சநேய கோயில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ந-8)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 வகுப்பு ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரியில் உள்ள வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தரம் 5 ஆசிரியர்களைக் கலந்து கொண்டு தரம் 5 மாணவர்களின் மாகாண மட்ட புலமைப்பரிசிற் பயிற்சிக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.ஸ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார். (ந-9)

# பிக்கப் வாகனம்...

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் மல்லாகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் குளம்மங்கால் மல்லாகத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அ[illegible] தோனிமுத்து யூலியஸ் ஜெயரட்ணம் (வயது57) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப குடும்பஸ்தர் சைக்கிளில் சென்று கொண்டு இருக்கும்போது எதிரே வந்த இராணுவத்தினரின் பிக்கப் வாகனம் மோதியதில் இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-4)

# 4 அமைச்சர்கள்...

ஆகியோர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கமானவர்கள் என்ற போதிலும், இவர்கள் நாமல் ராஜபக்ச வழங்கிய பல பணிகளை புறக்கணித்து வந்ததால் ஜனாதிபதியின் கோபத்திற்கு ஆளாகி உள்ளனர்.

இவர்கள் குறித்த தகவல்களை சேகரிக்குமாறு அரச புலனாய்வு பிரிவினருக்கு ஜனாதிப[illegible] உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

NIRU
TUITION CENTRE
KONDAVIL
A/L 2014
கலை, வர்த்தக, கணித வகுப்புக்கள்
புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது
05.05.2012 சனி
நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் (8296)

தவறிவிட்டது
கந்தசாமி நிறஞ்சன் ஆகிய எனது 783264765V எனும் இலக்கத்தை உடைய தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய எனது பேர்ஸ், யாழ் நகருக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.
தொடர்புகளுக்கு:- 0772536584 (8288)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2014
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 05-05-2012 சனி காலை 8.00மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும் இறுதி பிரிவு

புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். (பெருமாள் கோவிலுக்கு அருகாமை)
A/L 2014
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 05-05-2012 சனி காலை 8.00மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும் இறுதி பிரிவு

பாரம்பரிய பட்டுக்களின் பரந்த சோலை
காவேரி சில்க்ஸ்
இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரம்பரிய பட்டுக்கள், புத்தம் புதிய நவீனரக சல்வார்கள், பஞ்சாபிகள் மற்றும் அனைத்து தரப்பினருக்குமான ஆடை வகைகளும் நியாயமான விலைகளில் கிடைக்கும் ஒரே இடம்.
48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
திருமணப்பட்டுப் புடவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
தொ.பே:-021 222 2333



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.